73

# ஜகன்மோகினி.

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்



REGISTRAR ... OCT 19.. MADRA

## "உணர்ச்சி வெள்ளம்"

73

(தொடர்ச்சி)

### மற்ற விசேஷ அம்சங்கள்

ரேடியோ டயரி. வெள்ளித்திரை.
வனிதா மண்டலம். பாலர் பகுதி.
விகடவெடிகள். அனுபவநீதி ஸாரம்.
வாணியின் பிரஸாதம். (கீர்த்தனாவளி).

| ஆத்மசக்தி | மாதவமணி |
|---|---|
| ரூ. 1-4-0. | ரூ. 0-4-0. |

அழகிய இரண்டாம் பதிப்பு வெளியாகிவிட்டது.

ஏப்ரல் மாதத்தில்
பரிசு பெற்ற சந்தாநேயர்கள்.
ஜூன்மாதப் பரிசு திட்ட விவரங்கள்.

மே 1940

உணர்ச்சி வெள்ளம்
[தொடர்ச்சி]

அணா 2

# "ஆத்மசக்தி" புதிய பதிப்பு

உள் நாட்டினர் ரூ. 1¼ }
வெளி நாட்டினர் 2 ஷிலிங் }
போஸ்டல் ஆர்டர் க்ராஸ் செய்து இன்றே அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.




என்ன ஆனந்தம்!

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் 17 | விக்ரம ௵ சித்திரை ௴<br>மே 1940 | இதழ் 5 |
|---|---|---|

## மனமே!

இராகம் : கேதாரம். தாளம்-த்ரிபுடை.

பல்லவி

மாயா மோகத்தை விடு மனமே!
தீயவழியில் செல்லாதிரு தினமே. (மா)

அநுபல்லவி

பேயாய்த் திரிந்து பிணியா லலைந்து
நாயாய்க் குரைத்து நசித்திடச் செய்திடும். (மா)

சரணம்

காலன் வந்தழைத்திடும் காலையில் கண்ணீர்
மாலை யுதிர்த்திடில் மயங்குவனோ நமன்
சீலமுடன் சத்ய சிந்தனைசெய்து கோதா
லோலன் பதம்பணிந்து காலனை வென்றிடு. (மா)

ஷை கீர்த்தனையினுடைய ஸ்வரத்திற்கு உள்ளே 15-வது பக்கம் பார்க்கவும்.

REGISTRAR OF BOOKS
2-OCT 1940

## முக்கிய அறிவிப்பு

1. எற்கெனவே வெளிவந்ததோ, ஒருவருடைய காப்பிரைட்டை பாதிக்கக்கூடியதோ, தனித்த நபர்களை பாதிக்கக் கூடியதோ, அல்லது ஆக்ஷேபகரமான விஷயங்களோ முதலியன இல்லாது சுத்தமான கற்பனையில், சிறந்த கருத்துக்களைக்கொண்ட சிறுகதை, கட்டுரைகள் முதலியன நம் சந்தாநேயர்கள் அனுப்பினுல், திருப்திகரமாக விருப்பதைப் பிரசுரிக்க ஆக்ஷேபனையே யில்லை.

2. ஷை அறிவிப்புக்கு முரணாக யாராவது பிறர் எழுதியுள்ளதை மொழிபெயர்த்தோ, தழுவியோ, அல்லது காபிரைட்டை பாதித்தோ நமக்கு எழுதியனுப்பி நாம் அதை யறியாது பிரசுரித்தால், எழுத்தாளரின் ஷை குறைகளுக்கோ, குற்றங்களுக்கோ, நாம் ஜவாப்தாரியல்ல.

—பத்திராதிபர்.

1—5—40

# க்ஷேமலாபங்கள்

அன்பர்களே! ஆத்மசக்தியின் இரண்டாவது பதிப்பு வெளியாகிவிட்டது. சென்ற இதழில் இரண்டாம் பதிப்பு தயாராகிறது என்று நாம் தெரிவித்ததை சில நேயர்கள் ஆத்மசக்தியின் இரண்டாம் பாகம் ஒன்று தயாராவதாய் நினைத்து விலை என்ன? எத்தனை பொம்மைகள் இருக்கின்றன? என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்களைப்போல் இன்னும் யாராவது நினைத்திருந்தால் அவர்களும் அறியும் பொருட்டு இதில் பதில் எழுதுகிறேன். "ஆத்மசக்தி" ஒரே நாவல்தான். அதன் முதல் பதிப்பு முற்றும் செலவாகி இரண்டாம் பதிப்புதான் அச்சாகியிருக்கிறது என்பதைக் கவனிக்கவும்.

பாலர் பகுதிக்கான கதைகளும், சிறு கதைகளும் அன்பர்கள் அனுப்பியிருக்கிறார்கள். பாலர்களுக்கான கதையில் அதன் ஜீவநாடியாக ஓர் உயர்ந்த நீதி அமைத்து எழுதுவதே அதன் முக்கியமாகும். அதேபோல் சிறு கதைகளுக்கு உள்ளாழ்ந்த கருத்தை நீதியுடன், ஜீவகளை ததும்ப அமைத்து நல்ல நீரோட்டமான நடையில் ரஸிக்கும்படி எழுதவேண்டும்.

நமக்கு சிறுகதை என்ற பெயரில் வந்துள்ளவைகள் பெரும்பாலும் கருத்தும் கதையின் அமைப்பும் இல்லாது வெறும்கட்டுரையைப்போலிருக்கின்றன. இவைகளை மாற்றி எழுதி பிரசுரிப்பதென்பது ஆகாத காரியம். அம்மாதிரி செய்வதில் எழுத்தாளர்களின் எழுத்தும் விருத்தியாகும் மார்க்கமில்லாதுபோய்விடும். ஆகையால் அம்மாதிரியுள்ளவர்களின் கட்டுரைகளைத் திருப்பியனுப்பியிருக்கிறோம். அவர்களுடைய இலக்கிய விருத்திக்காகவே நாம் இதை எடுத்துக் கூறுகிறோமேயன்றி வேறல்ல. நேயர்கள் மன வருத்தப்படாமல் தயவு செய்து நன்றாக எழுதி யனுப்பவேண்டுமாய்க்கோருகிறேன். அப்படி எழுதும்யாவும் சுத்த கற்பனையாகவே இருக்கவேண்டும் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன்.

தங்களது கதைகளோ, கட்டுரைகளோ நமது மோகினியில் வெளிவரவேண்டும் என்கிற அவா பெரியவர்களுக்கு மட்டுமின்றி பள்ளியில் பயிலும் சிறு மாணவர்களுக்கும் அதிகமாக இருக்கிறது என்பது நமக்கு இப்போது நன்கு தெரியவருகிறது. இவ்விதழில் சிறுவன் முருகையன் எழுதியுள்ள சிறு கதையை குழந்தைகளுக்கென்றே பிரசுரித்திருக்கின்றோம். அதைப் படிக்கும் சிறுவர்களும் தமது கற்பனாசக்தியை உபயோகித்து சிறுகதைகள் எழுதி அனுப்பினால், கூடியவரை நன்றாயிருப்பவைகளைப் பிரசுரிக்க முயற்சிக்கிறோம். புது எழுத்தாளர்களை முன்னுக்குக்கொண்டு வருவதே நமது நோக்கம்.

மாதவமணி புதிய பதிப்புக்கு நேயர்களளித்த வரவேற்புக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் சகோதரி,

வை. மு. கோ.

1—5—40.

183041

# வனிதா மண்டலம்

வை. மு. கோ.

## அக்கால அதிசயம்—இக்கால அலக்ஷியம்

**கல்யாணி** :—மங்களம்! என்ன ஆச்சரியம் பார்த்தியா? நம்ப சுப்பிணி பெண் லலிதாவுக்கு இந்த மாதந்தானே கல்யாணமாச்சு. இன்றைக்கு கணவனோடு டில்லிக்குத் தனியாய் தைரியமாய்க் கிளம்பிவிட்டாள். தனிக் குடித்தனமும் செய்யப் போறாளாமே! எனக்கு ஆச்சரியம் தாங்கலேம்மா.

**மங்களம்** :—கல்யாணீ! நீ இன்னும் கர்நாடகப் பேர்வழியாகவே இருக்கிறாயே! நீ இப்போது காண்பது நாற்பதாவது வருஷம் என்பதை மறந்துவிட்டாயா. அக்காலத்து அதிசயமெல்லாம் இக்காலத்து அலக்ஷியமாக வல்லவோ இருக்கிறது. அதேபோல் அக்காலத்து அலக்ஷியமான விஷயங்கள் இக்காலத்து அதிசயமாயிருக்கின்றன. நீ புக்ககம் போகும்போது அழுத அழுகை இன்னமும் மறக்கவில்லை. உன்னைச் சமாதானப்படுத்த எத்தனை பேர் வேண்டியிருந்தது. நீ அழுது அழுது உன் முகம் வீங்கி கண்கள் சிவந்து உன்னுடைய அவதார சேர்வை இருந்ததை நினைத்தால் இப்போதும் சிரிப்பாயிருக்கிறது இல்லையா!

**க** :—அதென்னவோம்மா! புக்காம் சென்று ஆறுமாதம் வரையில்கூட என் உடம்பு நடுக்கல் வாங்கவே இல்லை. இப்ப நினைத்தாலும் பயமாத்தான் இருக்கு. புருஷன் முகத்தை நேரே பார்த்திருப்பேனா! அடேயப்பா! என்ன பயம்; எத்தனை வெக்கம்; அதைக்கண்டு பரிகாஸம் செய்யக்காத்திருக்கும் கூட்டம் எத்தனை; இக்காலந்தான் தலை கீழாய்விட்டதே! லலிதா புருஷனோடு வெகு தைரியமாய்க் கடைக்கெல்லாம் போய் சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்த ஜோரை என்ன சொல்வேன்போ! மாமியாரும் மருமகளும் தோள்மேல் தோள்போட்டுக்கொண்டதுபோல் நிற்கிறார்கள். எங்கமாமியார் எதிரில் நான் தாராளமாக நிற்கமுடியுமா? நான் நாலு பிள்ளை பெத்தபிறகுகூட ஒத்தரும் இல்லாத சமயத்தில்தான் மாமியாருடன் சற்று பயப்படாமல் பேசுவேன்.

**ம** :—உன்னுடைய கதையும் என்னுடைய கதையும் இப்போது பயித்தியக்காரத்தனமானது என்றல்லவா பரிகஸிப்பார்கள். அக்காலத்தில் பெரியவர்களெல்லாம் யாத்திரைக்குப்போவதென்றால் பெரிய தடபுடலாய் ஊரே ஒன்று பட்டுவிடும். எங்க பாட்டி யாத்திரை செய்தது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அவள் யாத்திரைப்போவதற்கான பிரயத்தனமும் மனிதர்களை சேர்க்கும் விநோதமும், பணம் சேகரிக்கும் வேடிக்கையும், சாமான்கள் திரட்டிக்கட்டும் வைபோகமும் அக்காலத்தில் பெரிய ஆச்சரியமாயிருந்தது. சுமார் வருடக் கணக்கில் பிரயத்தனங்கள் நடக்கும். யாத்திரைக்குக் கிளம்புவதென்றால் குறைந்தது 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் கிளம்புவார்கள். போகமுடியாத பாட்டிகளின் அழுகையும், ஆகாத்தியமும் அவர்கள் வீட்டில் படும் அமர்க்களமும் சொல்லமுடியாது. யாத்திரை சென்று வந்தவர்களைப் பார்க்கும் குதூகலக்கூட்டத்தின் கொண்டாட்டமோ! அப்பப்பா! தடபுடல்தான். யாத்திரை செய்துவிட்டு வந்த

வர்களைச் சேவிக்கக்காத்திருப்பார்கள். அவர்களும் தாங்கள் ஏதோ வைகுண்டபதவியையே எட்டிப்பிடித்துவிட்டு வந்ததாய் எண்ணித் தாங்கள் சென்ற ஊர்களின் வைபவத்தையும், ஸ்வாமி தரிசன மகாத்மியத்தையுங் கூறி கல்கண்டும் உலர்ந்த துளஸியும் குங்குமமும் பிரஸாதம் கொடுப்பார்கள். அதற்குப் போட்டியிடுபவர் எத்தனைபேர் தெரியுமா ?

க :—ஆமாம் மங்களம்! எங்க சொர்தக்காரப்பாட்டி யாத்திரை செய்து விட்டு வந்தாள். அந்தந்த ஊரைப்பத்தி என்ன வர்ணித்துச் சொன்னுள் பாரு. எனக்கு இன்னமும் ஞாபகமிருக்கிறது. ஸ்ரீரங்கத்துக் கோயிலில் கிளிமண்டபத்தில் 'கட்டியிருந்த' கிளிகளெல்லாம் கொள்ளைப் பேச்சு பேசுமாம். யார் யாருக்கு என்னென்ன பலன் என்று ஜோஸ்யம்போல் கூட சொல்லுமாம். அவள் பெருமையாய்ச் சொல்லிக்கொண்டாள்.

ம :—கல்யாணி! ஸ்ரீரங்கத்தை அக்காலத்து ஜனங்கள் பார்ப்பதே வெகு அபூர்வம். அக்காலத்தில் அத்தனை அதிசயமாயிருந்தது. கிளி ஜோஸியம் சொல்லியதாகப் பாட்டிசொன்ன புளுகு மூட்டை அக்காலத்தில் அதிசயமாயிருந்தது. கபடற்ற ஜனங்கள் நம்பினர்கள். இக்காலத்தில் முதலில் நீ நம்புவாயா ? சொல்லு. அதுமட்டுமா! எங்கப் பாட்டியின் சினேகிதையான அப்புச்சிப் பாட்டி வடதேச யாத்திரை செய்துவந்தாள். பம்பாயில் ஒவ்வொரு கொசு யானை யத்தனை பருமன் பறக்கிறது. ஆனல் அது பாபாத்மாக்களை மட்டும் தான் கடிக்கும். புண்ணியாத்மாக்களைச் சுற்றிவந்து ஓடிவிடும் என்ருள். காசியில் இருப்பவர்கள் நூறு வயதுக்குக் குறைந்து சாவதே இல்லை. நம்ம ஊரில்தான் சின்ன வயசில் சாகிருர்கள். அங்கு எல்லோரும் சிரஞ்சீவிகள்......அலகாபாத்தில் 'சமுத்திரத்தின் ஜலம்' அசல் பால் போலிருந்தது. பாற்கடல் என்ற பெயரே அங்குதானுண்டாகியது" என்ருள். அக்காலை யாத்திரைப் போவதென்ருல் பிரம்ம பிரயத்தனம். அப்படித் துணிந்து செல்கிறவர்களில் சென்ற அத்தனைபேரும் அப்படியே திரும்பி வரமாட்டார்கள். இக்காலத்தைப்போல் வசதிகள் இல்லாததால் கஷ்டப்பட்டுச் சாவார்கள். ஆசாரக் குடுக்கைகள் பாடுதான் திண்டாட்டத்திலும் திண்டாட்டம். இக்காலத்தில் இந்த மலைப்புளுகை யாராவது நம்புவார்களா ? எத்தனை நாகரீக சௌகரியங்கள்; எத்தனை ஸ்பெஷல் புகைத்துடர் வண்டிகள்; எத்தனை பேர்கள் நினைத்தவுடன் ஊரெல்லாம் சுற்றிவிட்டு வந்துவிடுகிருர்கள். போதாக் குறைக்கு ஆகாய விமானம் இப்போது வந்தாலும் வந்தது. ஒரு மாதம் பிரயாணம் செய்யக்கூடிய இடங்களை ஒரு வாரத்திற்குள் முடித்துவிடும் சௌக்கியம் ஏற்பட்டுவிட்டது. பட்டிணியோ, பசியோ கொண்டு அவஸ்தைப்படவேண்டாம். கண்டவிடமெல்லாம் ஓட்டல்கள் இருக்கின்றன. நடந்து செல்வதும் மாட்டுவண்டியில் சென்று உடம்பு நரம்பு அறுந்து அவதிப்படுவதும்போய் மோட்டார் பஸ்ஸுக்கள் வந்துவிட்டன. அக்காலத்தில் யாத்திரை என்ருல் மகத்தான அதிசயம் ; இக்காலத்தில் அதே யாத்திரை மிகவும் அலக்ஷியமாகிவிட்டது.

க :—வாஸ்தவந்தான்! அந்த ஊர்களின் மனிதர்கள் அப்படி இருப்பார்கள். இப்படி இருப்பார்கள். கோயில் அத்தனை பெரிது. குளம் இத்தனை பெரிது என்றெல்லாம் சொல்ல நான்கூடக் கேட்டிருக்கிறேன். உண்மையில் முன்பு கூறிய கட்டுக்கதைகளை இப்போது நம்பத்தான் முடியாது. அது அதிசயமாயும் இல்லை.

ம :—அதுமட்டுமில்லை கல்யாணி! அக்காலத்தில் படிப்பு வசதி பெண்களுக்கு அடியோடு கிடையாது. எதையும் நம்பியே இன்புற்றார்கள். இக்காலத்திலோ நாம் ஜென்மாந்திரத்திற்கும் கண்ணால் பார்க்கமுடியாத தேசங்களை எல்லாம் பூகோளத்தில் பார்த்துப் படிக்கலாம். போதாக் குறைக்கு சினிமாக்கள் வந்து சகல ஊர்களையும், தேசங்களையும் வெகு எளிதில் பார்க்கும்படிச் செய்துவிட்டன. குழந்தைகள் முதல் படித்தும், பார்த்தும் விஷயங்களை யறிந்துவிட்டார்கள். இனிமேல் நம்பிக்கை எப்படி வரும். இன்னும் கேட்கப்போனால் குழந்தைகள் முதல் "இது சரியில்லை. அது சரியில்லை. அலகாபாத் டில்லிக்கு இத்தனை மைல் தூரத்தில்தான் இருக்கிறது....பஸிபிக் சமுத்திரத்தின் நீளம், அகலம், ஆழம் இத்தனை. அதன் பக்கத்தில்தான் இன்னென்ன தீவுகள் இருக்கின்றன" என்றெல்லாம் பேசும் காலமாகிவிட்டதே. இப்போது நீ ஆச்சரியப்படுவதுதான் ஆச்சரியமாயிருக்கிறது.

க :—அதென்னமோம்மா! இக்காலத்தியவர்களைப் பார்த்துப் பழகினாலும்கூட லவிதாவின் பிரயாணம் எனக்கு அதிசயமாகத்தான் தோன்றுகிறது.

ம :—இது கிடக்கட்டும்; அக்காலத்தில் யாராவது பிரஸவத்திற்கு ஆபத்தாகி ஒரு வெள்ளைக்கார துரைசானி டாக்டர் வந்துவிட்டால் ஊரே ஒன்றுபட்டுப் போய்விடும். ஒரு வீட்டுப் பெண்பிள்ளையாவது வீட்டில் வேலையே செய்யாமல் குழந்தைகளையும் கவனியாமல் அடுப்பும் மூட்டாமல் அந்த வீட்டில் குழந்தை பிறந்து அதைக் கண்ணாரக் கண்டு துரைசானியின் அழகைப் பார்த்து அவள் பேசுவதில் மோகித்து அவளை வீட்டுக்கு அனுப்பும் வரையில் அந்த வீட்டைவிட்டுப் போகமாட்டாள். வெள்ளைக்கார டாக்டர் என்றால் அத்தனை அதிசயம். அவள் கையழகைப் பார்த்தாயாடி! அவபேசர அழகைக் கேட்டயாடி! என்ன வெளுப்பு, என்ன அழகு, அவள் வந்ததும் வாரததும் பரபரன்னு வேலே செய்த சவரனையும், மகாலக்ஷ்மியைப் போலே இருந்தது. சரசரன்னு குழந்தையை நமக்குக் காட்டிட்டாளே!" என்று மூக்குமீது விரலை வைத்து ஆச்சரியப்படுவார்கள் அந்த ஆச்சரியப் புசல்காற்று ஒய்வதற்கு ஒரு வருஷங்கூட ஆகும். மகாலக்ஷ்மியை இவர்கள் பார்த்தவர்கள் போல் பேசுகிறார்கள். வெள்ளைக்கார துரைசானி என்றால் என்ன அதிசய மோகம். அவளையே சுத்தி வளைத்துக்கொண்டு பார்க்கும் பார்வையின் புதுமைக்கூட்டம் இப்போது உனக்குக் கிடைக்குமா! சில பயித்தியங்கள் அந்த வெள்ளைக்கார துரைசானியின்மேல் கொண்ட மோகத்தில் அவள் பேரையே குழந்தைக்கு வைக்கும் முறையில் 'துரைசானி' 'துரையம்மா' 'துரைச்சி' 'துரை' என்றெல்லாம் அழைத்ததைநான்கண்ணாரக்கண்டும்கேட்டுமிருக்கிறேன். இன்று நிலைமையைப் பாரேன். இடறி விழுந்தால், லேடி டாக்டர்கள். வெள்ளைக்காரரைவிட நமது பெண் மணிகள் அதிகமான அழகாய் பிரகாசிக்கிறார்கள். இப்போது அதே பாட்டிமார் பார்த்தாலும் அதிசயப்படமாட்டார்கள் அல்லவா? அந்த துரைசானிக்குத் நம் பாஷை தெரியாவிட்டால் கூட அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தை வராதா என்று எங்க பாட்டி ஏங்குவாள். இங்கிலீஷ் பாஷையாவது இக்காலம் போல் அக்காலத்தில் எல்லாக்ராமத்து புருஷர்களுக்கும் தெரியுமா! அதுவும் ஸைபர். அந்தம்மாள் தஸ்புஸ் என்று சொல்வதை எல்லோருக்கும் பொதுவாய் அர்த்தமாகும் அபூர்வபாஷையாகிய ஜாடையில்தான் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தம்மாள் 'ஹாட் வாட்டர்' என்றால் அதற்கு என்ன

செய்வது. கையில் சூட்டைப் பார்த்து இதுதான் என்று தலையசைப்பார்கள். இப்போது சின்ன பெண்கூட தஸ்புஸ், டம்டிம் என்று தைரியமாகப்பேசி வெள்ளைக்காரியில்லை, அவளுடைய பாட்டி இல்லை, எல்லோரையும் ஜெயித்துவிடுகிறுள்.

க :—மங்களம் ! உன் வாயிக்கு சக்கரைதான் போடவேண்டும். எங்க குஞ்சம்மா பிரஸவித்தபோது அவளே லேடி டாக்டரிடம் பேசி சகல காரியத்தையும் எங்களுக்குத் தெரிவித்தாள். நான் அசட்டுப் பிசட்டுனுதான் நின்னேன். காலம் என்ன அழகான மாறுதல்களுடனும் நாகரிகமாயும் மாறி வருகிறது. ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

ம :—அதுமட்டுமில்லையே! அக்காலத்தில் பெரிய பணக்காரர்கள் வீட்டுக் கல்யாணத்தில் தான் உயர்ந்த முறையில் சீர் வரிசைகளும், பக்ஷணங்களும், பலகாரங்களும், சமையல் வகையராக்களும் செய்வார்கள். ஏழை பந்துக்களும் சுற்றத்தார்களும், ஊராரும் அந்த சமயத்தில் அந்த சாப்பாடும் பலகாரமும், பக்ஷணமும் தேவாம்ருதமாக எண்ணிப் புசித்து மகிழ்வார்கள். தலை முறைக்கும் அதன் பெருமையைப்பற்றிப் பேசுவார்கள். மறுபடியும் எப்போது இம்மாதிரி கல்யாணம்வரும் என்றும் ஏங்குவார்கள். இக் காலத்தில் இடறி விழுந்தால் காப்பி ஹோட்டல், மிட்டாய்க் கடை முதலியன உண்டாகிவிட்டதால் பழய பதார்த்தங்களையே சில கலர்களைப் போட்டுச் செய்து உருவங்களை மாற்றி வாசனைகளைச்சேர்த்து புதியபுதிய பெயர்களை வைத்து தடபுடல் செய்து விடுகிறுர்கள். பிச்சைக்காரர்கள் கூட ஒரு அணு கொடுத்து வாங்கித் தின்று இன்புற்று சுவை யறிந்துவிடுகிறுர்கள். வீடுகளில் கல்யாண பக்ஷணங்கள் என்ன உயர்ந்ததாகச் செய்தாலும் இப்போது அதிசயப்படுவதில்லை. "ஓட்டலில் செய்வதுபோல் விழவில்லை. யூஸ்லெஸ்" என்று நிர்த்தாக்ஷிண்யமாய் இலையில் எறிந்துவிடுகிறுர்கள். ஐயோ பாவம் ! இதைச் செய்வதற்கு அவர்கள் எத்தனைப் பணச்செலவு செய்திருப்பார்கள்! அக்கால அதிசயம்.இக்கால அலக்ஷியங்களில் இதுவும் ஒன்றல்லவா !... இன்னும் இருக்கிறது சொல்லுகிறேன் கேளு...

க :—அடடா ! மறந்தே போய்விட்டேனே. பேச்சு ஸ்வாரஸ்யத்தில் மணி போவதே தெரியவில்லை. எங்க மச்சினர் இன்று ஊரிலிருந்து வருகிறுர். ஆத்துக்குப் போய் சீக்கிரமாய் டிப்பன் காப்பி செய்யணும்...மங்களம்! நேரமாகிறது. நாளைக்கு மிச்சத்தை வைத்துக்கொள்ளலாம்... நான் வரட்டுமா !...

ம :—இரு ! இரு. குங்குமம் இட்டுக்கொண்டு வெத்திலைபாக்கு வாங்கிக் கொண்டு போ. இன்று வெள்ளிக்கிழமையல்லவா !

# கடவுள் தண்டனை

## (குழந்தைகளுக்காக சிறுவன் A. முருகையன் எழுதியது.)

கடவுளே! முருகா! நீதான் காப்பாற்றவேண்டும். எந்தப் பாபியோ இக் குழந்தையின் பிதாவாகிய வனராஜனை வஞ்சகமாகக் கொன்று விட்டான். அக்கொலைபாதகனை தண்டிப்பாய்!...குழந்தையோ பால் மணம் மாருத பச்சைக் குழந்தை. இவ்வரசு உரிமையை யார் வகிப்பது? எனக்கொன்றும் தெரியவில்லை. எல்லாம் உனது பாரம்; எல்லாம் உனது செயல்; நீ மேட்டில் விடுவாயோ பள்ளத்தில் தள்ளுவாயோ எனக்கு தெரியவில்லை'' என்று தினமும் சுப்ரமணியர் படத்தின் முன் நின்று வேண்டிக்கொள்வாள். மந்திரிகள் இக் குழந்தையை சிம்மாசனத்தில் அமர்த்தி அவர்களே நீதி தவருது அரசு செலுத்தி வந்தார்கள். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. தக்கப்பருவம் வந்ததும் முடி சூட்டி மகிழ்ந்தார்கள். அவன் அரசனுனதும் தெய்வங்களுக்கு பலியிடுதல், கள் குடித்தல் முதலிய கெட்ட வழக்கங்களை ஒழித்ததும் அல்லாமல், திருடர்களையும் பொய் பேசுவோர்களையும் கடுந்தண்டனை செய்து வந்தான். ஒருநாள் ஜனங்களின் வேண்டுகோளின்படி மிருக துன்பத்தை தவிர்க்க வேட்டைக்குப் புறப்பட்டான். வேட்டை முடிந்து கடைசியாக ஒரு மானின்மேல் குறிவைத்து ஒரு அம்பு எய்தான். அக் குறித் தவறி "ஐயோ நான் செத்தேன்'' என்ற குரல் கேட்க அரசன் அக் குரல் கேட்ட திக்கை நோக்கி அவ்விடத்தை அடைந்தான். அங்கு ஒரு கிழவன் ரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டு இருப்பதைப் பார்த்து மனம் துடித்து "ஐயா பெரியவரே! அடியேன் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்'' என்று சாகும் தறுவாயில் இருந்த அக் கிழவனைக் கேட்க அக் கிழவன் 'நீ என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய காரணம் இல்லை. இதுவரையில் உலகத்தில் ஒருவருக்கும் தெரியாமல் இருந்த ஒரு ரகசியத்தை நான் இப்பொழுது சொல்லப்போகிறேன். நான்தான் இதே இடத்தில் உன் தகப்பனைக்கொன்ற பாவி. அவனுடைய புத்திரனுகிய நீ தெரியாமலும் வேண்டுமென்று செய்யாமலும் பழிக்குப் பழிவாங்கி இருக்கிருய். நான் உன் தகப்பனை வஞ்சகமாகக் கொன்று அரசுரிமை வசிக்கநினைத்தேன். எனது கெட்ட எண்ணம் கெடுதலாகவே முடிந்தது. இது கடவுள் தண்டனை. கடவுள் நியாயமுள்ளவர்' என்று மோண மொணத்துக்கொண்டே இறந்துபோனுன். சுற்றி இருந்தவர்கள் எல்லாரும் தெய்வத்தை பயபக்தியுடன் துதித்துநின்ருர்கள்.



# விகடவெடிகள்

(நேயர்களின் கற்பனை குண்டுகள்)

1. ஏழை:—ஐயா! நான் ரொம்பவும் ஏழை. ஏதாகிலும் பிச்சைகொடுங்கள்.

பணக்காரன் :—நீ "ஏற்பது இகழ்ச்சி" என்று எங்கும் கேள்விப்பட்டதில்லையா ?

ஏழை :—ஐயா ! நீர் "ஐயமிட்டு உண்" எனப்படித்ததில்லையா ?

கே. சிங்காரவேலு, ஆண்டர்ஸன்பெட்.

2. புருஷன் :—வாசலில் யாருடனோ ஒருமணி நேரமாகப் பேசிக்கொண்டிருந்தாயே யார் அது ?

மனைவி :—அடுத்த வீட்டுக்குப் புதிதாகக் குடிவந்த அம்மாமிதான் "உள்ளே வந்து பேசப் பொழுதில்லை; நின்றபடி ரெண்டு வார்த்தைசொல்லிவிட்டுப் போறேன்" என்று வாசலோடே பேசிவிட்டுப் போய்விட்டாள்.

என். பஞ்சாபகேசன், ஊர்காம்.

3. வஞ்சக மில்லாதவர் :—தங்களைச் சந்தித்ததுபற்றி ரொம்ப சந்தோஷம். தங்களைப்பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன்.

வந்தவர் :—என்ன ஓய் ! என்ன கேள்விப்பட்டீர் ? நீர் அவைகளில் ஒன்றையாகிலும் ரூபிக்கமுடியுமா ?

4. முதல்வன்:—இம்மாதிரி இனிமேல் என்னிடம் பேசாதே. பேசினால் மண்டையை உடைத்துவிடுவேன்.

மற்றவன் :—"இதோ பேசுகிறேன்" என்று வைத்துக்கொள்.

முதல்வன் :—"இதோ உடைத்துவிட்டேன்" என்று வைத்துக்கொள்.

எம். ராஜமாணிக்கம், கப்பளாங்கரை.

5. உபாத்தியாயர் :—டே கிட்டு! 'நல்லது' என்ற வார்த்தையைக் கொண்டு மூன்று வாக்கியம் சொல்லு பார்ப்போம் ?

கிட்டு (மாணவன்) :—பையன்கள் இஷ்டம்போல் வருவது 'நல்லது'

உபா :—(கோபமாக) ஏறு பெஞ்சியின்மேல். அடுத்தவன் !

அடுத்தவன் :—உபாத்தியாயர் பையன்களை இம்சை செய்யாமல் இருப்பது 'நல்லது'

உபா :—(ஒரு அடி அடித்து) அடுத்தவன் சொல்லு !

அடுத்த :—உபாத்தியார் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருப்பது மிகவும் 'நல்லது'

6. ஒருவர் :—(சிநேகிதனைப் பார்த்து) என் சார், நீங்கள் எப்பொழுது சினிமாவில் நடிக்கப் போகிறீர்கள் ?

சிநேகிதர் :—நான் படத்திலே சிவபெருமானாக வரும்பொழுது ஞான திருஷ்டியால் பார்த்துச் சொல்லுகிறேன்.

ஆர். எஸ். கந்தசாமி, திண்டுக்கல்.

நித்தியானந்தரின்

# ரேடியோ டைரி



[ வை. மு. ஸ்ரீநிவாஸன், M. A., B. L. ]

நித்தியானந்தர் :—சர்மாஜி! வரணும் வரணும்! என்ன விசேஷம்? மஞ்சகவரும் கையுமாக வருகிறீர். கவரைப்பார்த்தால் கலியாணக்கடிதம் போலல்லவா தோன்றுகிறது.

லாவண்ய சர்மா :—நம்மாத்திலே ஏதாவது கலியாணம்னா கவர் கொண்டுவர வரைக்கும் உமக்குத் தெரிவிக்காமலிருப்பேனா? அந்தக் கவரை உமக்குக் காட்டவேண்டுமென்றுதான் கொண்டுவந்தேன்.

நி :—அது என்ன என்னிடம் காட்டும்படியான விசேஷக்கடிதம் ?

லா :—நம்ம சுப்புக்குட்டிப் பயல் அம்பி இருக்கானேல்லியோ அவன் எப்பவும் யாருக்குக் கடிதம் எழுதினாலும் மஞ்சகவரில்தான் அனுப்புகிறான். இப்போது நான் அங்கே போகையில் அவன் இந்தக் கடிதத்தை எழுதி தபாலுக்கு அனுப்பத் தயாராயிருந்தான். எனக்குப் படித்துக்காட்டினான். நான் நாளை அதை அனுப்பலாம் என்று சொல்லிவிட்டு உம்மிடம் காட்டி அபிப்பிராயத்தை யறிந்து பிறகு திரும்புகையில் கொண்டுவருகிறேன் என்று வாங்கிக்கொண்டு வந்தேன். இதோ படியும்.

நி :—இது ரேடியோ நிலைய நிர்வாகஸ்தருக்கல்லவா எழுதப்பட்டிருக்கிறது? அம்பி தனது அபிப்பிராயத்தை எழுதி யிருப்பதை நான் பார்த்துத்தான் அனுப்பவேண்டுமா என்ன ?

லா :—அந்தப் பயல் கொஞ்சம் அவசரக் குடுக்கை. அவன் ரேடியோ செட் வாங்கி இன்னும் 15 நாள்கூட ஆகவில்லை. ஆனால் நிகழ்ச்சிகளைப் பற்றி பெரிய புகார் செய்து கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டான்.

நி :—15 நாள் ஆனால் என்ன ? 15 மாதம்தான் ஆனால் என்ன ? தன் சொந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்த அவனுக்கு உரிமையில்லையா ?

லா:—படித்துத்தான் பாருமே. ரொம்ப கடினமாக எழுதியிருக்கிறான்.

நி :—(படித்துவிட்டு) ஸார். அம்பி பலே கெட்டிக்காரன்னு இந்த கடிதத்திலிருந்து நிமிஷத்திலே வெளியாயிடுத்து.

லா :—அம்பி பாடு யோகந்தான். உம்மிடமே நல்ல பெயர் பெற்றுவிட்டானே ! இனி அவனுக்கென்ன குறைவு?

நி :—அந்த கடிதத்தில் எழுதியிருப்பதை நான் ஆதரிக்கிறேன். அவன் எழுதியிருப்பது ரொம்பவும் சரி. ஒரு பாட்டை தேர்ந்தெடுப்பதற்கு முன் அதன் சாஹித்தியத்தைக் கவனிக்கவேண்டுவது அவசியமல்லவா ?

லா :—அவசியந்தான். ஆனால் புதிதாகக் கவனம் செய்யப்பட்டவைகளைப்பற்றி அவர்களுக்கு எப்படித் தெரியும்? பாட்டின் முதலடியை மாத்திரம் தானே கவனித்துவிட்டு தேர்ந்தெடுக்கிறார்கள் ?

நி :—அப்பேர்ப்பட்ட புது உருப்படிகளை ரிஹர்ஸல் செய்து பார்க்க வேண்டாமா ? சென்ற 14-ந் தேதியன்று திருச்சியில் சுமார் 1.45 மணிக்கு மைக்குக்கு முன்னிருந்துகொண்டு எங்கு பாடுகிறோம்; யார் கேட்கிறார்கள்

என்று சற்றும் யோசியாமல், அசம்பாவிதமாக, தெருக்கூத்தில் பாடுவதற்குக்கூட அசங்கியப்படும்படியான 'பாட்டு' என்று பெயர்கொண்ட வசனத் தொடர் சிலவற்றை ('மன்னு என் ஆசை'; 'ஸ்ரீகோமளா'; 'சட்டிக்கரும்பே' முதலிய ஆபாச சரக்குகளை) வட இந்திய மெட்டிலமைத்து ஒரு பாடகரும், பாடகியும் கத்தினர்கள். தமிழ்ப்பட முதலாளிகள் தான் இம்மாதிரியான சரக்குகளை ஜனங்கள் முன் வாரி இரைக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கையில் உயர்தரமான சங்கீதத்தையும், நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பும் நிலயத்திலிருந்து இத்தகைய ஆபாஸக் களஞ்சியம் வெளிவந்தால் ஏன் அதிருப்தி ஏற்படாது?

லா:—அப்படியானுல் இந்த கடிதத்தை அம்பி இப்படியே அனுப்பி விடலாமென்கிறீர். நீர் ஏன் இதைப்பற்றி எழுதி யனுப்பவில்லை?

நி:—என் குறைகளை விவரித்து எழுதுவதென்றால், அவைகளைப் படிப்பதற்குள் பொறுமை பறந்து ஓடிவிடும். ஒன்று இரண்டா? குறைந்தது இப்போது சப்த குறைகளாவது உம்முன் கொண்டுநிறுத்துவேன்.

லா:—எழுதானு! அதற்குமேலில்லையா? நீர் முணுமுணுத்துக்கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம்? பத்திரிகைகளுக்காவது எழுதணும். அல்லது நிலயங்களுக்கே எழுதியனுப்பவேண்டும். அவர்கள்தான் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் வரவேற்கிறார்களே!

நி:—அவ்வளவு தூரம் உடம்பு வணங்குகிறதா இதையெல்லாம் முறையாக எழுதியனுப்ப? ஏதோ உம்மைப்போல யாரேனும் வந்தால் அவர்களிடம் அரட்டையடிப்பதும் போதை ஓட்டுவதுமாக உள்ளது. ஓய்வு நேரமே ரொம்பவும் குறைவாகவல்லவா இருக்கிறது!

லா:—அப்படியானுல் சீக்கிரம் ஆரம்பிக்கலாமே.

நி;—ஆகா! அதற்கென்னதடை. இதோ ஆரம்பிக்கிறேன். ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே ரேடியோ புராணத்திலே, விக்ரம வருஷ ஆரம்பத்திலே, ஒருநாள் மாலையிலே, மஹா ரவிகராகப்பட்டவரும், சகலகலாவல்ல பருமான ஒருவரிடம், காற்றில் பறந்துவரும் சங்கீத, சப்த நிகழ்ச்சிகள் சிலவற்றைப்பற்றின தனது குறைகளை அதிருப்திஸ்வாமி யென்பவர் பின் வருமாறு விவரிக்கலானுர். ததரீனன......

லா:—பேஷ்! பலே பேஷ்! ஹரிகதா காலக்ஷேபமெல்லாம் இதற்கு முன் என்ன செய்யமுடியும்! ஸப்த குறைகளை வர்ணிக்கலாமே ஸ்ரீமான் பாகவதர்வாள்!

நி:—ஏற்கெனவே பேசிக்கொண்டிருந்த விஷயம் ஒன்று. அதாவது பாட்டின் அர்த்தத்தைக் கவனித்துப் பிறகு தேர்ந்தெடுக்கவேண்டும். சிற்றின்ப உணர்ச்சி ததும்பும் அல்காப்பாட்டுக்களை அடியோடு விரட்டியடிக்க வேண்டும். அப்படி "காதல் பாட்டுகள்" பாடித்தானுகவேண்டுமென்றால், கண்ணியமான முறையில் எழுதப்பட்டிருந்தால் அனுமதிக்கலாம்.

இரண்டாவதாக ராக ஆலாபனை பல்லவி, அல்லது கீர்த்தனைகளைத் தேர்ந்தெடுப்பதில் காலத்தை அனுசரிக்கவேண்டும். காலை நேரத்திற்குத் தகுந்த ராகத்தைக் காலையிலும், மாலை அல்லது இரவு நேரத்திற்குத் தகுந்ததை மாலையிலும், இரவிலும் பாடச் செய்தால் அதன் இயற்கையான இனிமையுடன் சோபிக்கும். காலையில் ரீதிகௌளையும், மாலையில் பிலகரியும் பாடினுல் அவ்வளவு ரவிக்கிறதா? இவ்விஷயத்தில் மிகவும் சிரத்தை காட்ட வேண்டும். பாட ஒப்புக்கொள்பவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்குத்தகுந்தாற்போல உருப்படிகளைத் தெரிவிக்கவேண்டும்.

மூன்றாவதாக ஒரே ராக ஆலாபனையை ஒரே நாளில் ஒரு நிலையத்திலிருந்து ஒரு முறைக்குமேல் கேட்பது அவ்வளவாக ரஸிப்பதாயில்லை. உதாரணமாக மத்தியான ஒலி பரப்பில் ரீதிகௌளை இருமுறை பாடப்பட்டது.

நான்காவதாக ஒரே கீர்த்தனம் ஒரே நாளில் ஒரு முறைக்குமேல் பாடப்படுகிறது. "ஒருவர் வாத்தியத்தில் வாசிப்பார், அதே கீர்த்தனையை மற்றொருவர் தன் சாரீர சுகத்துடன் பாடுவார்—இரண்டும் இரண்டு விதம் தானே" என்று பதில் கூறலாம். இது விஷயமாக முன்னைவிட இப்போது சிறிது அபிவிருத்தி காணப்படுகிறது.

ஐந்தாவதாக குழந்தைகளுக்கான தனி நிகழ்ச்சிகளால் குழந்தைகளுக்கு விசேஷ நன்மை யொன்றுமில்லாதிருப்பது வருந்தத்தக்கதாயிருக்கிறது. குழந்தைகளுக்கு வெறும் வேடிக்கைக் கதைகள் மட்டும் சொன்னால் போதாது. நல்ல நீதிகளைப் புகட்டக்கூடிய சிறுகதைகளைச் சொல்லி குழந்தைகளைப் பயன்பெறச் செய்யவேண்டும். வருங்காலத்துத் தலைவர்களாக நம் குழந்தைகளைப் பழக்குவதில் ரேடியோ பெரிய பங்கெடுத்துக் கொள்ள முடியுமென்பதை காரியாம்சத்தில் காட்டவேண்டும்.

ஆறுவதாக மாதர்களுக்கான நிகழ்ச்சிகளும் பெரும்பாலும் அதிருப்திகரமாகவே இருக்கின்றன. அடிக்கடி இந்த நிகழ்ச்சிகளுக்கென்று பிரயாசைப்பட்டு எங்கிருந்தோ அபஸ்வரக்குடுக்கைகளையெல்லாம் அழைத்து வந்து, அந்த அரைமணி நேர ஒலிபரப்பில் அனேகமாக மாதர்களின் பொறுமையையே சோதித்துவிடுகிறார்கள். பொறுமையின் அவசியத்தை எடுத்துக் காட்டுவதில் தனிப் பெருமை பெற்றுள்ளன இவை.

ஏழாவதாக ஒரே சமயத்தில் சென்னையிலும் திருச்சியிலும் நல்ல கச்சேரியை யமைத்தால் எதைக் கேட்பது? உதாரணமாக சென்னையில் கே. எஸ். நாராயண அய்யங்கார் கோட்டுவாத்தியமும், திருச்சியில் டி. என். ராஜாத்தினம் பிள்ளை நாகஸ்வரமும் வாசித்தால் எதைக் கேட்பது? இது விஷயமாக இரு நிலைய நிர்வாகஸ்தர்களும் இனி ஒத்துழைப்பார்களென அறிவிக்கப்பட்டதாம். சென்ற இரண்டு வாரங்களில் கூட அம்மாதிரிப் போட்டிகளிருந்தன. நாளடைவில் மறையும் என்று எதிர்பார்க்கலாம்.

லா :—உமது குறைகளைச் சொல்லக் கேட்பது ஸ்வாரஸ்யமாகத்தான் இருக்கிறது. ஆனால் அக் குறைகளை நீர் அனுபவிப்பது தலை வேதனையாகத்தான் இருக்கும் என்று ஏற்படுகிறது.

நி :—இரு நிலைய நிர்வாகஸ்தர்களும் ஒத்துழைத்து, இதுவரை நான் குறிப்பிட்டுள்ள குறைகளை நிவர்த்திப்பது விஷயமாக மிகுந்த சிரத்தை காட்டி, தம் தம் நிலைய நிகழ்ச்சிகளை அமைப்பார்களாயின் நமக்கு குறைகளின்றி உயர்தர இசைவிருந்தும் நல்ல பொழுது போக்கும் ஏற்படும்.

லா :—சென்ற மாதத்திய டயரியைக் காட்டாமலே இவ்வளவு நேரம் குறைகள் புராணத்தையே படித்தீரே. டயரி எழுதவில்லையா?

நி :—உமக்களித்த வாக்குப் பிரகாரம் ஒவ்வொருமாதமும் தவறாது எழுதி வருகிறேன். இந்த தரம் பொதுவாக குறைகளைப்பற்றி விவரித்துப் பேசிவிட்டதால் அதைக் காட்டாதிருந்துவிட்டேன். சென்ற ஒரு மாதத்தில் "பிரபல வித்வான்களும், காயகிகளும் வழக்கம்போல நன்றாகப் பாடினார்கள்; திருச்சியில் விக்ரம வருஷப்பிறப்பு தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது" என்பது தவிர நான் கேட்டவரையில் வேறு குறிப்பிடத்தக்க விசேஷ அம்சம் ஒன்றுமில்லை யென்றுதான் என் அபிப்பிராயம்.

---




# ரா ஜ மோ ஹ ன்

## ஓர் கண்றாவிப் படம்

படம் எடுத்துச் சில வருஷங்களாகியும் இதுவரையில் அதைப் பார்க்கும் துர்ப்பாக்யம் கிடைக்காதிருந்தது. இப்போது பார்த்த பிறகு உண்டாகும் சங்கடத்தைக் கூறமுடியாது. தன் சொந்த வீட்டு விளக்கானால் மட்டும் முத்தமிட்டால் வாயைச் சுடாதா!

என்னிடம் கதையை வாங்கும்போது அவர்கள் "படமுதலாளியும் டைரெக்டரும், நடிகர்களும் சேர்ந்து ஒத்துழைத்து இதுகாறும் வெளிவந்த படங்களைவிடச் சிறந்த தமிழ்ப் படமாகக்கொண்டு வருகிறோம்" என்று கம்பீரமாகச்சொல்லிய வார்த்தையைக் கேட்டு நாங்கள் மயங்கிவிட்டோம். 'ஏதோ பிரம்மானந்தமானபடம் வரப்போகிறது. கதையின் ஜீவநாடியாயுள்ள நீதிகள் உலகில் பிரகாசிக்கப்போகின்றன' என்று மனப்பால் குடித்தோம்.

படம் முடிவதற்குள்ளேயே பலர் பலமாதிரியாகப் பேசிக்கொண்டார்கள். படம் வெளியூர்களில் ஓடும்போது நமது சந்தாநேயர்களில் பலர் பலமாதிரி தமது அபிப்ராயங்களை எழுதினார்கள். நான் நேரில் பார்த்த பிறகுதான் சரியான அபிப்ராயம் சொல்லமுடியும் என்று நினைத்திருந்தேன். அந்த வள்ளலையும் பார்த்தாகிவிட்டது.

கதையைப்படித்துள்ளவர்களுக்கு அதன் மாறுதல் நன்றாகத் தெரியும். படிக்காதவர்களுக்கு என்ன தெரியும்? கதையின் முக்ய ஜீவநாடிகளை எங்கெங்கு நாம் உணர்ச்சி ததும்ப எழுதியிருந்தோமோ அங்கு முற்றும் பெரிய ஏமாற்றத்தையும் மனவருத்தத்தையும் கொடுத்துவிட்டது. கல்யாணி என்கிற உத்தமி தன் வீட்டுத் தயிர்க்காரியைத் தன் புருஷன் கெடுத்துக் குடும்பத்தைச் சிதறவடித்துவிட்ட துரோகத்திற்காக, தன் புருஷனுக்குப் பரிந்து பொய் சாக்ஷி சொல்லாமல் பரதேசிக் குழந்தையைக் காக்கும் பொருப்பில் விலையிலாத த்யாகத்தைச் செய்கிறாள். இந்த பாகம் படத்தில் O.

முதலாளி, தொழிலாளி என்கிற முறையில் தமையன் முதலாளிவர்க்கத்தின் கொடுமைகளைக் காட்டி ஏழைகளை இம்சிப்பதும் அவன் தங்கை காருண்யத்தினால் 'எல்லோரும் சமம்' என்கிற உத்தமமான கருத்தைப் பலவிதத்திலும் நிரூபித்துக் காட்டும் பாகம் கதையில் உள்ளதற்கும் படத்தில் உள்ளதற்குமுள்ள வித்யாசத்தைப் பார்க்கப் பகீரென்கிறது.

மோஹன் தன்னை உயிருக்குயிராய் வளர்த்த மகா த்யாகியாகிய கல்யாணியின் பேராபத்தை நீக்கும்பொருட்டு அவன் சிறைவாஸம் செய்யவும் தயாராயிருந்த ஓர் அழகிய பாகத்தில்—நன்றிவிச்வாஸமும், மனஉறுதியும் கொண்ட கட்டம்—கதையிலுள்ளதில் ஒரு அம்சங்கூடத் காணவில்லை.

உண்மையான ஊழியனின் எஜமான விச்வாசத்தையும், அவனுடைய குடும்பமும் எஜமான் குடும்பத்துடன் ஐக்யமாகி உழைக்கும் பெருமையையும் கதையில் வெகு அழகாக அமைத்திருப்பதை படத்தில் வெறும் கேலிக் கூத்தாகவும், சதிபதி சண்டையின் சித்திரமாகவும் பார்க்கும்போது எப்படியிருக்கும்?

போலீஸ்காரர் என்றாலே வெறும் கடிபிடியல்ல. அவர்களிலும் உத்தமமான குணத்துடன் உழைக்கும் சத்திய புருஷர்கள் உண்டு என்பதை ஏகாம்பரத்தின் பாகத்தால் கதையில் நன்கு காட்டியுள்ளதை படத்தில் உயிரில்லாத பொருளாகச் செய்திருக்கிறது.

மோகன் உத்தமன், காருண்ய குணசாலி என்பதை நிரூபிக்க அவன் சிறையில் இருக்கையிலும் நன்மையைச் செய்து அதிகாரியின் ஆபத்தை நீக்குவதாகக் கதையில் உள்ள பாகம் அடியோடு விட்டுவிடப்பட்டுள்ளது.

உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் மார்க்கத்தை ஓர் போலீஸ் உத்தியோகஸ்தன் செய்யத்தக்க முறையில் கதையில் காட்டியுள்ளதைப் படத்தில் கேவலம் முட்டாள்தனமாகவும் தெருக்கூத்தாகவும் அர்த்தமற்றதாகவும் செய்துவிட்டார்கள். குருவிக்காரர்களுக்குக் கையெழுத்து எதற்கு? கையெழுத்து வாங்கும் யோக்கியதையுடைய வேஷத்தை விட்டு விட்டு இம்மாதிரி காட்டியிருப்பது வெறுக்கத்தக்கதாயிருக்கிறது.

நாகலிங்கம், கிருஷ்ணன், இருவருடைய பாகங்களை கேவலம் குடி புராணமாயும், கூத்துச் சிரிப்பாயும் அடித்துவிட்டார்கள். இதுபோல் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஒரு இடமாவது ரஸிக்கக்கூடியதாக இல்லை என்பதைப் பார்க்க வருத்தமாயிருக்கிறது. கதையைத்தான் குட்டிச்சுவராடித்துவிட்டார்களென்றால் நடிப்பாவது ஜீவனுடன் அமையக் கூடாதா! ஒலிப்பதிவு சில இடங்களில் காதே கேட்கவில்லை. இம்மாதிரி ஓர் மோசமான படத்தை எடுத்துப் பெயரைக் கெடுத்துக்கொண்டு பணத்தையும் செலவிடுவதைவிட முதலாளிகள் கிருஷ்ணா வென்று பாயும் தலையணையும் போட்டுக்கொண்டு தூங்கலாம். இனிமேலாவது நல்ல ஜீவனுள்ள கருத்துக்களைக் கொலை செய்யாது உள்ளது உள்ளபடி முதலாளிகள் படம் எடுப்பார்களா? அன்பர்கள் தயவுசெய்து கதையைப் படித்துப் படத்தைப் பாருங்கள். ஏற்கனவே படத்தைப் பார்த்தவர்கள் கதையைப் படிக்கவும்.

---


# ராஜமோஹன்

'பணமா, குணமா? அந்தஸ்தா, அன்பா? தாயின் சேவையா அல்லது தன் சுகவாசமா?...இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் அற்புதமான கதை. முதல் டாக்கி நாவலின் இரண்டாம் பதிப்பு.

விலை ரூ 1-4. சந்தாநேயர்களுக்கு ரூ 1.

# அனுபவ நீதிசாரம்

வை. மு. கோ.

1. நாளைக்குநாள் வயது ஏறிக்கொண்டே வருகிறது. அதற்கான முறையில் முதுமையும் வளர்ந்துகொண்டுதான் வருகிறது. ஆனால் சிலருக்குமட்டும் தாம் எத்தனை வயதானாலும் சின்னப் பெண்போலவே சிங்காரியாய் இருக்க ஆசை. அதற்காக மாதம் சில ரூபாய்களை பவுடர், ஸ்னோ, சோப்பு, ஹேர்டை, முதலிய அபூர்வ வஸ்துக்களுக்காகச் செலவிட்டு அலங்காரஞ்செய்துகொள்கிறார்கள். முகத்தில் இளமையை விலை கொடுத்து வாங்க முடியுமா? இயற்கை ஸ்வரூபத்தை மறைக்கமுடியுமா! கொஞ்சநேரத்திற்குப் பிறகு களாய்போன பாத்திரத்தைப்போலத்தான் முகம் பிரகாசிக்கும்.

2. நெடுமையுங் கொடுமையும் கூறுவதே தமது தொழிலாகச் சிலர் கொள்கிறார்கள். அவர்களைப்பற்றிப் பிறர் ஏதாவது சொன்னால் மட்டும் குற்றமாம். கோபம் காளிகாதேவியைப்போல் வந்துவிடுகிறது. மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் வெண்கலமோ...

3. எந்தச் சாமான்களைப் பார்த்தாலும் அவைகளை வாங்குவதற்கு ஆசை துடிக்கிறது. முதலில் அந்த ஆசையையே மனத்தில் வாங்காது நிராகரித்துவிட்டால் பிறகு சாமான்களும் வாங்கவேண்டாம் அல்லவா!

4. நல்ல மனிதர்களைக் கலக்கும் குள்ளநரிகள் ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அகப்பட்டுக்கொள்கிறார்கள். அப்போது தப்பித்துக்கொள்வதற்குத் தவிக்கும் தவிப்பு, திண்டாடும் திண்டாட்டம் சொல்லத்திறமில்லை. முதலிலேயே கலகக் கொள்ளியாகாமலிருந்தால்?

5. அமிஞ்சிக்கு சினிமா பார்ப்பதென்றால் தினம் இரண்டு காக்ஷிகள் பார்த்தாலும் கண்கெட்டுப் போகாதுபோலும். காசு கொடுத்து பார்ப்பதென்றால் மாதம் ஒன்று பார்ப்பதற்குக்கூட கண் கெட்டுவிடுமாம்.

6. தாயார் செத்தால் அழாத புண்ணியவதி மாமியார் செத்தால் மாய்ந்து மாய்ந்து அழுதாளாம். எதற்காக? மாமனாருக்குத் தன்மீது நம்பிக்கையும் அன்பும் உண்டாகி மாமியார் நகைகளை அப்படியே தன்னிடம் கொடுத்துவிடுவதற்காகத்தான்.

7. பலபேர்களிடம் பலமாதிரியாகப் பேசும் ஆசாமிகளை எப்போதும் நம்பாதே. அந்த மனிதர்களின் சகவாஸமும் அஸ்திவாரமில்லாத வீட்டு வாஸமும் ஒன்றுதான். உஷார்.

8. தேளுக்குக் கொடுக்கில் எப்போதும் தினவு இருக்குமாம். அதே போல் கலகம் செய்யும் குண்டுணிகளின் நாக்கும் சதா தினவு எடுக்கும்போலும்.

9. சிலருக்கு தன்னைவிட அழகானவர்களும், பணக்காரர்களும், புத்திசாலிகளும் உலகில் இல்லை என்று கர்வம் மண்டைக்குமேல் முழம் இருக்கிறது. அந்த அகம்பாவ கர்வமே அவர்களை எல்லாவற்றிலும் கேவலமாக்கி விடுகிறதென்பதை ஏன் அறிவதில்லையோ?




ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி.

**29-வது மேளகர்த்தா** **தீர சங்கராபரணம்.**

ஜன்ய ராகம் : கேதாரம்.

[ஸாஹித்தியத்திற்கு முதல் பக்கம் பார்க்கவும்.]

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—வக்ர ஷாடவம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ | ம | க | ம | ப | நி | ஸ் |
| | சுத்த | அம்த | சுத்த | | கா | |

அவரோஹணம்—ஷாடவம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஸ் | நி | ப | ம | க | ரி | ஸ |
| | கா | | சுத்த | அம்த | சுத்த | |

**இராகம் : கேதாரம்.** **சதுரஸ்ர-ஜாதி-த்ரிபுடை.**

பல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| ; | ● | ஸ்நி-பா, ம-கா, ரி-ஸரிரிக | , ஸஸம- , கமா | பா ; - பமகம |
| | | மா யா மோ கத்தை | விடு மன | மே |
| ப நி | ● | ஸ்நி-பா, ம-கா, ரி-ஸரிரிக | , ஸஸஸ- , நிபா | ஸா ; - ; ப ம |
| | | | . . | |
| | | மா யா மோ கத்தை | விடு மன | மே |
| | | . . . | . . . . . | |
| க ரி | ● | ஸம-,கமா- பாநீ ஸநிஸரி | கரிஸரி - ஸநிஸநி | பநிபம - கமபநி |
| . . | | தீ யவ ழியில் செல் | லா தி ரு | தி ன மே |
| ஸ ரி | ● | | | |

### அநுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| ; ● | ஸா - ஸா ; - ஸாஸா-ஸா; | ; ஸஸ - கா, ரி | ஸா ரீ - ஸா ; |
| | பே யாய்த் தி ரிந் து | பிணி யா ல் | அ லைந் து |
| ; ● | நிஸ-ரீ;-ஸரிஸநி - பமகம | பநிஸநி - , பமா | கா ; - கமபநி |
| | நா யாய்கு ரைத் து | நசித் திட | செய் தி டு |
| ஸ ரி ● | | | |
| ம் | | | |

### சரணம்

| | | | |
|---|---|---|---|
| ; ● | பா-, மகா-மககரி-ரிஸஸா | ; ஸ ரி - , ஸ நீ | ஸா , நி - பா ; |
| | கா லன்வந்த ழைத்திடும் | கா லையில் | கண் ணீர் |
| ; ● | பஸ-; நிஸா-கா, ரி-ரிஸஸா | ; ஸம - , க மா | பா ; - ப ம க ரி |
| | மா லையு திர்த்தி டில் | மய ங் கு வ | னே ந மன் |
| ஸ நி ● | | | |
| ● | ஸம- , கமா - பாநீ - ஸ்ா; | ; ஸக - , ரி ஸா | ஸரிஸநி - பநிஸா |
| | சீ லமு டன் சத்ய | சிந் த னை | செய்து கோதா |
| ; ● | நிஸ-ரீ;-ஸரிஸநி-பமகம | பநிஸநி - , ப மா | கா ; - கமபநி |
| | லோல ன்ப தம் ப ணிந் | து கா ல னை | வென் றி டு |
| ஸ ரி ● | | | |

### முக்தாயிஸ்வரம்

| | | | |
|---|---|---|---|
| ● | ஸா ,-ரிஸநி-ஸநிப-நிபம-கரி | ஸநி - ஸரீஸா - ரி | ஸநி - பநிஸ்மகம |
| பம ● | கமபநி-பநிஸரி-ஸமகரி-ஸநி | ஸரிஸ - கரிஸநிப | ஸ்நிபமக - மபநி |
| ஸரி ● | | | |


# திருச்சி ரேடியோவில்

## 24-5-1940 வெள்ளிக்கிழமை

மாலை **6-30** முதல் **7** வரையிலும்
இரவு **8-45** முதல் **9-20** வரையிலும்

**ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்,**

தனது சொந்த சாஹித்தியங்கள் சிலவற்றையும்,
திவ்வியப் பிரபந்தத்திலிருந்து சில பாசுரங்களையும்,
பாரதியார் பாடல்களில் சிலவற்றையும் பாடுவார்.

## பரதேசிகளின் திண்டாட்டம்—பரதேவதைகளின் கொண்டாட்டம்

"கடவுளும் கைவிட்ட கைதி, விடுதலையே இல்லாத கைதி, விசாரணை இல்லாக் கைதி, திக்கற்றப் பரதேசிக் கைதி. இல்லாவிடில் ஒரு பாபமும் சொப்பனத்திலும் கண்டறியாத என்னையும், இக் குழந்தைகளையும் பெருங்குற்றம் செய்த கைதிகளைப்போல் ஏன் பகிஷ்காரம், பிராயச்சித்தம், என்கிற பயங்கர வார்த்தைகளைக் கொடிய பாணப்பிரயோகம் செய்யவேணும்? என்ன அக்கிரமம், என்ன அநியாயம்?

ஐயோ! உள்ளே இருப்பதாகவன்றோ அவர்கள் கற்பனை செய்து இத்தனை ஆக்ரோஷத்துடன் பேசுகிறார்கள். கொட்டும் மழையில் நனைந்து சென்ற மன்னி எங்கு சென்றாளோ! எக்கதியானாளோ! பழியோரிடம் பாவமோரிடம் என்பார்கள். பாவமே இல்லாது பழிசுமக்கவா நாங்கள் பிறந்தோம்...ஆம்...ஆம்....இம்மாதிரிதான் செய்வோம். ஓசைப்படாமல் கதவைத் திறந்து அவர்களையே அழைத்துக் காட்டிவிடுகிறேன். பிறகாவது என் பரிசுத்தம் தெரியுமா!" என்று தனக்குள் நினைத்துக்கொண்டே மெல்லக் கதவைத் திறந்து வெளியே வந்து "என் தாய்மார்களே! உங்களுக்குக்கோடி நமஸ்காரம். வீணான அபாண்டத்தைச் சுமத்தி என்னைக் கொலை செய்யாதீர்கள். உள்ளே வந்து உங்கள் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளுங்கள்" என்று வணங்கியவாறு கூறினான்.

திடீரென்று இம்மாதிரி கதவைத் திறந்துகொண்டு வருவான் என்பதை எதிர்பாராது, குற்றங் கண்டுபிடித்துப் பேசுவதிலேயே கவனமாகவிருந்த பெண்டுகள் மூலைக்கொருவராகப் பிய்த்துக் கொண்டு ஓடும் வேகத்தில் குடத்தைக் கீழே போட்டவர்களும், கல் தடுக்கி விழுந்தவர்களும், எதிரிலுள்ள மரத்தில் இடித்துக் கொண்டவர்களுமாக ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தார்கள். அவர்களில் கீழே விழுந்த மொட்டைப் பாட்டியம்மாள் 'கம்மண்டாட்டி, அவன் எழுவெடுக்க. செய்யற திருட்டுக்காரியத்தையும் செய்துபுட்டு எங்களெவேறெ உள்ளே அழைக்க வந்துட்டான். மானங்கெட்டவன்' என்று ஆசீர்வாதம் செய்தபடியே எழுந்து குடத்தை எடுத்துக்கொண்டு நடந்தாள்.

கிருஷ்ணனின் உள்ளம் கொதித்தது. இந்தக் கபடஉலகம் அப்போது அவன் கண்களுக்கு வெறும் சூன்யமாகத் தோன்றியது. ஏதோ பயங்கர தேவதையொன்று உருமுவதுபோலும், விகாரமாகச் சிரித்துப் பல்லைக் கடிப்பது போன்றும் ஒருவித வெறுப்பும் பயமும் தோன்றி வதைத்தன. வீதித் திண்ணையிலேயே சற்று நேரம் உட்கார்ந்திருந்தான்.

சூரியன் பாரபக்ஷம் பார்க்காது தன் ஜகஜ்ஜோதியான செங்கோலைச் செலுத்தித் தன்னரசுபுரிய கீழ்த்திசையில் தோன்றினன். மதுரம் தினம் விடிவதற்கு முன்பே எழுந்து சகல காரியங்களையும் செய்துவிட்டுக் குழந்தைகளின் விழிப்புக்குக் காத்திருப்பாள். குழந்தை ஸரஸ்வதி எழுந்தவுடனே அவளுக்குப் பல் துலக்கி முகங் கழுவுவது முதல் சகலமும் தானே செய்து, பின் சுவாமிபேரில் உதய ராகம் பாடச்சொல்லிக் கொடுத்து அதைத் தானும்கூடப் பாடுவது வழக்கம். பிறகுதான் இரு குழந்தைகளுக்கும் பழய சாதம் தயிர் விட்டுக் கலந்து தானே ஊட்டுவாள்.

இன்று அம்மாதிரி செய்ய யார் இருக்கிறார்கள்? குழந்தைகள் பரதேசியிலும் பரதேசியாகிவிட்டனவே...ஸரஸ்வதி கண்ணை விழிக்கும்போதே "மன்னியம்மா!...மன்னியம்மா!" என்று சிரித்த முகத்துடன் கூவிக்கொண்டே எழுந்தாள்.

கவலையே பிண்டமாக உட்கார்ந்திருக்கும் கிருஷ்ணனுக்கு ஒன்றுமே காதில் விழவில்லை. ஸரஸ்வதி எழுந்திருக்கும்போதே எதிரில் நின்று "என் கண்ணே" என்று ஆசையுடன் கூப்பிடும் மன்னியம்மாவைக் காணாததால் ஒரு வேளை வீட்டு விலக்கோ என்னவோ! என்று எண்ணி குழந்தை ஸரஸ்வதி தானே எழுந்து முதலில் புறக்கடைப்பக்கம் போய் பார்த்தாள்.

அங்கும் ஏமாற்றம். சமையற்கட்டிற்கு வந்தாள். அங்கும் ஏமாற்றம். அடுப்பே மூட்டவில்லை. தினம் தீர்த்தம் நிரப்பும் பாத்திரங்கள் காலியாகவிருந்ததுகண்டதும் அக்குழந்தை மிகவும் சிறியவளாயினும் கூறத் தெரியாத ஒருவிதமான உணர்ச்சி அவள் மனத்தில் பொங்கி எழுந்து துக்கமாய் வந்தது. வீடு முற்றும் சுற்றிச்சுற்றிப் பார்த்த பிறகே, 'மன்னியம்மாவேக் காணம்; மன்னியம்மா எங்கேயோ போயிட்டா!' என்ற வார்த்தைகள் அவள் வாய்க்குள் துக்கம் தேங்கிய தொனியில் ஒலித்தன.

தூங்கிக்கொண்டிருக்கும் தங்கை யருகில் வந்து உட்கார்ந்து அவளை ஆட்டி எழுப்பியபடியே, "பார்வதீ! பார்வதீ!...கண்ணா! மன்னியம்மாவே எங்கேயோ காணமே. அப்பாவையுங் காணம்" என்று சொல்லும்போது ஸரஸ்வதி கண்ணில் நீர் நிறைந்துவிட்டது.

குழந்தை பார்வதியும் எழுந்து கண்களைக் கசக்கியபடியே, "மன்னியம்மா! மன்னியம்மா!"...என்று வழக்கம்போல் உரத்துக் கூவினள். "பார்வதீ! மன்னியம்மாவே காணமே...கண்ணா! மன்னியம்மா நம்பளெ உட்டுட்டு எங்கேயோ போய்ட்டா!"...என்று மீண்டும் நெஞ்சடைக்கும் துக்கத்துடன் ஸரஸ்வதி கூறினள்.

இவளைவிட இளங்குழந்தையான பார்வதிக்கு விவகாரம் ஒன்றும் தெரியாவிடினும், தாயாரைக் காணவில்லை என்றால் தேம்பி

யழும் குழந்தையைப்போல் 'மன்னிம்மா எங்கே?...எங்கே மன்னி யம்மா?' என்று வீரிட்டுப் பெரிதாக அழுதது.

அந்த குரல் கேட்கும் வரையில் உலகத்தையே மறந்திருந்த கிருஷ்ணனுக்கு சவுக்கடி கொடுப்பதுபோல் அக்குரல் கேட்டதும் "ஆ! குழந்தைகள் எழுந்துவிட்டார்கள்...அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வேன்! எப்படி சமாதானம் செய்வேன்?" என்று பதறியவாறு உள்ளே ஓடிவந்து, பார்வதியை வாரியணைத் தான்.

ஸரஸ்:—அப்பா! மன்னியம்மா எங்கே காணம்?...வீடு பூரா வும் தேடிப் பாத்துட்டேனே...எங்கேப்பா மன்னிம்மா?...

கிருஷ்ணனின் தொண்டையில் பெரும்பாறை அடைத்ததுபோ லாகிவிட்டது. கண்களில் ஜலம் முத்துக்கள் போன்று உதிர்ந்து விட்டது. உலகமறியாத குழந்தைக்கு என்ன சொல்வது என்று சில விநாடிகள் தவித்தான். இதற்குள் ஸரஸ்வதி பலதரம் கேட்டு விட்டாள்...மெல்ல தன்னை சமாளித்துக்கொண்டு "கண்ணா! மன்னி யம்மாவோடே அப்பா நேத்து ராத்திரி வந்து அவா ஊருக்குக் கூட்டிண்டுப்போய்ட்டாம்மா!" என்றான்.

நெஞ்சுக்குள் தேங்கிக் கிடந்த துக்கம் குபீரென்று பொங்கி விட்டது. 'மன்னிம்மா எங்கிட்டே சொல்லிக்காமே போய்ட் டாளே! இனுமே வரமாட்டாளா! அப்பிடின்னா!....எங்களுக்கு இனுமே யாருப்பா சாதம் போடுவா!...தலை பின்னுவா...குளிப் பாட்டுவா?'...என்று கூறும்போது இரண்டுகுழந்தைகளும் தேம்பித் தேம்பி அழுதுவிட்டன.

இந்தக் கண்ராவியைப்பார்க்க கிருஷ்ணனின் மனம் சகிக்கவே இல்லை. குழந்தைகளுக்குச் சரியாய் தானும் அழுதால் அவைகள் இன்னும் பரிதாபப்பட்டு ஏங்கிவிடும் என்கிற கவலையால் இருவரை யும் தடவிக்கொடுத்தபடியே "கண்ணா! அழாதேடாம்மா...மன் னிம்மா வந்து ரொம்ப நாளாச்சோன்னோ! அவா ஊருக்குப் போக வேண்டாமா! ஒங்குளுக்கெல்லாம் நான் செய்யறேண்டா கண்ணா! கவலைப்படாதேங்கோம்மா...என் ராஜாத்திகளாச்சே. வாங்கோ! பல்லுதேச்சு விட்றேன்" என்று நீறு பூத்த நெருப்புபோல் யாவை யும் உள்ளடக்கிக்கொண்டு குழந்தைகளைப் புறக்கடைக்கு அழைத் துச்சென்று பல்லைத் தேய்க்கச் செய்து முகங்கழுவி அழைத்து வந்தான்.

"என்னப்பா! நீ நன்னாவே செய்யலேயே. தலையெல்லாம் தண்ணி கொட்டிட்டயே...மன்னியம்மாதான் நன்னா செய்வா. இருப்பா! ஸ்வாமிக்குப் பாடணம்" என்று கூறியபடியே ஸரஸ்வதி கை குவித்து நமஸ்கரித்துப் பின் மதுரம் சொல்லிக்கொடுத்த உதய ராகத்தைப் பாட வாரம்பித்தாள்.

அத்தனை விசனத்திலும், குழந்தையின் உதய ராகத்தின் இன்ப உணர்ச்சி கிருஷ்ணனின் மனத்தில் ஒரு புதிய ஆனந்தத்தைக் கொடுத்தது. கண்ணீர் வழிந்தபடியே ஒரு சோகச் சிரிப்புச் சிரித்தவாறு குழந்தையை இருகத் தழுவிக்கொண்டான்.

சில காரியங்களில் பெரியவர்களைவிடக் குழந்தைகளே மிகவும் மேன்மையான நோக்கத்துடனும், பழக்கத்தை விடாது செய்ய வேண்டுமென்கிற பிடிவாதத்துடனும் வெற்றி பெறுவதை நாம் பார்க்கிறோம். அதேபோல் இச் சிறுமிகள் வழக்கப்படி உதய ராகத்தைப் பாடியானதும் "அப்பா! பழையது போடு" என்று கேட்டார்கள்.

கிருஷ்ணன் சமையற்கட்டிற்கு சாப்பாட்டு வேளையைத் தவிர சென்றதே இல்லையாதலால் எது எங்கு இருக்கிறது என்பதே அவனுக்குத் தெரியாது. பழைய சாதத்துப் பாத்திரத்தைத் தேட வாரம்பித்து ஊறுகாய்ப் பானையைத் திறந்தான். குழந்தை சிரித்துக் கொண்டே, "அப்பா! என்னுப்பா! ஊறுகாயையும், வத்தலையும் எடுக்கறயே! பழையது அதோ, அந்த மூலையில் தனியா மன்னியம்மா வெச்சிருக்காளே! பழையது பத்திலையா?" என்று கூறியவாறு தட்டை எடுத்துவைத்தாள்.

கிருஷ்ணனின் துக்கம் தாங்கவே இல்லை. பொங்கிப் பொங்கி வருகிறது. பழையதைப் பிழிந்துவைத்துக் கலந்தான். "அப்பா தயிரு போட்டு கலக்கணும்பா!....பாத்தியா! ஒனக்கு ஒன்னுமே தெரியலேயே! மன்னியம்மாவானு எத்தனை நன்னு பண்ணுவா? அவளே ஏம்பா அந்த தாதா அழச்சிண்டு போகணும். மன்னியம்மாவே அனுப்பமாட்டேன்னு நீ சொல்றதுதானேப்பா!" என்றாள்.

"கண்ணு! நான் சொன்னு கேப்பாளாம்மா! அவா அப்பா கிட்ட அவ போனு. இந்தா சாப்பிடுங்கோ!" என்று கிருஷ்ணன் தட்டில் போட்டான். ஸரஸ்வதி ஒரு கவளத்தை வாயில் போட்டுக்கொண்டதும், "ஐயோ! அப்பாவுக்குச் சாதம் போடக்கூடத் தெரியல்லையே! உப்பே போடலையேப்பா! எப்படி சாப்பிட்றது?" என்றாள்.

கிருஷ்ணனுக்குத் தன் புத்தி தனக்கு ஸ்வாதீனமாயிருந்தா லல்லவா பாவம்! "கண்ணு! இருடாம்மா! இதோ உப்பு போட்றேன்" என்று கூறிக்கொண்டே உப்பு மரவையருகில் ஓடினான். ஸரஸ்வதி "அப்பாப்பா!....பத்துக்கையோடெ உப்பு மரவெயெ தொடக்கூடாதுன்னு மன்னியம்மா சொல்லியிருக்கா! கையெ அலம்பிண்டுதொடணும்" என்று தெளிந்த ஞாபகத்துடன் கூறினாள்.

கிருஷ்ணன் அப்படியே கையை அலம்பிக்கொண்டு உப்பு போட்டான். குழந்தைகள் சாப்பிட்டபடியே "ஏம்பா! இன்னிக்கு யாரு சமையல் பண்ணுவா! மன்னியம்மா கூட இல்லையே! என்று

கேட்கும்போது மீண்டும் அவ்விளஞ் சிறுமியின் தொண்டையில் துக்கம் தேங்கியது. சாதத்தைப் பிடித்த கைகள் அப்படியே நின்று விட்டன. கண்கள் தகப்பனாரின் பரிதாபத்தையே உற்று நோக்கி அப் பச்சிளங் குழந்தைகளை யறியாமல் கண்ணீர் முட்டியது.

குழந்தைகளின் நிலைமையை அப்படியே உணர்ந்த கிருஷ்ணன் தன்னைச் சமாளித்துக்கொண்டு "கண்ணூ! நான் இருக்கும்போது உனக்குக் கவலை வேண்டாம்மா! நானே சமையல் செய்து போடு கிறேன். சாப்பிடும்மா" என்றான்.

"ஒனக்கு சமையல் செய்யத் தெரியுமாப்பா!....அப்பிடீன்னு! நீ சமையல் செய்துகொண்டிருந்தா பள்ளிக்கூடம் போகவேண் டாமா? பள்ளிக்கூடம் போய்ட்டா, பார்வதிக்கு யாருப்பா துணை இருப்பா! அவ சின்ன குழந்தையாச்சேப்பா!" என்றாள் ஸரஸ்வதி.

கிருஷ்ணனுடைய இதயத்தில் வெந்தணல் போட்டுப் பொசுக் குவதுபோலிருந்தது. இன்றுதான் பங்கஜம் இறந்துவிட்டது போன்ற சங்கடம் உண்டாகியது. "ஸரஸ்வதி! பள்ளிக்கூடத்துக் கும் போவேன். சமையலும் பண்ணுவேன். இனுமே பார்வதியெ கூடவே எடுத்துண்டு போயிடலாம். கண்ணூ! நீ எதற்கும் கவலைப் படாதேடாம்மா! ஸ்வாமி இருக்கார். நம்பளெ காப்பாத்துவார். நீ சீக்கிரம் சாப்பிடும்மா!" என்றான்.

குழந்தை சாப்பிட்டதும் கிருஷ்ணன் சமையல் செய்யவாரம் பித்தான். தட்டித்தடுமாறி அவன் செய்யும் காரியங்கள் குழந்தை ஸரஸ்வதிக்கு விநோதமாயிருந்தன. "இப்படி இல்லேப்பா! அப்படி பண்ணனும்பா! மன்னியம்மா இப்படிதான் செய்வாப்பா!" என்று கூடவே பேசிக்கொண்டு அவனுக்கு உதவியாயிருந்தாள்.

உண்மையில் கிருஷ்ணனுக்குச் சமையலுந்தெரியாது; ஒன்றுந் தெரியாது. தலைவிதியை எண்ணித் தட்டுத் தடுமாறி குழந்தைகளுக் காக சமையலைச் செய்தானேயன்றி, அவன் வயிற்றில் செய்யும் சங்கடத்தில் சாப்பாடு பிடிப்பதெங்கே?

குழந்தைகளுக்குக் குளிப்பாட்டவும் தலை பின்னவும் அவனுக் கென்ன தெரியும் பாவம். தலையும் வேஷமுமாகப் பத்திரகாளிகள் போன்றுள்ள குழந்தைகளை அழைத்துக்கொண்டு வீதிக் கதவைப் பூட்டிவிட்டு பட்டினியாய் பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டான்.

ஒருநாளும் இல்லாது திருநாளைப்போல் கிருஷ்ணன் வீட்டுக் கதவு பூட்டப்பட்டிருப்பதைக் கண்ட ஊர் ஜனங்களுக்கு வியப் பிலும் வியப்பாக இருந்தது. அதிலும் வம்பர் மாதர் சபையின் மெம்பர்களுக்கு அடங்காத வியப்பும் யோசனையும் உண்டாயின.

வம்பு பேசுவதிலேயே நோட்டங்கொண்ட ஆடவர்களுக் காகட்டும் பெண்களுக்காகட்டும் நாக்கு ஊரலெடுத்து உபத்திரவம்

செய்தது. வீட்டு வேலைகூட அவர்களுக்கு ஓடவில்லை. ஐந்து நிமிஷத்திற்கொருதரம் வீதிக்கு ஓடிவந்து கிருஷ்ணன் வீட்டுப் பூட்டையே கவனித்து அதை யறியத் துடித்தார்கள்.

வீட்டிலோ வேலை முடியவில்லை. வீட்டுப் புருஷன் சோறு தின்னும்வரையில் வீட்டில் அடைப்பட்டுக் கிடக்கும் ஒரு தடை மட்டும் வைத்துக்கொண்டிருந்தார்களாதலால் "பாவி மனுஷனுக்குப் பசிதான் எடுக்காதோ! மணி 12 அடிக்கப்போகிறதே இன்னும் வரவில்லையே!" என்று பர்த்தாவுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்தபடியே குட்டிபோட்ட பூனைபோல் தவித்தார்கள்.

அதிலும் ஆத்திரந் தாங்காத அகிலாண்டம்மாள் மெனக்கெட்டு கிருஷ்ணன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிற்குச் சென்று "என்ன எச்சிமி! சாப்பாடாச்சோ!...பக்கத்துவீட்டுக் கதவு பூட்டியிருக்கே? என்ன சமாச்சாரம்? அந்த தளுக்கு மொட்டச்சி எங்கே?" என்று ஆரம்பித்தாள்.

எச்சிமி:—அதாண்டீ! எனக்குந் தெரியல்லே. சந்தடியே காணம். என்ன ரகசியமோ யார் கண்டா?—என்று கூறியபடியே இருவருமாக புறக்கடைக் குட்டிச்சுவர்பக்கம் போய் கிணற்றின் மீது ஏறி நின்றுகொண்டு பக்கத்துவீட்டைக் கவனித்தார்கள். அங்கு யாராவது இருந்தால்தானே சந்தடி தெரியப்போகிறது. தனக்குச் சம்மந்தமில்லாத ஊரார் விஷயத்தை அறிவதற்கு இத்தனை சிரத்தையும் ஆவலுங்கொண்ட வம்பிகள் தம் சொந்த விஷயத்தில் அவற்றைக் காணவில்லை.

தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை எழுந்து கீழே விழுந்து மண்டையை உடைத்துக்கொண்டு அழவாரம்பித்தது. அப்போதுதான் கழனிக்கட்டு வேலைகளை முடித்துக்கொண்டு ஆற்றில் ஸ்நானத்தைச் செய்துவிட்டு வேஷ்டியை மடித்துத் தட்டியவாறு வரும் வீட்டுப் புருஷர் இதைப் பார்த்ததும் கோவத்துடன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு பெரிய சத்தமிட்டு மனைவியை வைதவாறு புறக்கடைப்பக்கம் வந்தார்.

அதுவரையில் மெய்மறந்து பகவானிடம் ஈடுபட்டுள்ள பக்த சிகாமணியைப்போலிருந்த அம்மாளுக்கு அந்தக் குரலைக் கேட்ட பிறகுதான் அஞ்ஞானம் மூடியதுபோன்றும் வீட்டு உணர்ச்சி சுரீரென்று தேள் கொட்டியதுபோன்றும் உரைத்தது. உடனே இருவரும் திடீரென்று குதித்தார்கள். அகிலாண்டத்தின் முகத்தில் அசடு வழிகிறது.

எச்சிமியின் புருஷனே "சனியனே! குழந்தையின் மண்டை உடைவதுகூட தெரியாமல் அங்கென்ன முழுகிப்போகிறது? வம்பு பேசுவதில் உள்ள ஸ்வாரஸ்யம் வீட்டு வேலையிலும் பெத்த குழந்தையிடத்திலுங்கூட இல்லாத பீடை எனக்கென்று வாய்த்தது.

வீட்டை அடியோடு மறந்த நாடோடிகளும் வம்பிகளும், அரட்டை யடிப்பதற்காக அவதாரம் செய்துள்ள உதவாக்கரை மூதேவிகளும் உனக்கென்று அகப்பட்டு என் குடியைக் கெடுக்க வந்துசேர்ந் தார்கள். இதோ பாரு. குழந்தையின் மண்டை உடைந்துபோய் விட்டது. நீ நாசமாய்ப் போக. பக்கத்து வீட்டில் என்ன பார்வை? அந்த பெண் கடவுளே என்று இருக்கையில் அதை வயித்தெரிச்சல் கொட்டுவதா உன் வேலை ?" என்று கர்ஜனை செய்தார்.

வாயைத்திறக்காது பேந்தப்பேந்த விழித்தபடியே அகிலாண்டம் முகத்தில் சாணியரைந்தது போன்ற அசட்டு உணர்ச்சியுடன் வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தாள். எச்சிமி குழந்தையைச் சமா தானம் செய்ய முயன்றாள். ஆனால் நல்ல அடிபட்டு சுளுக்கு விழுந்துவிட்டதால் குழந்தை விரைத்துப் போகும்படிக் கத்த வாரம் பித்தது. புருஷனின் வாயும் மூடவே இல்லை. வம்பிகள் வீட்டில் இத்தனை தடபுடல் நடக்கும்போது இதற்குக் காரணமாயுள்ள கிருஷ் ணனின் மனத்தில் எத்தனை வேலை செய்யவேண்டாம்.

பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லவே முடியவில்லை. கூட விருக்கும் உபாத்தியாயர் இவனைப் பார்த்ததும் 'என்ன உடம்பு' என்று கேட்க வாரம்பித்தார். இதற்கென்ன பதில் சொல்வான் பாவம் ? குழந்தைகள் இரண்டும் இன்று கூட வந்திருப்பதையும் அவைகளின் பரிதாபத்தையுங் கண்டு மனம் இளகியது.

'குழந்தைகளின் ஆதரவுக்காகவாவது கல்யாணம் செய்து கொள்ளவேண்டாமா ?' என்று அதை யனுசரித்துப் பல்லவி பாட வாரம்பித்தார். இதைக் கேட்பதற்கே கிருஷ்ணனுக்குப் பிடிக்க வில்லை. "கல்யாணமாம் கல்யாணம்! சார்! தயவு செய்து இனி அந்த பேச்சையே எடுக்காதீர்கள். எனக்கு உலகமே இருண்டு சூன்யமாய் வெறுத்துவிட்டது. என் காலம் இப்படியே முடிந்தால் போதும். இன்னும் வீண் உபத்திரவத்தை விலைக்கு வாங்கி வருந்த வேண்டாம்" என்று பிடிப்பே கொடுக்காது பேசினான்.

குழந்தைகளுக்குத் தலைவாரத்தெரியாமலும் எண்ணெய் தேய்க்கத் தெரியாமலும் அவை மன்னியம்மாவைப் பிரிந்த ஏக் கத்தினாலும் சரியான பராமரிப்பில்லாததாலும் இளைத்துக் கருத்து உடம்பெல்லாம் சிறங்கு வந்து மிகவும் விகாரமாகிவிட்டன.

இந்த வேதனையைச் சகிக்காது கிருஷ்ணனின் அழகெல்லாம் அடியோடு மாறிப்போய் விகாரஸ்வரூபத்தை யடைந்துவிட்டான். அவனைப் பார்ப்பவர்களெல்லாம் "ஐயோ பாவம்!" என்று சொல் லாதவர்களில்லை. கிருஷ்ணனுக்கு குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டு சகிக்க முடியவில்லை. திக்கற்றப் பரதேசித்தன்மையின் கண்ராவி உள்ளத்தை அள்ளித்தின்றது. நெஞ்சம் பதைத்தது. கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

# 27

## அதிகார தேவியும் அகம்பாவப் பாவியும்

கண்ணீர் ஆறுய்ப் பெருகியது. நெஞ்சம் பதைத்தது. திக்கற்றப் பரதேசித்தன்மையின் கண்ராவி உள்ளத்தை அள்ளித் தின்றது. நாகலக்ஷ்மியால் சகிக்க முடியவில்லை. "நாம் யாரோ! இந்தப் பெண் யாரோ! இவளைக் கண்டால் நம் மனது ஏன் இவ்வளவு குழையவேண்டும்? ஐயோ! பாவம். இப்படிப்பட்ட ப்ரகிருதியும் உலகத்தில் இருக்குமா?" என்று நெஞ்சம் பதைத்தது. மதுரத்தின் புலம்பலும் பரிதாபகரமான தோற்றமும் நாகலக்ஷ்மிக்கு எங்குமில்லாத தைரியத்தையும் பலத்தையுங் கொடுத்தன.

"மதுரம்! அழாதேம்மா! இதோ இரு...அடேய் சுப்பா! அந்த ஏணியை இப்பிடிக் கொண்டுவா! காமாக்ஷீ! தட்டிலே சாப்பாடெல்லாம் வைத்து இப்படிக் கொண்டுவா!" என்று பெரிய சட்டம் போட்டாள். அடுத்த நிமிடமே இரண்டும் தயாராயின. நாகலக்ஷ்மி "இந்த விஷயம் வெளிவந்தால் ஜாக்ரதை. எஜமானரிடம் சொல்லுவேன்!" என்று அதட்டிவிட்டு ஏணியால் மாட்டுக் கொட்டிலின் புறக்கடையில் இறங்கினுள்.

பின்னல் சாப்பாடும் இறங்கியது. மதுரத்திற்கோ, 'இச்சம்பவம் பின்னும் எத்தகைய ஆபத்தில் கொண்டுவிடுமோ?' என்ற நடுக்கல் உள்ளுக்குள் சித்திரவதை செய்கிறது. தன்னிடம் இத்தனை அன்புகொண்டுள்ள மனிதர்களும் இருக்கிருர்களா என்று நினைக்கும்போது அவளை யறியாத ஓர் உணர்ச்சி பொங்கியது.

நாகலக்ஷ்மியைக் கண்டதும் அவள் காலைப் பிடித்துக்கொண்டு கீழே பணிந்து கதறியவாறு, "மாமீ! ஈச்வரன் சாக்ஷியாக நான் ஒரு குற்றமும் செய்யாத நிரபராதி. சத்யமாய் நான் கனவிலும் தூய்மை இழந்தவளல்ல. இழக்க நினைத்தவளுமல்ல. என் தலையில் அபாண்ட பழியைச் சுமத்தி என்னை இப்படிச் செய்திருக்கிருர்கள். மாமி! என் ஓர்ப்படியின் மரணத்தறுவாயில் குழந்தைகளை ஆதரிப்பதாக நான் கொடுத்த பிரமாணத்திற்காகவும் அக் குழந்தைகளிடம் கொண்ட அளவு கடந்த ப்ரீதியினுலும் நான் அங்கிருந்தது பெருங் குற்றமாம். நான் கெட்டுப்போய்விட்டேனும். கர்ப்பமா யிருக்கிறேனும். அதை மறைக்கப் பயித்தியம் என்றெரு பட்டம் கட்டினுர்களாம்...மாமீ! என்னல் சகிக்கவே முடியவில்லை.

தற்கொலைக்குப் பலதரம் துணிந்தேன். ஆனுல் என்மீதுள்ள வீண் அபவாதத்தை நானே ஊர்ஜிதப்படுத்துவது போலாகிவிடுமே! என் பரிசுத்தம் தானுகத் தெரியட்டும். எத்தனை நாள்தான் அடைபட்டுச் சாகவேண்டுமோ அப்படியே சாகட்டும்—என்று துணிந்து

தான் நான் வாயைத் திறக்காதிருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே கதறினுள்.

நாக :—மதுரம்! அழாதே. விதி யாரையும் விடாதம்மா! நீ முதலில் இந்த ஆகாரத்தைச் சாப்பிடு...பிறகு பேசலாம். உம்... கையை யலம்பு.

மது :—மாமீ! மகாபாபிஷ்டிக்கு உதவிசெய்யவந்த உங்களுக்கும் என்னுல் ஏதாவது ஆபத்துவந்துவிடும். என்னுடைய துரதிருஷ்ட நிழல் பிறரையும் எரித்துவிடும். மாமி! மாமி! எனக்குச் சாப்பாடு தானு ஒரு கேடு? நீங்கள் போய்விடுங்கள். மாமீ! என்னுல் துன்பம் வேண்டாம். நல்லவர்களுக்குப் பொல்லாப்பு வேண்டாம்.

நாக :—சீ! அசடே! எனக்கு ஒரு ஆபத்தும் வந்துவிடாது. நான் உன்னை முதலில் விடுதலை செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கப்போகிறேன். உலகமே மகா கொடியதாகிவிட்டது. ஓடுகிறவர்களைத்தான் அதிகமாக மிரட்டுகிருர்கள். துணிந்து அக்ரமத்தைச் செய்கிறவர்களுக்கு ஒரு தள்ளுபடியுமில்லை. மகா பதிவிரதைகளைப்போல் நடிக்கும் வேஷக்காரர்களின் சூழல்களை நான் வேண்டியமட்டும் பார்த்திருக்கிறேன். நீ கவலைப்படாதே. உன்னைப் பார்த்தால் சாப்பாட்டைக் கண்டு எத்தனையோ யுகங்களானவள்போலிருக்கிருய். முதலில் சாப்பிடு. பிறகுதான் பேசுவேன்" என்று நயமாகவும் சுதந்திரமாகவும் கூறி, மதுரத்தின் கைகளைத் தானே இழுத்து அலம்பினுள்.

பயந்து நடுங்கியவாறு மதுரம் சாப்பாட்டை இரண்டு கவளம் சாப்பிட்டாள். இத்தனை நாளாக ஆகாரமே இல்லாது குடலும் வயிறும் காய்ந்துபோய்விட்டதால் உஷ்ணத்தின்மேலீட்டால் வாய் முற்றும் வெந்துபோய் முள்ளு முள்ளாக விருந்ததால் அவளால் வாயைக் கூட்டிச் சாப்பிட முடியாது தத்தளித்தாள்.

"ஐயோ! பாவிப்பெண்ணே! பெத்த தாயார் இருந்தால் குத்திக்கொண்டு சாவாள் என்பார்களே! உன் விஷயத்தில் பெத்த தகப்பனே சத்ருவாக உன்னை இம்முறையில் பார்த்து சந்தோஷிக்கும் சண்டாளனுகவன்ருே ஆய்விட்டான்... அம்மா!...இந்த மோரையாவது குடி" என்று நாகலக்ஷ்மி பலவந்தமாக மோரைக் குடிக்கச் செய்து, "மதுரம்! பயப்படாதே. வருத்தப்படாதே. தைரியலக்ஷ்மியைக் கைவிடாதே. நான் கேட்பதற்குப் பதில் சொல்லு. பெத்த அப்பனும் உடன்பிறந்த அண்ணனும் உன்னைக் காப்பாற்றும் பொருப்பைக் கைவிட்டு உனது கால்வயிறு கஞ்சியையும் பிடுங்கி உன் வயிற்றில் மண்ணைப் போட்டுவிட்டு உன்னை இக்கதியிலும் கண்டு களிக்கிருர்கள். உன்னுடைய பரிசுத்தமும் நிரபராதித்தனமும் என்னவாயிற்று? அவர்களே அதைச் சோதிக்க முற்பட்டுவிட்ட பிறகு வேறு என்ன இருக்கிறது? நீ தைரியமாக

என்னோடு வருகிறாயா ! என் கட்டை யிருக்கும் வரையில் உன்னை நான் ஆதரித்து உன் பிற்காலத்திற்கும் உனக்கு வழி செய்கிறேன். என்ன சொல்லுகிறாய் ? எனக்கு நீ சமையல்காரியாக வா ! உன்னை நான் வெறுமைகூடக் கூப்பிடவில்லை.

இவ்வார்த்தை மதுரத்தின் உள்ளத்தில் பெரும் போராட்டத்தைக் கிளப்பிவிட்டது. "அடிமை...பிறந்த நாடும் அடிமை...பெத்த பிதாவுக்கும் அடிமை. உடன்பிறந்தவனுக்கும் அடிமை. அடிமை. அடிமை....இந்த அடிமையின் காலம் எங்கு ஒழிந்தால்தான் என்ன. இத்தனை அன்புடன் அழைக்கும் உபகாரியுடன் சென்று விடலாமா...பெத்த தகப்பனைவிட்டு ஓடிவிட்டாள் என்று ஊரார் ஏசுவார்களா ?...உம்...இப்பொழுதென்ன எச்சும் பேச்சுமின்றி என்னைக் காத்தது மிஞ்சிவிட்டது ? வேண்டுமென்று இளையாளின் வார்த்தையின் கொடுமையால் என்னை சந்நிசிரிக்கவடித்தபிறகு அந்த மனிதன் எனக்கு அப்பனா ? இல்லை ; இல்லை. எனது தகப்பன் சாக்ஷாத் ஜகத்ரக்ஷகன்தான்...அவன் ஆதாவு சாச்வதமேயன்றி இந்த தகப்பன் சாச்வதமில்லை. ஆதரிக்கவேண்டிய நாளில் மனத்தை வாட்டி வதைத்து இப்சித்துத் துன்புறுத்திய மனிதனிடம் இனி எனக்கென்ன பயம் ? என் கையை உழைத்தால் எனக்கு எங்கும் கஞ்சி கிடைக்கிறது. ஏன் இந்த மாமியுடன் போகக் கூடாது ?" என்று தனக்குள் குழம்பினாள்.

மதுரத்தின் மனக்குழப்பத்தை யறிந்த நாகலக்ஷ்மி அவளது முதுகில் தட்டிக்கொடுத்துத் தடவினாள். முதுகெலும்பு முற்றும் ஆணி பொத்துவதுபோல் பொத்தியதைப்பார்த்ததும் நாகலக்ஷ்மியின் மனம் துடித்தது. "ஐயோ ! அடிபாவிப் பெண்ணே ! எலும்புக் கூடாகியபிறகும் பிராணன் எப்படியோ ஊசலாடுகிறதே !...என்ன யோசிக்கிறாய் !" என்று கேட்கும்போது வீதிக்கதவைத் திறக்கும் ஓசையைக் கேட்டு மதுரம் தீயை மிதித்தவள்போல் அலறித்துடித்தவாறு, "மாமீ ! மாமீ ! கிழவி வருகிறாள். நீங்கள் போய்விடுங்கள் ! போய்விடுங்கள். உங்களுக்கும் ஆபத்து வந்துவிடும். என் பாவம் என்னுடனேயே இருக்கட்டும். மாமீ ! மாமீ !" என்று நெருப்பின் மீது புழுவெனத் துடித்தாள்.

நாகலக்ஷ்மி மதுரத்தைத் தட்டிக்கொடுத்து தைரியப்படுத்தி, "மதுரம்! பயப்படாதே! நானும் ஒருகை பார்த்துக்கொள்ளுகிறேன். 'அநியாயமாய் ஒரு பெண்ணைக் கொலைசெய்வதற்கொப்பாக பெத்த தகப்பனும் ஒரு சண்டாளக் கிழவியும் இம்மாதிரி சிறையில் வைத்திருக்கிறார்கள்' என்று நானே போலீஸில் கம்ப்ளேண்டு கொடுத்து உன் அப்பனையும் அந்த மொட்டைக்கிழவியையும் ஒரு ஆட்டு ஆட்டி வைக்கிறேன் இரு. பயப்படாதே" என்று சற்று உரத்த குரலிலேயே கூறினாள்.

இதைக் கேட்டுக்கொண்டே தாடகாதேவியைப்போல் வரும் ருத்திராக்ஷரப்பூனை அப்போதும் ஜபமாலையை உருட்டியபடியே "ஐயையோ! யாரடீ அங்கே? யாரோடே ஒருகை பார்க்கப்போகிருளாம். அந்த குடிகெடுக்கும் நாயெ நான் பாத்துக்கரேண்டீ! பாத்துக்கரேன்" என்று உறுமியவாறு உள்ளே வந்தாள்.

பூனையைப்போல் பதுங்கியபடியே பின்னல் வரும் நடராஜனுக்கும் சற்று வியப்பாகவே இருந்தது. ஜெயிலைவிடக் காவலாகப் பூட்டி வைத்திருக்கும் இடத்தில் இன்னொரு மனுஷ்யாள் யார் வந்திருப்பது என்று சற்று ஆத்திரத்துடன் உற்று நோக்கினன். அடுத்த நிமிடம் அவனது சப்த நாடிகளும் அப்படியே நின்று போய் ரத்த ஓட்டம் தடைபட்டுக் கட்டைபோலாகிவிட்டான்.

நாகலக்ஷ்மி தைரியத்தைவிடாமல் பேசத்தொடங்கி "உம்...ஒரு கை இல்லாவிட்டால் ஒன்பது கை பார்த்துக்கொள்ளு; பயமில்லை. நான் யாரென்று கேட்கிருய்? நான்தான் நாகலக்ஷ்மி. உன் பெண்ணுத்தில் வைத்தியத்திற்காக வந்திருந்தவள். உன் மாப்பிள்ளையின் மேலதிகாரியின் தர்மபத்னி. போதுமா! என்னைப்பற்றி இன்னும் ஏதாவது தெரியவேண்டுமா?" என்று அதிகாரதோரணைத்வனியிலேயே கூறினுள்.

இதைக் கேட்ட நடராஜனுக்கு முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்த திகிலும் பயமும் பிடித்துக்கொண்டன. கிழவிக்குள்ள ஆத்திரத்தில் நாகலக்ஷ்மியை அப்படியே கிழித்துவிடலாமாவென்று தோன்றியது. அதற்குள் நடராஜன் தடதடவென்று நாகலக்ஷ்மியின் முன்பு வந்து, "நமஸ்காரம்...மன்னிக்கணும். மதுரத்திற்குச் சித்தஸ்வாதீனமில்லாது போய்விட்டது. அதனல்...என்று இழுத்து இழுத்து முடிப்பதற்குள்,

நாகலக்ஷ்மி தைரியத்துடன் பேசத் தொடங்கி, "ஐயா! வாத்தியாரே! இது பள்ளிக்கூடமல்ல. நான் மாணுக்கனல்ல. விஷயம் பூராவும் எனக்குத் தெரியும். பெத்த தகப்பன் என்று பெயரை வைத்துக்கொண்டு நிரபராதியான ஒரு பரதேசியை இப்படித்தானு வதைப்பது? அநியாயமாய்க் கொலைசெய்ய எத்தனித்ததாக நானே உங்களிரண்டுபேர்மேலும் வழக்கு எடுக்கத்தயாராயிருக்கிறேன். உமக்குப் பெத்த பெண் என்கிற பாசம்தான் இல்லை என்ருல் உண்மையும் பொய்யுங்கூடவா தெரியாது கண்மூடிவிட்டது?

நான் யாரோ, இந்தப் பரதேசிப் பெண் யாரோ! இவளிடம் எனக்குஉண்டாகும் பச்சாத்தாபங்கூட உமக்குஉண்டாகவில்லையே? கொடும்பாவிகளாகிய உமது மாமியாரும், மனைவியும் நினைக்கிறபடி இந்த பெண் தோஷியா, நிர்த்தோஷியா என்பதை அறியும் சக்தி உமக்கில்லை? அறியும் கடமை உமக்கில்லை? இந்தப் பெண் உமது உதரத்தில் ஜனித்தவளல்ல?...,வெட்கக்கேடு. ஒரு மூளைகெட்ட

மொட்டச்சி சொன்னுளென்று இத்தனை கடுமையாக இவளை நடத்தி னீரே எங்கே உமது சந்தேகம் தெளிந்ததா! குழந்தை பிறந்ததா!

ஒரு மனிதனின் தலையில் மாணிக்கம் இருக்கிறதென்று ஒருமடை யன் சொன்னுல் உடனே முன்பின் யோசிக்காமல் அவன் தலையை வெட்டி மாணிக்கத்தைத் தேடுவதா!...ஒரு பெண்பிள்ளை வயிற்றில் புதையலிருக்கிறதென்று ஒரு அறிவிலிசொன்னுல் உடனே வயிற்றை அறுத்துவிடுவதா! சிச்சி! இவைகளெல்லாம் மனிதன் செய்யக் கூடிய வேலைகளா!

உமக்கு ஒரு டஜன் குழந்தைகளிருக்கிறதே, அவைகள் நன் ருக இருக்கவேண்டாமா! இந்த மகாபாவி செய்யும் அக்ரமத்தை நீர் சகிக்கின்றீர். நானே கடவுள் சகிப்பாரா!....'என் பெண்ணுக் குப்பரிவதற்கு நீ யார்?' என்று என்னைக் கேட்கலாம். கொலை செய் யும் பரிதாபத்தை யாரும் பார்த்துச் சகிக்கமாட்டார்கள். அதைத் தடுக்க தெருவில்போகும் பிச்சைக்காரனுக்குக்கூட அதிகாரம் உண்டு. அதைப்பார்த்தும் பேசாதுஇருந்தால்தான் குற்றம்...இதோ! இந்தப் பரிதாப பிம்பத்தைப்பாரும். எலும்புக்கூடாகிவிட்ட கண் ராவியைப் பாரும். நீங்கள் செய்த இம்சையால் வாயும் வயிறும் வெந்து ரணமாகிவிட்ட காக்ஷியைக் கண்ணுரப்பாரும். இவள் செத்தால் காடெல்லாம் எலும்பாகிவிடாது. ஆனுலும் எவன் இந்த உலகத்திற்கு ஒரு ஆத்மாவை அனுப்புகிருனே அவனே அழைத் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறன். மத்தியில் அநியாயக் கொலை, அதிலும் பெண்ஹத்தி எதற்குச் செய்யவேண்டும்?

ஒரு பெண்ணைவைத்துக் காப்பாற்றக் கையாலாகவில்லை என்ருல் இப்படியா இம்சை செய்வது? ஒரே யடியாகக் கொலை செய்திருந்தால் பாதகமேயில்லையே! உலகத்தில் பதினுயிரம் பேர்கள் இரண்டாந்தாரம் விவாகம் செய்துகொண்டிருக்கிருர்கள். என் பர்த்தாவுக்குக்கூட நான் இரண்டாம் மனைவிதான். என் மூத்த வளுக்கு இரண்டு குழந்தைகளுண்டு. ராமண்ணு என் மூத்த வளின் பிள்ளைதான். இந்த நிமிஷம் வரையில் அவன் என் மகனுகவே வளர்ந்து வருகிருன். உங்களைப்போன்ற புண்ணியாத் மாக்களாலும், உங்கள் தருமபத்தினியைப்போன்ற பத்திரகாளி காதேவிகளாலும், உங்கள் மாமியாரைப்போன்ற ப்ரம்மராக்ஷஸிக ளாலும் உலகமே இரண்டாங் கல்யாணத்தை வெறுக்கும் பயங் கரத்தை யடைந்துவிடும். அனியாயத்திற்கும் ஓர் எல்லையுண்டு'' என்று மூச்சுகூட விடாமல் ஆக்ரோஷத்துடன் கூறும் பாணம் போன்ற வார்த்தைகளைக் கேட்கக்கேட்க நடராஜனின் உயிர் ஊசலாடும் நிலைமையில் வந்துவிட்டது.

மதுரம், ஏதோ பெரிய விபரீதத்திற்குத்தான் இம்மாதிரி சம்பவம் நிகழ்வதாக எண்ணித் துடிக்கிருள்.......கிழவிக்கு

நிலையே புரண்டுவிட்டது....இனி தனக்கு நிச்சயம் வேலை போய் விடும். இந்த அநியாயக்குற்றத்திற்காக தண்டனையும் கிடைப்பது நிச்சயம். இனி தன் வாயில்தானே மண்ணைப்போட்டுக்கொண்டது போலாகிவிட்டதே. என்ன செய்வது, என்ற பயமும் நடுக்கலும் நடராஜனுக்குண்டாகி வதைக்கின்றன. நாகலக்ஷ்மியின் தோற்றம் உண்மையில் நடராஜனுக்கு ஓர் பயங்கர தேவதையைப்போன்றும் தன்னைச் சபிக்கவந்த ஓர் காளியின்உருவம் போன்றும்தோன்றியது.

மதுரத்தை அன்று இரவோடிரவாக இருட்டில் இழுத்துவந்து தள்ளிவிட்டுச் சென்ற பிறகு, அவளை இதுபரியந்தம் பார்க்கவே இல்லை. இப்போது அவளைப் பார்த்ததும் நடராஜனுக்கே தூக்கி வாரிப்போட்டது. நாகலக்ஷ்மி மதுரத்தை இழுத்துக்காட்டியபோது அவளது கண்ராவியை முற்றும் பார்த்ததும் நடராஜனால் தாங் கவேமுடியவில்லை. இளும்புக்கூடாக ஒட்டி உலர்ந்துபோயிருக் கும் உடம்பையும், காலில் சிறிது வீக்கம் எடுத்துள்ள பரிதாபத் தையும் எப்படித்தான் கண்டு சகிக்கமுடியும்?

அப்படியே அசையாத கம்பம்போல் நின்றுவிட்டான். அவ னுக்கு என்னபதில் சொல்வது, இந்த விபத்திலிருந்து எப்படி தப்பு வது என்கிற பயம் பிடித்துவிட்டது. உடனே நாக்குழறியவாறு நாக லக்ஷ்மியை நோக்கி, "அம்மணி! என்னைவிட நீங்கள் சிறியவர்க ளாதலால் உங்கள் காலில் விழுந்து வணங்கக்கூடாது. உங்களை நான் சாக்ஷாத் லக்ஷ்மியாகவே நினைக்கிறேன். கண்ணிருந்தும் குருடனயிருந்த என் கண்களைத் திறக்கச்செய்த மகா உபகாரி யாகிய உங்களுக்கு நான் என்னதான் கைம்மாறு செய்வேன்? என் புத்தி கெட்டுவிட்டது. என் ஜென்மமே பாழாகிவிட்டது. எப் படியாவது என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றி ஆதரிக்க வேண்டும். என் வேலையில் மண்ணைப் போடக்கூடாது. நான் முட்டாள்தனமாகச் செய்ததெல்லாம் மிகவும் தவறு என்பதை நானே ஒப்புக்கொண்டு மதுரத்தினிடமே மன்னிப்பும் பெறுகிறேன்.

தாயே! இனி நீங்கள்தான் மதுரத்தின் பெத்த தாயார். அவளை நீங்கள் என்ன செய்யச்சொல்கிறீர்களோ, அதேமாதிரி செய்கி றேன். அநியாயமாய் அவளை வருத்தி உபத்திரவம்செய்துவிட்டேன். இனிமேல் புத்தி வந்தது" என்று பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் வாத்தியாரிடம் மன்னிப்பு கேட்பதுபோல் கேட்டுத் தவித்தார்.

நாக:—ஐயா! தாக்ஷிண்யமின்றி நிர்த்தாக்ஷிண்யமாய் உமது வேலையைப் போக்கிவிட்டு மறுகாரியம் செய்திருப்பேன். எனது ஆபத்தான சமயத்தில் இடங்கொடுத்து உதவிசெய்ததற்கான ஒரு நன்றியறிதலுக்காக நான் இப்போது பேசாமலிருக்கிறேன். மதுரம்! உன் பிரியப்படியே நீ எங்கிருக்கவிரும்புகிறுயோ, அதை தாராள மாகச் சொல்லு. பயப்படாதே.

மதுரம் பயந்து நடுங்கியபடியே தகப்பனாின் முகத்தைப் பார்க்கிறாள்; நாகலக்ஷ்மியின் முகத்தைப் பார்க்கிறாள். சில வினாடிகள் குழம்பிப் போய்விட்டாள். பிறகு சற்று தைரியம் பிறந்தவளாய் தகப்பனாரை நோக்கி, "அப்பா! உலகத்திற்கே தலைச் சுமையாய், பெரும்பாரமாய் கடவுள் என்னைப் பிறப்பித்துவிட்டார். எனக்கென்று கால்வயிற்றுக் கஞ்சிக்கிருந்ததுவும் போய்விட்டது. இனி நான் வெறும் தண்டச்சோற்று தடிராமியாய் உட்கார்ந்து தின்பது மிகவும் கேவலமானது. சித்தியின் கோபத்திற்கு நான் என்றென்றும் ஆளாகவே நேரும். ஆகையால், இந்த மாமியிடம் சமையல் செய்வதற்குக் கூப்பிடுகிறார்கள், அதற்கே நான் போகிறேன். என் கையை யுழைத்துக் கஞ்சிகுடித்து என் காலத்தை இந்தம்மாளின் ஆதரவிலேயே கழித்துவிடுகிறேன். உங்களுக்கும் கடன் உபத்திரவம் கூறத்திறமில்லை. என் ஒருத்தியின் சுமையாவது குறைந்தால் நல்லதுதானே. நானும் நிம்மதியாயிருப்பேன். அதுதான் எனக்குப் பிடிக்கிறது" என்றாள்.

நடராஜனுக்கு சற்று யோசனையுண்டாகியது. ஆயுள் பூராவும் அடிமையிலும் அடிமையாகவிருப்பதைவிட இவள் இதுவரையில் பட்டசிரமத்திற்குச் சற்று மனவிச்ராந்தி உண்டாகும்படி விட்டுப் பிடிப்பதே நலம். அதிலும் அதிகாரி விரைத்துக்கொண்டால் அதோகதியாகிவிடும். அதோடு இந்த சமயத்தில் இவளை மறுபடியும் வீட்டிற்கு அழைத்துச் சென்றாலும் சின்னம்மாளுக்கிருக்கும் க்ஷாத்திரத்தில் கொலை செய்தும் போட்டுவிடுவாள். அன்றி கொலைக் குற்றத்திலாவது மாட்டிவிடுவாள். எல்லாவிதத்தையும் தீர யோசித்தால் இவள் இஷ்டப்படிபோவதேமேல் என்றுதான் தோன்றுகிறது. ஆனால், முன்பு நாகலக்ஷ்மி கல்யாணத்தைப்பற்றிப் பேச்சுகொடுத்தது அவர் மனத்தில் தோன்றி சற்று கலக்கத்தையளித்தது.

மகா யூகசாலியும் சாதுர்யக்காரியுமாகிய நாகலக்ஷ்மி ஒரு மாதிரியான கோபச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "சார்! உங்கள் தியக்கத்தின் காரணத்தை நான் அறிவேன். இஷ்டப்படாதவர்களைக் கட்டாயப்படுத்தி எந்த காரியத்தையும் செய்யச்சொல்லும் மூடம் நானல்ல. அதைப்பற்றிக் கவலையே வேண்டாம். அப்படி சந்தேக மிருப்பின் உம்மிடமே ஜாக்ரதையாக வைத்துக்கொண்டு ஆதரியும். இல்லையேல் அவளிஷ்டப்படி யனுப்பினால் மாதம் பத்து ரூபாய் சம்பளங்கொடுத்து ஆதரிக்கிறேன். அந்த ரூபாய்களாவது சேர்ந்தால் அவள் பிற்காலத்திற்கு உதவும். நன்றாக யோசித்துச் செய்யும்" என்றாள்.

"மாதம் பத்து ரூபாய் அவளுக்கு வருவதால் எனக்கும் ஆபத்துக்காலத்தில் உதவும், நமக்கும் சம்சாரம் பெருகிவிட்டதால் சாப்பாட்டுக்கே தகராறாக விருக்கிறது. இப்படியே செய்துவிடலாம்" என்று நடராஜன் தனக்குள் பூர்ணதிருப்தியுடன் முடிவுசெய்து

கொண்டு "சரி. உங்களிஷ்டப்படியே செய்யுங்கள். எனக்கு ஆக்ஷேபனையே இல்லை. இனியாவது அவள் இந்த கஷ்டத்தி லிருந்து விடுதலை யடைந்து உங்களிடம் சௌக்கியமாயிருக்கட்டும்" என்று கூறி உத்திரவு கொடுத்துவிட்டார்.

அப்போது ஆத்திரமும் ஆச்சரியமும் வியப்பும் கலந்த பிம்பம் போல் ஜபமாலையை உருட்டிக்கொண்டிருக்கும் ருத்திராக்ஷப்பூனை கண்கள் சிவக்க "ஐயையோ! இதென்ன வேடிக்கையாயிருக் கிறதே! கிணறுவெட்டப் பூதம் கிளம்பினாற்போல் நீங்கபோய் இந்த பொம்மண்டாட்டிகிட்ட சரணாகதி பண்றங்களே!"...என்று முடிப்பதற்குள் நடராஜனுக்கே கோபம் வந்துவிட்டது. "சரி! சரி. உங்க உபதேசத்தைக் கேட்டுத் தலையாட்டும் பெருமாள்மாடாக இருந்ததெல்லாம் போதும். படுபாவிகள் மகா கொடிய மனத்தை யுடைய பிரம்மராக்ஷஸிகளின் உபதேசத்தால் நான் பட்ட சுகம் போதும். பேசாது போய்விடுங்கள்!"...

அம்மா மதுரம்! கண்ணீர்விடாதே. உன்னை செய்த சித்திர வதை ஒருநாளும் வீண் போகாது. அதை இந்தச் சண்டாளிகளும் நானும் அனுபவித்தே தீருவோம். நீ மாமியுடனே சந்தோஷமாயிரு. இம்மாதிரி ஒரு தகப்பன் இருப்பதைவிட இல்லாதிருப்பதே மேல்." என்று அவர் கூறிமுடிக்கு முன்பு மதுரம் புலம்பியபடியே, "அப்பா! என் பாவத்திற்குப் பிறரை நோவதில் பலனென்ன? இனிமேலாவது நீங்கள் துன்பமின்றிச் சுகமாயிருந்தால் போதும். அதோடு, இனியாவது எனது பரிசுத்தம் உங்களுக்குத் தெரிந்து அதை நம்பி இருந்தால் போதும். என் ஜென்மத்தில் நான் அடையும் சுகம் இதுதான்" என்று தாங்கமாட்டாத துக்கத்துடன் கூறினாள்.

நடக்கமாட்டாது தத்தளிக்கும் பலஹீன நிலைமையிலிருக்கும் மதுரத்தை நாகலக்ஷ்மி வீதிவழியாகவே பக்கத்து வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனாள். அப்படியே விழுங்கிவிடுபவள் போல் விழித்துப் பார்க்கும் ருத்திராக்ஷப்பூனையைக் கண்ட நாக லக்ஷ்மி, "பாட்டீ! இனிமேல் வாலாட்டாதே. பகவான் ஒருத்தன் இருக்கிறான். அவனுக்கு நீ என்றைக்கானாலும் பதில் சொல்லித் தானாகவேண்டும். தெரிந்ததா! ஜாக்கிரதை" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

ஐயோ, பாவம்! கிழவியின் நிலைமை த்ரிசங்குச்வர்க்கம் போலாகிவிட்டது. அவளால் எதுவுமே பேச முடியவில்லையெனினும் ஆத்திரம் மட்டும் தலைக்குமேல் ஒரு முழம் உயர்ந்துவிட்டது. குதித்துக் குதித்துத் தாண்டவமாடியபடியே அதே க்ஷணத்தில் ருத்திராக்ஷம் மடிஸஞ்சிசகிதம் பெண்ணின் ஊருக்குக் கிளம்பிவிட்டாள்.

நாகலக்ஷ்மியின் தங்கையின் புருஷன் தாசில்தாராகையால் தங்கையுடன் கூட கிராமங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்த

18304

நாகலக்ஷ்மி ஜமாபந்தி முடியும் வரையில் இல்லாமல், அதே இரவு மதுரத்தை யழைத்துக்கொண்டு ஒரு வேலைக்காரனின் துணையுடன் ஊருக்குப் போய்விட்டாள். இந்த ஆச்சரியத்தைப் பார்த்தால் யாருக்குத்தான் வியப்பாயும் பெரிய அதிசயமாயுமிருக்காது? இதையோர் வேடிக்கைபோல் இமைகொட்டாது பார்த்தார்கள். ஒன்றுமே புரியவில்லை.

## 28

## புனிதத் தொண்டும் புதிய கிளர்ச்சியும்

ஒன்றுமே புரியவில்லை. இதையோர் வேடிக்கையைப்போல் இமைகொட்டாது பார்த்தார்கள். பார்வதியைவிட ஸரஸ்வதிக்குச் சற்று அதிகம் வயதாகி இருப்பதால் அவள், பஜனைகோஷ்டியைப்போல் வரும் கிராமப் புனருத்தாரண சேவக சேவகிகளை வியப்பே வடிவாய்ப் பார்த்தபடியே நின்றாள்.

பெண்களும் ஆண்களுமாக சுமார் 20 பேர்களுக்குமேலாக ஓர் பெருங்கூட்டத்துடன்,

ராகம்-நாதநாமக்கிரியை : தாளம்-ஆதி :

பல்லவி

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதுமென்போம் (வந்தே)

சரணங்கள்

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே. (வந்தே)

ஒன்று பட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்? (வந்தே)

எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வந்தே)

என்ற பாரதியார் பாட்டை ஒருத்தி முதல் பாடுவதும், மற்றையோர் சந்தை பாடுவதுமாகப் பாடிக்கொண்டேவந்தார்கள். சில பெண்கள் வீதியைப் பெருக்கி குப்பைகளை எடுத்து தூரக் கொட்டிச் சுத்தம் செய்தபடியே வருகையில், எந்தக் குழந்தைகள் மூக்குச்செளியுடனும் சிறங்குடனும் நாறுகின்றனவோ, அவைகளைச் சற்றும் அசங்கியமில்லாமலே மூக்கைத் துடைத்தும் சிறங்குக்கு மருந்துகள் போட்டும், மிச்சத்தை அவைகளின் தாய்மார்களின் கையில் கொடுத்தும் சுகாதாரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்தார்கள்.

கவனிப்பாரற்று, பார்ப்பதற்குப் பரிதாபம் சொட்டும் நிலைமையில் அழுக்குப் பாவாடையும் ஈறும்பேனும் நிறைந்து நாற்றமும் சிடுக்குமான தலையுடன் விகாரமாக நின்றிருந்த குழந்தைகளைப் பார்த்ததும் பிரசாரகர்களுக்கு "ஐயோ பாவம்!" என்கிற பரிதாபம் உண்டாகியது.

துணியால் குழந்தைகளின் முகத்தை நன்ருகத் துடைத்தவாறு, "பாப்பா! எம்மா! தலை இத்தனை நாற்றம் நாறுகிறது? உங்கம்மா உங்களுக்குத் தலை பின்னுவதில்லையா!" என்று ஒருத்தி கேட்டாள்.

ஸரஸ்வதி சற்று விவரம் தெரிந்த குழந்தையாகையினுல் முகம் சுருங்கி துக்கம் பொங்கிவிட்டது. கண்களைக் கசக்கிக்கொண்டே நெஞ்சை அடைக்கும் வருத்தத்துடன் "எங்களுக்கு அம்மாவே இல்லே மாமி! அவ செத்துப்போயிட்டா! எங்க மன்னியம்மாதான் இருந்தா! அவளெயும் அவா அப்பா அழைச்சுண்டுபூட்டா மாமி! எங்கப்பாக்கு தலெவாரவே தெரியலே. அதான் இப்படியாயிடுத்து'' என்று கூறி முடிப்பதற்குள் தேம்பித் தேம்பி அழுதுவிட்டாள்.

ஏதோ காரியமாக கிருஷ்ணன் வெளியே சென்றிருந்ததால் குழந்தைகள் மட்டும் தனியாய் நின்றிருந்தார்கள். ஸரஸ்வதி கூறிய பரிதாபகரமான வார்த்தைகள் அந்த தேச சேவிகைகளின் மனத்தை யுருக்கின. இருவரும் ஆளுக்கொருத்தராக முடிந்தவரையில் தலையின் சிடுக்கை விடுத்து சிறங்கையலம்பி மருந்து போட்டு மேல் பூச்சாக தலையை வாரிப்பின்னி, முகத்தைக் கழுவி பொட்டு வைத்துவிட்டு "எம்மா, பாப்பா! ஒங்கப்பா எங்கேம்மா, ஐயோ, பாவம்! ஒங்களே பாத்தா வருத்தமாயிருக்கிறது. நாங்கள் இன்னும் பத்து நாளைக்கு இந்த ஊரில்தான் தெற்குகோபுரவாசல் சத்திரத்தில் தங்கியிருக்கப்போகிருேம். நீங்களிருவரும் அங்கு வந்தால் இந்த சிறங்குக்கு மருந்துபோட்டு தலையை நன்ருக சிடுக்கு விடுத்துவிடுகிருேம். வருகிறீர்களா?'' என்று அன்பாகக் கேட்டார்கள்.

ஸர:—மாமீ! எங்கப்பா அழைச்சுண்டுவந்தா வருவோம். நீங்க ரொம்ப நல்லவாளா இருக்கங்கோ மாமீ! எங்களே பாத்து அசங்கியப்படாமே தலைவாரினீளே! அடுத்தாத்து மாமியும் எதித்தாத்து பாட்டியும் எங்களெ பாத்தாலே முகத்தைச் சுளிக்கிரு

அவாத்துபசங்களெ எங்களோடே சேரவிட்றதில்லே மாமீ! எங்க சிறங்கும் பேனும் ஒட்டிக்குமாம். அந்தப் பசங்கல்லாம் எங்களே பரிகாஸம் பண்றது மாமி. எங்களுக்கும் எங்கம்மா இருந்தா தினம் தலைவாருவாளோன்னே! "மன்னியம்மாவாவது இருந்தா அவ பின்னுவா! ஒத்தருமில்லாமே போயிட்டா மாமீ!" என்று சொல்லும் போது ஸரஸ்வதிக்கு தாங்கமாட்டாது அழுகை வந்துவிட்டது.

மனம் உருகிய சேவகிகள் குழந்தைகளைத் தட்டிக்கொடுத்துச் சமாதானம் செய்து தின்பண்டங்களைக் கொடுத்துப் பின் "பாபா! நாங்கள் போகிறோம். நீங்கள் வாங்கோம்மா! அழவேண்டாம். ஸ்வாமியை வேண்டிண்டு பஜனை பண்ணு எல்லா வியாதியும் பறந்து ஓடிப்போய்விடும். கவலைப்படாதேம்மா!" என்று கூறிப்பின் பஜனையுடன் கலந்துகொண்டார்கள். அவர்கள் சென்ற வழியையே நோக்கிக்கொண்டு வெகு நேரம் வரையில் தெருவிலேயே நின்ற குழந்தைகள் தகப்பனாரின் வருகையை வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வெளியே சென்றிருந்த கிருஷ்ணன் திரும்பிவந்தான். குழந்தை களுக்குத் தலைப்பின்னிப் பொட்டு வைத்திருப்பதைப் பார்த்ததும் அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. புண்ணாய் நொந்திருக்கும் இதயத் தில் இந்த ஆச்சரியம் ஒரு புதுமையாக விருந்தது.

தகப்பனாரைப் பார்த்ததும் குழந்தைகள் "அப்பப்பா! எங்களெ பாத்தியாப்பா! சற்று முன்னேதான் யாரோ காந்திக்காரா பஜனை பண்ணிண்டு போனா! அதுலேரெண்டு மாமி ரொம்ப நல்லவாப்பா! நம்ப மன்னியம்மாமாதிரி ஆசெயா எங்களுக்குத் தலை பின்னிவிட்டு எல்லாம் பண்ணினாப்பா! அவா நம்ப ஊர் சத்திரத்துலேதான் இருக் காளாம். எங்களெ அங்கே வரச்சொன்னாப்பா! அழைச்சிண்டு போரயாப்பா!" என்று கேட்டார்கள்.

கிருஷ்ணனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஏதேதோ ஞாப கத்தினால் மனம் குழம்பிப் போய்விட்டது. கையில் ஒரு பத்திரி கையை வைத்துக்கொண்டு படிப்பதுபோல் நாற்காலியில் உட் கார்ந்து முகத்தை மறைத்துக்கொண்டான். கண்ணில் நீர் மடமட வென்று வழிந்துவிட்டது.

குழந்தைகள் தகப்பனாரின் கண்ணீரைக்கண்டு மனம் தவித்த வாறு, இருபெண்களும் கிருஷ்ணனின் இருதோள்களையும் பிடித்துக் கொண்டு "ஏம்பா அழறே! அந்த மாமிகளிடம் ஏன் தலைபின்னிண் டேன்னு கோவிச்சிக்கிறயாப்பா! நீ அழுதால் எங்களுக்கும் அழுகை வருதுப்பா! அழாதேப்பா!" என்று எண்ணீர் பெருகக்கூறினார்கள்.

கிருஷ்ணனின் புகையும் மனம் இந்த பச்சைக்குழந்தைகளின் புலம்பலால் பின்னும் பற்றி எரிந்தது. உண்மையில் அவன் மனத் தில் பொங்கிவரும் துக்கத்திற்குக் காரணம், நாளை பொழுது விடிங்

தால் பங்கஜத்தின் திவசம். அதைச் செய்வதற்கு நாதியற்று விட்டது. யாரையோ பிடித்து ஏற்பாடு செய்வதற்குத்தான் வெளியில் சென்றிருந்தான். தான் இருந்தும் குழந்தைகளுக்குத் தலை பின்னுவதற்குக்கூட வகையற்றக் கட்டையாக இருந்தென்ன, இறந்தென்ன என்று வருந்துகையில் யாரோ தயவு காட்டி குழந்தைகளுக்குச் செய்திருப்பதைக் கண்டு மிகவும் துக்கம் பொங்கிவிட்டது.

"எல்லாம் இப்போதுதான் நிகழ்வதுபோலிருக்கிறது. இதற்குள் பங்கஜம் மறைந்து இத்தனை வருடமாகிவிட்டதே!" என்று நினைக்கும்போது அவனால் தாங்கவேமுடியவில்லை. குழந்தைகளை வாரியணைத்துக் கட்டிக்கொண்டு "கண்ணா! நான் கோவிச்சக்கலேப்பா! பெற்ற தாயாரில்லாதவர்களுக்கு ஊரெல்லாம் தாய். என்று ஒரு பழமொழியுண்டு. அந்த மாதிரி உங்களுக்கு ஊராராவது வந்து தலைபின்னுர்களே என்ற சந்தோஷத்தினுல் எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. வேறொன்றுமில்லையம்மா!" என்றான்.

குழந்தைகள் சந்தோஷத்துடன் பேசத்தொடங்கி "அப்பி டின்னு எங்களே அங்கே அழச்சிண்டு போரயாப்பா! அந்த மாமிகள் ரொம்ப ரொம்ப நல்லவாப்பா! கட்டாயம் வான்னு சொன்னுப்பா! எங்களே சாயங்காலம் அழச்சிண்டு போப்பா!" என்று கொஞ்சலாகக் கேட்டார்கள்.

குழந்தைகள் எப்படியாவது சாந்தியடைந்து சமாதானமாயிருந்தால் போதும் என்று எண்ணியவனுய் அப்படியே அழைத்துப் போவதாய்க்கூறித் தேற்றினுன். அன்று பிற்பகல் எப்போது வருமென்று ஏங்கி எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் குழந்தைகள்.

இதற்குள் அந்த கிராமம் முற்றும் பஜனை கோஷ்டியைப் பற்றியும் அதில் வந்த பெண்களைப்பற்றியுமே பேச்சு எங்கு பார்த்தாலும் முழங்கியது. தூஷித்துப் பேசுவோரும், பூஷித்துப் பேசுவோரும், ஆச்சரியப்படுவோரும் அதைப்பற்றி உணர்ச்சியேயற்று ஜடம் போலிருப்போருமாகப் பலவிதங்கள் காணப்பட்டன. எந்த காலத்திலும் எந்த தேசத்திலும் இம்மாதிரியான ஓர் பழக்கம் மக்களிடையே உலாவுவது சகஜமென்பதை நாம் இப்போதும் காண்கிறோம்.

கிருஷ்ணன் வீட்டு விஷயத்தில் ஜனங்கள் காட்டிய வினோதத்தைப் பார்த்திருக்கையில் இந்த விஷயம் அவனுக்கு ஓர் வியப்பாகவே தோன்றவில்லை. குழந்தைகளை அழைத்துக்கொண்டு கிருஷ்ணன் அந்த சத்திரத்திற்குச் சென்றான். அங்குள்ள ஆனந்த சுகவாஸிகளைக் கண்டதும் கிருஷ்ணனின் உள்ளத்திலும் அவனை யறியாத ஓர் இன்ப உணர்ச்சி பரவியது. முகத்திலும் இதயத்திலும் தொங்கிக்கிடக்கும் துக்கப் புயலுக்கும் மத்தியில் ஏதோ ஒருவிதமான சாந்தியின் அமைதி ஒரு வினுடி குடிகொண்டது.

அங்குள்ள சேவக சேவகிகள் ராட்டினத்திலும், தக்ளியிலும் நூல் நூற்போரும், நூற்ற நூலைச் சுற்றுவோரும், பஞ்சுபதம் செய்வோருமாக இருப்பதை பார்த்துக்கொண்டே நின்றான். ஸரஸ்வதியும் பார்வதியும் காலையில் வந்த பெண்களையே தேடிக் கண்டுபிடித்து, "அப்பா! அப்பா! அதோ நூல் நூற்கிறார்களே! அவர்கள்தான் காலையில் வீட்டிற்கு வந்தார்கள்" என்று கூறிக்கொண்டே ஓட்டமாக ஓடி அவர்கள் எதிரில் சென்று "மாமீ! இவர்தான் எங்கப்பா! நீங்கள் சொன்னபடியே நாங்க வந்துட்டோம்" என்றுகுதித்துக் கொண்டே கூறினாள்.

அப்போது அவள் கண்களில் பிரகாசித்த ஓர் ஆனந்த பிரகாசத்தைக்கண்ட கிருஷ்ணனின் உள்ளம் பூரித்தது. அவன் மரியாதையாய்த் தலை குனிந்தபடியே, "அம்மா! நமஸ்காரம். குழந்தைகளுக்கிருக்கும் சந்தோஷத்தைக்கூறவே திறமில்லை. காலைமுதல் உங்களைப் பற்றியே பேசிக்கொண்டு இங்கு வருவதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பரதேசிக் குழந்தைகளிடம் அன்பு காட்டத் தங்களைப் போன்ற தியாகிகளைக் கடவுள் காட்டியிருப்பது அவர்கள் செய்த பாக்கியம்" என்று மரியாதையாய்க் கூறினான்.

சேவகி நூலை நூற்றபடியே, "குழந்தைகளா! இப்படி உட்காருங்கள். ஐயா! நமஸ்காரம். இப்படி உட்காருங்கள். குழந்தைகளை அழைத்துவந்ததற்காக மெத்த சந்தோஷம். குழந்தைகளை வெறுப்பவர்கள் உலகத்தில் உண்டா! அவர்களுடைய பரிதாபம் எங்கள் மனத்தை உருக்கியது. எல்லோருக்கும் தாயாயும் தந்தையாயும் இருந்து அனவரதமும் காப்பாற்றும் கர்த்தர்கள் இருக்கையில் நமக்கென்ன குறைவு? பரதேசிகள் நாமல்ல. நமக்குத் துணை பகவான் இருக்கிறான். அவன்தான் பரதேசி. அவனுக்கு மேல் யாரிருக்கிறார்கள்? உண்மைப்பரதேசி அப்பரம்பொருள்தான் அல்லவா?...

இந்த அற்புதமான உபமான வார்த்தைகளால் கிருஷ்ணனின் மனத்தில் ஆச்சரியமும் சந்தோஷமும் பூரித்தன. தேச சேவை செய்யும் வீரப்பெண்மணிகள் இத்தனை ஆழ்ந்த அபூர்வஞானத்துடன் விளங்குவதைக் காண கரைகடந்த வியப்பு உண்டாகியது.

அதே சமயம் அதிக ஆச்சரியத்தினால் தாக்கப்பட்ட பார்வதி வியப்பே வடிவாய் அந்த சேவகியை நோக்கி, "ஏம்மாமீ! அப்பிடீன்னா ஸ்வாமிக்கு அப்பா அம்மா யாரும் இல்லேன்னா சொல்றங்கோ! எங்க மன்னியம்மா எங்களுக்குக் கதை சொல்லி இருக்காளே!...கௌஸல்யாவும் தசரதரும் ஸ்ரீராமருக்கு அப்பா அம்மா வாச்சே! தேவகியும் வாஸுதேவரும் கிருஷ்ணனுக்கு அப்பா அம்மாவாச்சே! பார்வதியும் பரமசிவனும் சுப்பிரமண்யருக்கு

அப்பா அம்மாவாச்சே. அதெல்லாம் பொய்யா! எங்க மன்னியம்மா ரொம்ப நல்லவளாச்சே பொய்யே சொல்லமாட்டாளே!" என்று கள்ளங்கபடமற்று ஆழ்ந்த யோசனையுடனும், ஞாபகத்துடனும், மன்னியம்மாவின்மீது பிரியத்துடனும் கேட்பதைக் கண்ட சேவகிகளுக்கு சந்தோஷமாயும் ஆச்சரியமாயுமிருந்தது.

குழந்தையைச் சேர்த்து அணைத்துக்கொண்டு, "கண்ணு! ஒன் பேர் என்னம்மா!...நீ ரொம்ப கெட்டிக்காரியாயிருக்கியே...ஒங்க மன்னியம்மா சொன்னதுபொய்யே இல்லே. அவா அப்பா அம்மாவெல்லாம் செத்துப்போயிட்டா! அதனால் சொன்னேன். இப்ப சரிதானே" என்று குழந்தைக்கு ஒரு திடமான நம்பிக்கையையும், மனச்சாந்தியையும் உண்டாக்கிவிட்டாள்.

அதோடு குழந்தை சமாதானமாகிவிட்டாள். அடுத்த க்ஷணமே அவளுடைய கவனம் முற்றும் எதிரிலிருந்த ராட்டினத்தின் மீது சென்றதை யறிந்த சேவகி ஸரஸ்வதியை ராட்டினத்தின் அருகில் அழைத்துச்சென்று நூல் நூற்கக் கற்றுக்கொடுத்தாள். ஸரஸ்வதி தனக்கேதோ இந்திரப் பதவி கிட்டிவிட்டதுபோன்ற சந்தோஷத்துடன் வெகு ஆவலாயும் உத்ஸாகமாயும் சுற்றவாரம்பித்தாள்.

கிருஷ்ணனுக்கு இதோர் பெரும் மகிழ்ச்சியாகத் தோன்றியது. வாய்திறக்காத பதுமையைப்போல் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு சேவகிகள் இவ்விரு குழந்தைகளுக்கும் தலைக்கு மருந்து தடவிப் பின்னல் போட்டுவிட்டார்கள். தினம் காலையும் மாலையும் இங்கே வாருங்கள்; நாங்கள் தலைக்கு மருந்துபோட்டு சரிப்படுத்தி விடுகிறோம்...என்ன!...வருகிறீர்களா?" என்று கேட்டார்கள்.

குழந்தைகள் தகப்பனாரின் முகத்தைப் பார்த்தார்கள்...குழந்தைகளின் நோக்க மறிந்த கிருஷ்ணன், "கண்ணு! எப்படியாவது நீங்கள் சந்தோஷமாயிருந்தால் போதும். தினம் அழைத்து வரேன்" என்று உத்ஸாக மூட்டினான்.

சேவகி:—ஐயோ, பாவம்! குழந்தைகளின் ஆவலோ மலைபோலிருக்கிறது. சரியான முறையில் பழக்கினால் இவர்களே வருங் காலத்தில் பெரிய தேசசேவகிகளாயும் த்யாகிகளாயும் ஆவார்கள். அத்தனை சாமர்த்தியம் இவர்களிடம் இருக்கிறது. இவர்கள் என்ன செய்கிறார்கள். படிக்கிறார்களா?

கிருஷ்:—அம்மணீ! பெண்கள்திக்கற்ற குழந்தைகளை எதோ பொம்மையைப்போல் நான் வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய பள்ளிக்கூடத்தில்தான் படிக்கிறாள். ஆதரிப்பாரற்ற பிறகு எதுவும் சோபிக்காதல்லவா! குடத்திலிட்ட விளக்குபோலத் தானிருக்கிறது.

சேவகி :—குழந்தைகளை ஏதேனும் ஒரு வித்தியாலயத்தின் ஆதரவில் விடுவதுதானே! நல்ல பழக்க வழக்கம், படிப்பு முதலியன வருமே.

கிருஷ்ணன் :—அம்மணி! என் மனம் படும் வேதனையில் நான் ஒன்றுமே கவனிக்கவில்லை. தங்களைப்போன்ற பரோபகாரிகளின் தயவால்தான் ஏதேனும் செய்யவேண்டும். எனக்குள்ள மனோ நிலையில் நான் இன்னும் மூளை கலங்காதிருக்கிறேனே அதுவேதான் வியப்பாக விருக்கிறது.

சேவகி :—ஐயா! தங்களுக்குச் சம்மதமாகவிருப்பின், நம் பிக்கையிருப்பின் எங்கள் சேவா சங்கத்தில் குழந்தைகளைவிட்டால் நாங்கள் பழக்கி தேசத்தொண்டாற்றும் சிறந்த பணியில் தயார் செய்வோம். அதோ நூல் நூற்கும் குழந்தைகளெல்லாம் எங்கள் சேவாசங்கத்தின் ஆதரவில் வளரும் குழந்தைகள்தான். சிலருக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்கள். இந்த நல்ல பழக்கத்திற்காக இங்கு விட்டிருக்கிறார்கள். அவர்களின் போஷணைக்காக மாதா மாதம் ரூபாயும் அனுப்புகிறார்கள். சிலர் சங்கத்து ஆதரவிலேயே வளருகிறார்கள்—என்றாள்.

இதைக்கேட்ட கிருஷ்ணனுக்கு மனம் குழம்பிவிட்டது. குழந்தைகளின் விருத்திக்காகவும், நன்மைக்காகவும் விட்டுவிடலாமா என்று தோன்றுகிறது. அவர்கள் முகத்தில் தான் துக்கத்தை மறந்திருக்கிறபடியால் அவர்களைவிட்டு எவ்விதம் உயிர் வாழமுடியும்? ஒருபோதும் பிரிந்திருக்கவே முடியாது என்றும் நினைக்கிறான். "அம்மணி! நான் பிறகு யோசித்துச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுப் பின்னர் விடைபெற்றுக்கொண்டு குழந்தைகளுடன் வீட்டிற்கு வந்தான். குழந்தைகளுக்குத் தகப்பனாரைவிட்டுச் செல்ல மனமும் வரவில்லை. அங்கு போகவேண்டுமென்கிற ஆவலும் பலமாக இருந்தது. இதை அறிந்த கிருஷ்ணனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. வாத்தியார் வேலையை விட்டுவிட்டு திடீரென்று போகவும் முடியாதபடியே ஒப்பந்தமிருந்தது.

இந்த தத்தளிப்புடன் நாட்கள் சென்றுகொண்டே இருக்கின்றன. கிராமப்புனருத்தாரணத்திற்காக வந்திருந்த ஜனங்கள் தினம் காலையும் மாலையும் பஜனையும் பொதுக்கூட்டங்களும் நடத்தி ஒரு பெரிய புரட்சியை ஜனங்களிடையே உண்டாக்கிவிட்டார்கள். குழந்தைகளில் பெரும்பாலோருக்கு அந்த பஜனையில் உத்ஸாகமும் அவர்களையறியாத ஓர் உணர்ச்சியும் உண்டாகியதால் அவர்களையே சுற்றிக்கொண்டு அலைய ஆரம்பித்தார்கள்.

ஸரஸ்வதிக்கும் பார்வதிக்கும் இந்த பத்து தினங்கள் தவறாமல் மருந்து போட்டுத் தலைமயிரைக் கத்தரித்துவிட்டதால் சிறங்கும்

ஆறிப்போய்விட்டது. இது கண்ட கிருஷ்ணனின் உள்ளம் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் எல்லேயே இல்லே.

ஜனங்களுக்கு ஏதாவது ஒன்று அகப்பட்டால் போதாதா! கிருஷ்ணன் பிரதிதினம் முக்காலமும் ஆச்ரமத்திற்குச் செல்வதைப் பார்த்து சும்மா இருப்பார்களா! பரிசுத்தவதிகளான சேவகிகளுக்கும் கிருஷ்ணனுக்கும் விபரீதமான கயிறு திரித்து கிருஷ்ணனின் காதில் விழும்படியாய் ஆற்றங்கரையிலும், கோயிலிலும் பேசவாரம்பித்தார்கள்.

இதைக்கேட்ட கிருஷ்ணனின் இதயம் அப்படியே வெடித்து விடும்போலாகிவிட்டது. "அடடா! இதென்ன அநியாயப்பழி? தியாகபுத்தியுடன் தம்பதிசகிதமாக வந்து அபாரமான சேவை செய்யும் உத்தமிகளுக்கு மகா பாவியாகிய என்னால் இழுக்கான வார்த்தைகளா உண்டாவது? மூட ஜனங்களின் இந்த அக்கிரமமான பாணம் போன்ற வார்த்தைகள் அவர்களின் காதில் விழுந்தால் என்னவாகும்? அவர்கள் இதயம் என்ன துடிக்கும்?

ஒருவரோடொருவர் பேசுவதும், ஒரு இடத்திற்கு அடிக்கடி செல்வதுமா குற்றத்திலும் கொடிய குற்றம்? முழுபூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் ஒவ்வொருவரும் உள்ளுக்குள் நடக்கும் உண்மையான ஊழலே மறைத்துக்கொண்டு, குற்றமற்ற நிரபராதிகளேயா இம்மாதிரி வீணுகத் தூற்றிப் பேச முன்வந்துவிட்டார்கள்? சீச்சீ! என்ன கிராதக மனிதர்கள்? என்ன பிற்போக்கான புத்தி? என்ன அக்கிரம உலகம்? சேச்சே! இனி நம்மால் யாருக்கும் எந்த விதமான ஆபத்தோ, படாப்பழியோ வேண்டியதில்லே. இனி நாம் அந்தப்பக்கமே போகவேண்டாம். என்னுல் பிறருக்கு உபகாரமில்லே என்ருல் உபத்திரவமாவது இல்லாதிருக்குமானுல் அதுவே போதும்" என்று மனம் வெறுத்து இடிந்துபோய் உட்கார்ந்தான். உலகத்தின் கொடிய விஷமத்தனத்தை யறியாத பச்சிளங் குழந்தைகளுக்கு தன் தகப்பனரின் கஷ்டம் என்ன தெரியும்? பாழாப்போன ஜனங்களின் நிந்தனேச் சொல்லின் ஜ்வாலேயை எப்படி அறிய முடியும்? தகப்பனரின் முகவாட்டத்திலிருந்து, தங்களே ஆச்ரமத்திற்கு அனுப்பமாட்டாரென்று மட்டும் நன்கு தெரிந்துவிட்டது. வற்புறுத்திக்கேட்கவும் பயந்தார்கள். தகப்பனர் முகத்தைப் பார்ப்பதும் இருவரும் குசமசவென்று பேசுவதுமாக விருந்தார்கள்.

குழந்தைகளின் இதயபூர்வமான உணர்ச்சியை அறிந்த கிருஷ்ணனின் மனம் தவித்தது. "அளவில்லாத பாதகத்தைச் செய்துவிட்ட நான்தான் ஆயுள்பரியந்தம் கஷ்டப்பட்டுச் சாகவேண்டும். என் வயிற்றில் பிறந்த ஒரு பாவத்திற்காகக் குழந்தைகள் ஏன் கஷ்டப்படவேண்டும்? மரம்வைத்தவன் தண்ணீர் வார்க்கிருன். இவ்வுலகில் அவ்விரு ஜீவன்களேயும் பிறப்பித்தவன் கர்த்தனேயன்றி நான அவர்களுக்கு ஆதாரம்? இல்லே; இல்லே. நான் வெறும் கோபுரத்தின்

பொம்மை. அப்பொம்மை கோபுரத்தைத்தாங்கமுடியாது. அக்குழந்தைகள் ஆனந்தமாய் சந்தோஷமாய், சுதந்திரப் பறவைகளாய் அக் கூட்டத்தில் வாழட்டும். துன்பப்படும் கட்டை இங்கேயே துன்பப் பட்டுச் சாகட்டும். அவர்களாவது சந்தோஷமாயிருந்தால் அதுதான் என் பிறவியின் சார்த்தகம். என் சண்டாள வயிற்றில் பிறந்த அப் பச்சைக் குழந்தைகளுக்கு நான் இவ்வுபகாரத்தைக்கூடச் செய்யா விடில் நான் அவர்களுக்கு துரோகியாகவே ஆய்விடுவேன். குழந்தைகளின் ஆவல்படியே அவர்களை அனுப்பிவிடுவோம். பாரத மாதாவின் கருணை இருக்கிறது. தியாகமூர்த்திகளின் பாதுகாப்பு இருக்கிறது. சலனமற்ற சந்தோஷ மிருக்கிறது. தேசப் பணி செய்து இன்புறும் பெருமை இருக்கிறது. அவைகளைக் குழந்தைகள் அடையட்டும். சந்தோஷக் கடலாடட்டும். இப்பாவி முகத்தை விட்டு மறைந்திருக்கட்டும்'' என்று அபாரமான வைராக்யத்துடன் தீர்மானம் செய்துவிட்டான்.

குழந்தைகளிடம் இந்த விஷயத்தைத் தெரிவித்தவுடனே அவர் களிருக்கும் புதிய சந்தோஷத்தின் வேகத்தினால் தகப்பனுரைப் பிரியும் வருத்தங்கூட மறந்துவிட்டது. குதூகலமாக உடனே கிளம்பிவிட்டார்கள். அன்று செல்ல மறுநாள் சூர்யாஸ்தமனசமயம் உலகத்தையே தங்கமயமாகச் செய்துவிட்ட ஆதித்தன், அந்த இன் பத்தைக் கண்டு பெருமகிழ்ச்சியுடன் குளிர்ந்து நோக்குவதுபோல் உஷ்ணம் தணிந்து சிறுசிறுப்பான தோற்றத்துடன் பிரகாசித்தான்.

"பாரதமாதாவுக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே! வந்தேமாதரம்!'' என்கிற ஆனந்தகரமான கோஷத்துடன் சேவக சேவகிகள் அந்தக் கிராமத்தைவிட்டு வேறு கிராமத்திற்குப் பிரயாணமாகி ஆற்றங்கரையோடு பாடிக்கொண்டே நடந்து செல்லும் காக்ஷி தேசபக்தி என்ற உணர்ச்சியேயற்ற கட்டைகளுக்குக்கூட அவர் களையறியாத ஓர் இன்ப உணர்ச்சியும், கவர்ச்சியும் உண்டாக்கியது.

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதரவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்.

இத்தரை மீதினி லேயிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவரா மென்றிங் கூதேடா சங்கம்.

பொய்யுறு மாயையைப் பொய் யெனக்கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தி லெறிந்தே
ஐயுற வின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம்.

மையுறு வாள்விழி யாரையும் பொன்னையும்
மண்ணெனக் கொண்டு மயக்கற்றிருந்தாரே
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்களா மென்றிங் கூதேடா சங்கம்.

என்ற பாரதியாரின்'சங்கு'பாடலை அவர்களில் ஒருவர் முதல்பாடுவதும் அதன்பிறகு சந்தையாக மற்றவர்கள் பாடுவதுமாகச் செல்கிறார்கள். ஸரஸ்வதியும், பார்வதியும் தேவலோகப் பதவி கிடைத்தவர்கள்கூட அடையாத பேரானந்தத்தை யடைந்து பாடியபடியே சந்தோஷப் பதுமைகளாய், முகத்தில் புதிய தேஜஸுடனும், நகைப்பும் தாண்டவ மாட திரும்பித் திரும்பி தம் பிதாவைப் பார்த்துப் "போய்வரேன் போய்வரேன்" என்று கையால் ஜாடை செய்து தலையாட்டிய படியே நடந்து செல்லும் காக்ஷியைக் கண்டதும் கிருஷ்ணனின் உள்ளம் மதுவெறி பிடித்ததுபோலாயிற்று. குழந்தைகளின் சந்தோஷப் பிரயாணம் அவன் ஜன்மத்திற்கே சார்த்தகமாயும் அழியாப் பேரின்பமாயும் தோன்றி உணர்ச்சி வெள்ளமாகப் பொங்கி கண்ணீராக வழிந்தோட அவர்களைப் பார்த்துக்கொண்டே ஏரிக் கரைமீது நின்றான்.

முத்துக்கள் போன்ற குழந்தைகள் அவனையும் அந்த கிராமத்தையும் விட்டு மறைந்துகொண்டே இருக்கிறார்கள். முத்துப் போன்று கண்ணீர் உருண்டு உடைந்து கரைந்து மறைகின்றது. வானத்தில் சூரியனும் தன் முத்துப்போன்ற பல்வரிசைகளைக் காட்டிச் சிரித்து பலவித மலர்கள் கலந்த நந்தவனத்தில் பிரவேசிப்பதுபோல் மேற்திசையில் நுழைந்துவிட்டான். எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது. பக்ஷியினங்கள் மட்டும் ஆங்காங்கே கூவிப் பறந்தன. தேசத்யாகிகளின் கீத ஒலியும், நாத ஒலியும், காற்றுடன் கலந்து மறைந்தன; சூரியனும் மறைந்தான். உலகமும் இருண்டது; இதயமும் இருண்டது.

## 29

### பழிக்குப் பழி—பரமனின் விந்தை

இதயமும் இருண்டது. உலகமும் இருண்டது. சூரியனும் மறைந்தான். "மாட்டுக் கொட்டிலாகிய சிறைவாஸத்தை விட்டு ஆஸ்பத்திரி கட்டடத்தின் மேல்கூரையைப் பார்த்துக் கொண்டே படுத்திருக்கும் ஒரு சிறிய சுதந்திரம் கிடைத்திருப்பினும் என் மனத்தில் நிர்மலமான அமைதியும், சாந்தியும் ஏன் உண்டாக வில்லை? எனக்குக் கிடைத்தற்கரிய மனுஷியின் ஆதரவு கிடைத்தும்

என் மனம் இம்மாதிரி அந்தகாரத்தில் தத்தளிக்கவேண்டும் ? இதன் காரணம் தெரியவில்லையே ?" என்று தனக்குள் மதுரம் பலகாலும் எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுகிருள்.

க்ஷணத்திற் கொருதரம் பரதேசிக் குழந்தைகளின் பரிதாப பிம்பம் இவள் முன்பு தோன்றி இவளை வருத்துவது மட்டும் இவளால் தடுக்கவே முடியவில்லை. தன் பவிஷுக்கு ஆஸ்பத்திரி வைத்தியம் வேண்டாமென்று எத்தனைதரம் கூறியும் நாகலக்ஷ்மி அதைக் கேளாமல், சலடைக் கண்கள்போல் உளுத்துப்போன இந்த தேகத்திற்கு பூர்ண ஒய்வு மிகவும் அவசியம் என்றும், வீட்டிலிருந்தால் நீ சும்மா இருக்கமாட்டாய், ஏதாவது வேலை செய்வாய் என்றும், அதனல் ஆஸ்பத்திரியில் இருந்துதான் தீரவேண்டும் என்றும் கட்டாயப் படுத்திக் கொண்டுவிட்டாள்.

அவளுடைய ஆதரவிலிருப்பதால் தட்டமாட்டாது, சிவனே என்று படுத்திருந்தாள். சுமார் ஒரு மாதகாலம் ஆஸ்பத்திரியில், தர்ம வைத்தியமாயினும் பெரியமனுஷியின் மேற்பார்வையும் சிபார்சும் இருப்பதால் நன்ருகக்கவனித்துக்கொண்டார்கள். அநாமதேயமாக விருப்பின் அவளைச் சாக்கடைக்குச்சமீபம் தள்ளியே வைத்துத் தங்கள் அதிகார தோரணையைக் காட்டியிருப்பார்கள்.

ஒரு மாதம் சென்றபின் மதுரம் நல்ல திடத்துடன் வீட்டிற்கு வந்தாள். அன்றே, தன்னுடைய சமையல் தொழிலை ஏற்றுக்கொண்டாள். நாகலக்ஷ்மிக்கு மிகவும் அன்புடன், உண்மையான இதயத்துடன் சந்தோஷமாய் வேலைசெய்து வந்தாள்.

தன் மைத்துனனைப் பற்றிய தகவலே தெரியாததால் அது ஒரு புறம் வேலைசெய்துகொண்டே இருந்தது. அதைப்பற்றிக் கேட்க வேண்டுமென்கிற ஆவல் மட்டும் மனத்தில் பொங்கி எழுந்தது. ஆனல், கேட்டால் என்ன நினைத்துக்கொள்வார்களோ என்கிற பயத்தினல் பேசாமலிருந்துவிட்டாள்.

மாதங்கள் வெகு வேகமாக உருண்டுபோய், ஒரு வருடத்தைக் கடந்து சென்றன. அன்று சென்ற நடராஜன் பேச்சு மூச்சற்று வெகு மௌனமாக இருந்துவிட்டான். மதுரத்திற்கு நாகலக்ஷ்மி மாதம் 10 ரூபாய் சம்பளங்கொடுப்பதை ஒத்தைக்காசு கூடச் செலவு செய்யாமல் அப்படியே சேர்த்து வைத்ததில் 120 ரூபாய் ரொக்கமாகவிருந்தது.

உண்மையில் நாகலக்ஷ்மி மதுரத்தினிடம் அபாரமான பிரேமையுடன் அவளைத் தன் உடன்பிறந்த சகோதரியைப்போலவே எண்ணி நடத்திஞள். இருவருக்கும் மனம் ஒருமித்துவிட்டதால் தேனும் பாலும்போல் இருந்தார்கள்.

மதுரத்தின் மனத்தில் அப்பரதேசிக் குழந்தைகளின் நினைவு நாளைக்குநாள் பெருகிக்கொண்டே வந்தது. தன் கையை உழைத்துச்

சம்பாதித்த பணம் கையிலிருப்பதால் அதைக்கொண்டு அக் குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக்கொடுக்க ஆவல் தூண்டியது. இதே ஏக்கங்கொண்டு இராப்பகல் தூக்கம் பிடிக்காது வேதனைப்பட்டுப் புலம்புவதை நாகலக்ஷ்மி கவனித்தாள்.

நாக :—மதுரம்! நானும் பத்து நாட்களாகக் கவனிக்கிறேன். இரவு பகல் சதா புலம்புகிறாயே! ஏம்மா! இங்கிருப்பது பிடிக்கவில்லையா! வேலைத் தொந்திரவு அதிகமாயிருக்கிறதா!

மதுரம் :—(நாகலக்ஷ்மியின் கைகளைப் பிடித்துக்கொண்டு) ஐயையோ! மாமீ! அப்படி கனவிலும் நான் நினைக்கவில்லை. என்னுடைய மலைபோன்ற பாவத்திற்கிடையில் அணுவளவு புண்ணியம் செய்திருப்பதனால்தான் என்னைப் பெற்ற தாயாரைப் போன்ற உங்களை அடையும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். ஆனால்....

நாக :—என்னம்மா, ஆனால் என்று தயங்குகிறாய்? பயப்படாமல் சொல்லு. என்னாலாகியதை நான் செய்கிறேன்.

மது :—மாமீ! சொல்வதற்குப் பயந்துகொண்டுதான் இத்தனை நாள் பொறுத்தேன். நீங்கள் ஒன்றும் நினைக்கமாட்டீர்களென்று சொல்லுகிறேன். நான் எத்தனை சமாதானம் செய்தும் என் மனத்தை என்னால் அடக்கமுடியவில்லை. நான் முன்பு சொல்லியிருக்கிறேன் பாருங்கள். என் மைத்துனரின் பரதேசிக் குழந்தைகளைப்பற்றிய நினைவாகவே இருக்கிறது. இந்தப் பாழும் கபட உலகத்தின் மாயா மர்மம் தெரியாது அந்த உத்தமியின் பிராணன் போகும் நிலைமையில் நான் குழந்தைகளைக் காப்பதாக வாக்குக் கொடுத்து பிரமாணமும் செய்துவிட்டேன்.

ஆனால், என் பாவ ஜென்மத்தின் நிழல் அதை அடியோடு தடுத்து படுசூன்யமாக்கிவிட்டது. வருடக் கணக்காக நான் குழந்தைகளைப் பார்க்காதிருப்பது மிகவும் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது. ஒருமுறை அக் குழந்தைகளைக் கண்ணால் பார்த்து இந்த பணத்தில் அவர்களுக்கு ஏதாவது நகை செய்து போட வேண்டுமென்று ஆவலாயிருக்கிறது. அதற்கு மட்டும் நீங்கள் சற்று சகாயம் செய்தால் போதும். தினம் கனவில் என் ஓர்ப்படி என்னை ஏசுவது போன்ற தோற்றமே உண்டாகிறது. நினைத்தாலும் சங்கடமாயிருக்கிறது" என்று கூறும்போது மதுரத்தின் கண்களில் கண்ணீர் மடமடவென்று வந்துவிட்டது.

இதைக்கேட்ட நாகலக்ஷ்மி மதுரத்தைத் தட்டிக்கொடுத்தவாறு, "அடி பைத்தியமே! இதில் என்ன குற்றமிருக்கிறதென்று நீ இத்தனை நாள் என்னிடம் வெளியிடாமலிருந்தாய்? அப்போதே சொல்லியிருந்தால் நான் விசாரித்திருப்பேனே! இதற்கெல்லாம் பயப்படாதேம்மா! நானும் உங்க சின்னம்மாளைப்போன்ற பிற்போக்கான புத்தியுடையவளல்ல. இன்றே அதற்கான ஏற்பாடு

செய்கிறேன். வீண் கவலைப்படாதே!" என்று அன்புடன் தேற்றினாள்.

பின்னும் ஒரு வாரம் சென்றது. "மதுரம்! தகவல் கிடைத்தது. ஆனால், உனக்குச் சந்தோஷமில்லாத விஷயமாயிருக்கிறது. குழந்தைகளை வளர்க்கும் சக்தியில்லாது திண்டாடினானும் பாவம். தலை முழுதும் சிறங்கும் பேனும் நிரம்பிவிட்டதாம். குழந்தைகள் குச்சி போல் இளைத்துக் கருத்து உடம்பெல்லாம் சிறங்கு வந்து புழுத்து நெளிந்தார்களாம். தாங்கமாட்டாத விசனத்தினால் கிருஷ்ணனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போலாகிவிட்டதாம்.

யாருடைய சிபார்சினாலோ குழந்தைகளை ஏதோ ஆச்ரமத்தில் சேர்த்துவிட்டானும். குழந்தைகளைவிட்டுப் பிரிந்து சுமார் ஆறுமாத காலம் தவியாய்த்தவித்து கஷ்டப்பட்டானும். பிரிந்திருக்கவும் முடியவில்லையாம். குழந்தைகளோ வெகு சந்தோஷமாயும் ஆரோக்கியமாயும் இருக்கிறார்களாம். அதைக் கெடுக்கவும் மனம் வரவில்லையாம். இதே வேதனையில் தவித்ததை அதிகாரிகள் கண்டு சகிக்காமல் 4 மாதம் லீவு கொடுத்து எங்காவது யாத்திரை செய்து வரும்படியாக அனுப்பி இருக்கிறார்களாம். அவன் எங்கு சென்றிருக்கிறான் என்பது தெரியாதாம். அவன் வீட்டில் ஊரார் இருக்கிறார்களாம். குடும்பம் இத்தனை சீர்கேடாகச் சிதறிவிட்டதாம் பாவம்" என்று நாகலக்ஷ்மி சொல்வதைக் கேட்கக்கேட்க மதுரத்தின் இதயம் கொதித்தது. துக்கம் பொங்கிப் பொங்கி வந்தது. அடக்கமுடியாது கேவிக்கேவிக் கதறிவிட்டாள். பங்கஜத்தின் உருவம் தன்னைச் சபிப்பதுபோன்ற ஓர் வேகம்தோன்றி அவளைச் சித்திரவதை செய்துவிட்டது.

தான் அடிக்கடி நினைத்து உருகியதுபோலவே குழந்தைகளின் கதியும் ஆய்விட்டதைக்கேட்க அவளால் சகிக்கவே முடியாது போய்விட்டது. இனிமேல் என்ன செய்வது. எங்கு தேடமுடியும். தான் இருக்கும் நிலைமையில் இதைப்பற்றி நினைத்துத்தான் என்ன பலன்? குழந்தைகள் எந்த ஆச்ரமத்திலிருக்கிறார்கள் என்பதாவது தெரிந்தால், தான் போய் அவர்களைக் கண்ணால் பார்த்துவிட்டு வரலாம். அதற்கு தயவுசெய்து சற்று பிரயாசை எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொண்டாள். நாகலக்ஷ்மியும் இசைந்தாள்.

பின்னும் நாட்கள் மாதங்கள் உருண்டுகொண்டே சென்றன. நாகலக்ஷ்மியின் கணவர் உத்தியோக நிமித்தம் வெளியூர்களுக்குச் சென்று திரும்பிவந்தார். அவர் இயற்கையிலேயே மகா உத்தமராகையால் மதுரத்தைத் தன் சொந்த மனுஷிபோலவே நடத்தி அவளுடன் முக்யமான விஷயங்களில் பேசவும் பேசுவார்.

அன்று அவர் வந்த உடனே, "நாகூ! விஷயங்கள் எப்படி இருக்கின்றன பார்த்தாயா! கால தேவதையின் சோதனைதான்

என்ன விசித்திரமாயிருக்கிறது! 'தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்' என்று பட்டினத்தடிகள் பாடினுர். இந்த கலி முற்றிய காலத்திலும் அது கைம்மேல் உண்மையாகப் பலிக்கிறது.

நடராஜனைப் பற்றித் தகவலே தெரியவில்லை. தனக்குப் பெரும் பாரமாயிருந்த பெண் துலைந்தாள் என்று சந்தோஷத்துடன் எட்டியே பார்க்கவில்லை என்று நாம் நினைத்திருந்தோமே. விஷயம் விபரீதமாக முடிந்திருக்கிறது. சின்னம்மாளின் ஆணவத்தை எல்லாம் பகவான் அடக்கியும் அவள் கர்வம் மட்டும் இன்னும் அடங்கியதாகத் தெரிய வில்லை. கண்ணம்மாளின் கதியும் மதுரத்தைப்போலவே ஆய் விட்டதாம்...

என்று சொல்வதைக் கேட்டுக்கொண்டே இருந்த மதுரம் தீயை மிதித்தவள்போல் துள்ளி, "ஐயையோ! நிஜமாகவா...கண் ணம்மாளுக்கும் இக்கதியா?...ஐயோ!...என்ன அநியாயம்" என்று மிகவும் விசனத்துடன் துடித்துக் கூறினுள்.

"மதுரம்! ஐயோ பாவமென்று நமக்கு வயிற்றில் சங்கடந் தான் செய்கிறது. இருப்பினும் உடன்பிறந்த அண்ணன் கல்யா ணத்தை நீ கண்ணுல் பார்க்கக்கூடாதென்றும், எதிரிலும் தென் படக் கூடாதென்றும் கூறிய தணல்போன்ற வார்த்தை அவளையே எரிக்காமலிருக்குமா! இதற்குத்தான் யாரும் தலை துள்ளக்கூடாது என்றும், நாவடக்கமாகப் பேசி பகவானுக்கு அஞ்சி, பாப புண்ணி யத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும் பெரியவர்கள் கூறுகிருர்கள். அடுத்த வீட்டுக்காரன்மீது த்வேஷங்கொண்டு அதற்கு நாம் தீ வைத்தால் அதே தீ இந்த வீட்டையும் சேர்த்துத் தான் எரித்துவிடும் என்பதை உணரவேண்டாமா? அவளுடைய அக்கிரமச்செய்கைக்கும் அபாண்டப்பழிக்கும் இதுதான் தக்க தண்டனை என்று ஸ்வாமி செய்தார். இனிமேல் மொட்டைச்சி மொட்டைச்சி என்று வாய்கூசாது சொல்லுவாளா" என்று நாக லக்ஷ்மி ஆத்திரத்துடன் கூறினுள்.

இது கேட்ட அவள் புருஷன் பேசத்தொடங்கி, "நாகு! நீ சொல்வதுபோலவே அந்தக் கிராமத்து ஜனங்கள் அத்தனை பேரும் வயிறெரியக் கூறித் திட்டுகிருர்கள். இத்தனை பட்டும் அந்தப் பிரம்ம ராக்ஷஸிகள் இரண்டுபேருடைய கொழுப்பும் அடங்கவில்லை. "மது ரத்தின் வயிற்றெரிச்சல்தான் வெந்து வினையாகிவிட்டது" என்று இன்னும் மதுரத்தையே சாபமிடுகிருர்களாம்.

ஆனுல் அந்த பெண் மட்டும் மிகவும் புத்திசாலியாம். விவேகம் தெரிந்த பெண்ணும். "நீயும் பாட்டியும் அக்காவை செய்த வதைதான் இம்மாதிரியாயிற்று. மாதாபிதாக்களே மக்களுக்குச் சத்ரு என்ற பழமொழி எனக்குச் சரியாயிற்று. வீணுக அக்காவை செய்த வதையில் ஒரு பலன் கண்டது போதாதா! இன்னும் என் திட்டி

இன்னும் கேட்டை விலைக்கு வாங்குகிறீர்கள்?" என்று தாயாரைத் திட்டுகிறதாம். சாப்பிடுவதே இல்லையாம். விரக்தியால் எல்லா நகைகளையும் தானே அகற்றிவிட்டதாம். கழட்டவேண்டா மென்று தாயும் பாட்டியும் முட்டிக்கொண்டார்களாம்.

அதற்கந்த பெண் நன்ருகக் கேட்டாளாம். "அக்காவின் தலைமயிர் உங்கள் கண்களைக் குத்தி எரித்ததே. அதை எடுக்க நீங்கள் செய்த சாகஸத்தை பகவான் மறப்பானு! அப்பொழு திருந்த நிலைமை இப்போது எங்கே போயிற்று? அவளை எந்த பதத் தால் திட்டி வெறுத்தீர்களோ, அதுவேதான் இப்போது வந் திருக்கிறது. இப்போது மட்டும் ஏன் தடுக்கவேண்டும்? ஈச்வர னுக்கும் பயப்படாது செய்த செய்கையின் பலன் இது. பேசா மல் போங்கள்" என்று கூறி அந்த ராக்ஷஸிகளே வியக்கும்படித் தானே மதுரத்தைப்போல் சகலமும் செய்துவிட்டதாம்.

அப்பெண்ணைப்பற்றி ஊரே அப்படிக் கொண்டாடுகிறது. தாயும் கிழவியும் லபோ திபோ என்று அடித்துக்கொள்கிருர்களாம். ஏற்கெனவே கடன் உபத்திரவத்தில் கஷ்டப்படும் நடராஜனுக்கு இன்று இந்த துக்கமும் சேர்ந்ததால் உடனே மூளை கலங்கி பயித் தியம் பிடித்து விட்டதாம். வேலையும் போய்விட்டது. பைத்தி யத்தின் இம்சைக்காக ஊராரே அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி ஞர்களாம்.

நாகு! இரண்டு வருஷத்திற்குள் எத்தனை மாறுதல்கள், எத் தனை பழிக்குப் பழி வாங்கிய விநோதங்களைக் கண்ணுரக் காண் கிருேம் பார்த்தாயா! எப்போதும் வதை யாரையும்விடாது. இத் தனை கலவரத்திற்கும் மூத்தமகன் காதே கொடுக்கவில்லையாம். அவனை டில்லிக்கு மாற்றிவிட்ட பெருமையில் குசாலாகப் போய் விட்டானும். என்ன கல் நெஞ்சம்...சாப்பாட்டுக்கும் இல்லாமே குடும்பம் தவிக்கிறது.

சின்னம்மாளைச் சேர்ந்த மனிதர்கள் கண்ணம்மாளைப் படிக்க வைப்பதற்காக விதவா சங்கத்தில் சேர்த்து விடுவதற்குத் தூண்டு கிருர்களாம்; சின்னம்மாளும் இசைந்துவிட்டாளாம். ஆனுல் அந்தப் பெண் போக மறுக்கிறதாம்" என்று அவர் கூறும் வார்த்தை களைக் கேட்க மதுரத்தின் மனம் பாகாயுருகியது. தன்னை அவர்கள் அத்தனைக் கொடுமை செய்திருந்தபோதிலும் தான் மனதால்கூட ஒரு தீங்கு நினைத்ததில்லையே! ஐயோ! நான் செய்த பாவம் என்னை எரித்தது. அந்த பச்சைக் குழந்தையின் தலையில் ஏன் இத் தகைய இடி இடிக்கவேண்டும்? அப்பா பட்ட துன்பமெல்லாம் போதாமல் இம்மாதிரி பயித்தியமும் பிடித்துத் திண்டாடவேண் டுமா!" என்று கலங்கித் துடித்தாள். தன் பிராணன் போகாமல் இத்தனைத் துன்பத்தையும் சகித்துக்கொண்டிருக்கிறதே" என்று கதறினுள்.

நாகலக்ஷ்மி அவளைத் தேற்றிச் சமாதானம் செய்தாள். மதுரத்தின் நெஞ்சு சமாதானமே அடையவில்லை. தன் பிதாவைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் தடுக்கமுடியாமல் எழுந்தது. கண்ணம்மாளைத் தான் பார்க்கவேண்டுமென்று ஆவல் இருப்பினும் அவளைப் பார்க்கச் சென்றால் அவர்கள் தன் காலில் விழுந்து அடித்துக்கொள்வார்கள் என்கிற பயமும் கூடவே இருந்ததால் யோசனை உண்டாயிற்று.

"மாமீ! நீங்கள் இந்த இரண்டு வருஷமாக என்னையாதரித்து எனக்குக் கொடுத்துள்ள பணம் 250 ரூபாயிக்கு இருக்கிறது. ஐயோ பாவம்! அவர்கள் வயிற்றிற்கில்லாது என்ன இம்சைப் படுகிறார்களோ! இதையனுப்பி உதவிசெய்யலாமா வென்று சொல்லுங்கள். மனம் பதைக்கிறது" என்று புலம்பியவாறு கேட்டாள்.

இன்னாசெய் தாரை யொருத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்.

என்ற திருக்குறளின் வாக்யஸாரத்தை நாகலக்ஷ்மி நன்கு அறிவாளாதலால் மதுரத்தின் கபடற்ற சிந்தனைக்கு வியந்தாள். "மதுரம்! உன்னுடைய உத்தமமான குணத்திற்கு நான் மெச்சுகிறேன். எனினும் உன்னைவிட நான் உலகானுபவத்தில் முதிர்ந்தவளாகையினால் சொல்கிறேன். நீ பணத்தைக் கொடுத்து உதவி புரிய வரும் நல்ல எண்ணத்தை அந்த ராக்ஷஸிகள் நன்மையாக எடுக்காமல், அதை தீமையாகக்கொண்டு "என்றைக்கு கண்ணம்மாள் அறுக்கப்போகிறாள்? என்றைக்கு தகப்பனுக்குப் பயித்தியம் பிடிக்கப்போகிறதென்று காத்துக்கொண்டிருந்து உதவிபண்ண வந்துவிட்டாயோ! உன் கொள்ளித்தன உதவி எனக்கு வேண்டாம்" என்று முகத்திலடித்தாற்போல் சொல்லிவிட்டால் என்ன செய்வாய்? எதையும் யோசித்துச் செய்யம்மா! என்று ஹிதமாகக்கூறினாள்.

அதுவும் மதுரத்திற்கு நியாயமாகவே பட்டதால் "மாமீ! எனக்குத் தெரியாததால் உங்களைக் கேட்டேன். உம். எல்லாம் விதி. காலத்தின் கொடுமை" என்று வெறுப்புடன் கூறினாள். எத்தனை சமாதானம் செய்தும் மதுரத்தின் மனம் நிலையிலடங்கவில்லை. தகப்பனாரையாவது பார்க்கவேண்டுமென்று வெகுவாய்த்துடித்தாள். அது இலேசில் ஆகும் காரியமா?

மதுரத்தின் பரிதாபத்தைக் கண்டதும் நாகலக்ஷ்மி, தன் கணவனிடம் சொல்லி, ஆஸ்பத்திரியில் போய் பார்ப்பதற்கான ஏற்பாடு செய்வதாகக் கூறினாள். உலகம் காற்றினும் கடிய வேகத்துடன் சுற்றிவரும் ஆச்சரியத்தை என்ன சொல்வது? எல்லாம் ஈசனின் செயல். எல்லாம் அவன் மாயை.

## சித்தக் கலக்கம், சிதறிய உள்ளம்

"எல்லாம் அவன் மாயை; எல்லாம் ஈசனின் செயல். உலகம் காற்றினும் கடிய வேகத்துடன் சுற்றி வரும் ஆச்சரியத்தை என் சொல்வது? அவனன்றி ஓர் அணுவும் அசையாதல்லவா! ஆம்!...அதுதான்! அதுதான். விடாதே! பிடி பிடி... பிடிச்சுக்கோ!"....என்று கத்தினன் ஒருவன்.

"டேய்! அவனுவது, அணுவாவது, அதெல்லாம் சுத்த பொய்டா! அவன்தான் செத்துப்புட்டானே. அவன் இல்லவே இல்லையே! நம்மால்தாண்டா அணுவும் அசையுது. மலையும் ஆடுது. கடலும் கூவுது. ஆகாசத்திலே விளக்கு எரியுது. தெரிஞ்சுதா!...ஹஹ் ஹ்ஹா...என்று இன்னொருவன் சிரித்தான்.

அது இல்லேடா! அது இல்லே!...இப்போ பாட்டுக்கச்சேரி செய்யப்போறேன் தெரியுமா!...கரிஸா...மரிஸ....ஸஸஸஸஸஸ.... பபபபப...பா...அடெடெடெடெடெ. டுய்ய்ய்ய். தத்தரிகப்பா! தை தா! கோலாட்டா தை தா! சங்கரனே! சித்தாடே...ஹிஹிஹி. எப்படிடா கச்சேரி!...டேய். நான் கச்சேரி பாட்ரேன். நீ என்னமோ படுத்துகடக்கிரயேடா!...தோழர்களே! இதோ பாருங்க. ஒரு கவி...அற்புதமான கவி...

என் பள்ளிகொண்டீர் தாதாவே!...என்
பாட்டி நாதா!...நீர் என் பள்ளிகொண்டீர் தாதாவே!...

(பெருத்த சிரிப்பு)

தேம்பல் பூத்தசையும் பருவத தேகத்துடன்
அவதாரமாய் இரண்டு கட்டுக்கு மத்தியிலே. (என்)

மாசிலாத இந்த ஆசுபத்திரியில் வழிநடந்த இளைப்போ!
காசிலாமலே ஊசிகுத்திக்கொண்டு வீக்கங்கண்ட களைப்போ!
ஆசையாகப் பல நேசரோடுபேசி அகமகிழ்ந்த களிப்போ!
தோசைசுண்டல் வடைபாயசம் இல்லாத பசியின்கொடிய
[வதைப்போ?
பாடிக்களைத்தோ...வைத்தியனைத்தேடிப் பல்லிளித்தோ
வீடுவாசல் ஜன்னல் இடித்த வருத்தமோ!
துணியைக் கிழித்து பாயைப் புராண்டிய வருத்தமோ! (என்)

பேஷ்! பேஷ்...ஜவாசு! ஜவாசு...அடெய் திம்மா!...நல்லகதெ கட்டிட்டே...பலேஜோர் பலேஜோர். இன்னும் பாட்ரா! தாதா! தாதா! எ...தாதா!...எந்திரு" என்று படுத்திருக்கும் மனிதனை எல்லோருமாகச் சேர்த்துக் குலுக்கினர்கள்.

படுத்திருந்த மனிதன் அலறி யடித்துக்கொண்டு எழுந்து "ஐயையோ! ஐயையோ! கடன்காரன் வந்தூட்டானு! அடீ சின்னம்மா! அடீ மொட்டமுண்டே! ஏ கடன்காரா! அவா ரெண்டு பேரையும் புடிச்சு ஜெயில்லெ அடெ....மதுரம் மொட்டச்சீ, கண்ணம்மா மொட்டச்சீ! மாமியார் மொட்டச்சி....சின்னு மொட்டச்சீ!....நானும் மொட்டச்சி, நீயும் மொட்டச்சி...ஒலகத்தில் எல்லாம் மொட்டச்சி...மொட்டச்சி! மொட்டச்சி!" என்று பெரிதாகக் கதறிக்கொண்டே எழுந்து கூத்தாடிப் பாடக்கிளம்பினுன்.

பிறகு "டேய்! பசங்களா! கணக்குத் தப்பு...சரியா போடுடா! மொட்டச்சிகணக்கு போடாதேடா...நாறு மாம்பழம் ஒரு செட்டியார் மூணு ரூபாயிக்கு வாங்கினு ஒரு பழத்தின் விலை என்னடா!....உம்...சொல்லு"...என்று தன் தொழிலின் ஞாபகமாய் பசங்களை அடிப்பதுபோல் மற்றவர்களை அடிக்கவாரம்பித்தான்.

அப்புறம் கேட்கவேண்டுமா! ஒரே அழுகை, கூச்சல், அடிதடி அமர்க்களம். பெருத்த சந்தைக்கடைபோலாகிவிட்டது. உடனே ஆஸ்பத்திரியின் வார்டர் வந்து அந்த பைத்தியங்களுக்குத் தக்கபடி மிரட்டியும் அடித்தும், கத்தியை எடுத்துக் காட்டியும் சமாதானம் செய்தான். எல்லாம் கப்சிப்பென்று அடங்கிவிட்டன.

இம்மாதிரியான லீலைகளில் அழுகையும் சிரிப்பும் கூக்குரலும் இந்த இடத்தில் தினசரி சகஜமான விஷயமல்லவா! சில பயித்தியங்கள் பயமுறுத்தினுல் அடங்குவது; சில பைத்தியங்கள் எதற்கும் அடங்குவதில்லை. நடராஜனின் தலைவிதியால் அவன் இக்கதியாகிவிட்டபோதிலும் வார்டர் ஒரு அதட்டுப் போட்டால் அப்படியே நடுநடுங்கிவிடுவான். பிறருடைய குரல் கேட்டாலே பயந்து மூலையோடு மூலையாகப் பதுங்கிவிடுவான் பாவம்.

யாரைப் பார்த்தாலும் கடன்காரனு!...வாரண்டா! கண்ணம்மா ஆமண்டியான் செத்துப்பூட்டானு!...ஐயையோ! சின்னு! நன்னு அனுபவி...உம் கடன்காரன்வந்து ஒன்னெதான் புடிச்சுக்குவான். என்று சம்மந்தமில்லாது தாறுமாருக உளறிப் பயந்து அலறுவான்.

இதைக்கண்ட வார்டருக்கு மனம் உருகும். இப்படியே சுமார் ஒன்றரை வருடத்திற்குமேலாகியும் குணம் என்னமோ கொஞ்சமும் தெரியவில்லை. இப்படியே தவித்துக்கொண்டிருக்கையில் நாகலக்ஷ்மியின் புருஷனின் முயற்சியால் நடராஜனைப் பார்ப்பதற்கு அனுமதி கிடைத்தது.

நாகலக்ஷ்மியும் மிகுந்த ஸோஷல் லேடியாகையால் தன் புருஷனுடன் மதுரத்தை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்ருள். என்ன பரிதாபம் பாவம்! மதுரம் தன் தகப்பனுரைப் பார்த்ததும் உயிரே போய்விடும்போல் துடித்தாள். "அப்பா! அப்பா! இதென்ன கண்ருவி சோதனை? என்னைத் தெரிகிறதா! அப்பா!...இப்படி பாருங்

களேன்'' என்று மதுரம் கூவிக் கதறியழுவதை சித்தஸ்வாதீனமற்ற நடராஜன் எங்கு உணரப்போகிறுன் பாவம்!

அவன் வழக்கம்போல் 'கடன்காரனு! வாரண்டா!' என்று பயந்து நடுங்கி மூலையில் பதுங்கிக்கொண்டதைக் கண்ட நாகலக்ஷ்மி யின் கண்களில் நீர் ததும்பிவிட்டது. "மதுரம்! அழாதேம்மா! இவருக்கு மூளை கலக்கத்திற்குக் காரணம் கடன்தான் என்று நன்ருக விளங்கிவிட்டது பார்த்தாயா! படுபாவி சின்னம்மாள் இவர் குடியைக் கெடுக்கும் கோடாரிக்காம்பாய் வந்து சேர்ந்த தால் இவர் குடும்பமே சிதறிவிட்டது.

யாரைப் பார்த்தாலும் கடன்காரனு! வாரண்டா என்று கேட் கிருராம். படுபாவியை இளைய மனைவியாக மணந்து இவர் வாரிக் கொள்ளும் சுகம் இதுதான். புருஷனின் வருத்தமறியாது, வரு வாயிக்கு மிஞ்சிய செலவும், படாடோபமும் அட்டகாஸமும், விர லுக்குமேல் வீக்கம் என்பதுபோல் சக்திக்கு மீறிய ஜம்பமுமாக குடும்பம் நடத்தும் எந்த வீடும் உருப்படாது. அந்த புண்ணியவதி செய்த ஆடம்பர வாழ்க்கையின் கடன் இந்த மனிதனை எத்தனை தூரம் கொண்டுவிட்டது பாரு. ஐயோ பாவம்! பரிதாபம்! வயிற்றில் சங்கடம் செய்கிறது...சார்!...சார்!...இதோ பாருங்கள். உங்கள் அதிகாரி இன்ஸ்பெக்டர் வந்திருக்கிருர்...நாகலக்ஷ்மி வந்திருக் கிருளே! உங்களுக்குத் தெரிகிறதா! மதுரம் பாருங்கள். மதுரம் கூப்பிடுகிருளே! காதுகேட்கவில்லை?'' என்று கூறினுள்.

இதைக்கேட்ட நடராஜன் "ஹா...அதிகாரியா! இன்ஸ்பெக் டரா!...அடேய் பசங்களா! இன்ஸ்பெக்டர் வந்திருக்கிருர் சரியாய் பாடத்தைப் படியுங்கள்...உம்...சரியாய் கணக்குப் போடுங்கள்.... சரியான ச்ருதியில் பாடுங்கடா...செந்தமிழ் நாடென்னும் போதி னிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே...என்றுதானே பள் ளிக்கூடம் நடத்தும் ஞாபகத்தில் ஆரம்பித்துவிட்டார்.

கூடவிருக்கும் பயித்தியங்கள் "டே! டே! டே!...அது வானுண்டா! ஆசை முகம் மறந்துபோச்சே...சோறும் ரஸமும் ஆறிப்போச்சே...விடுதலை...விடுதலை...பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை...பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடு தலை...ஜெயபேரிகை கொட்டடா...கொட்டடா! கொட்டடா கொட்டடா! என்று பெரிய ஆரவாரம் செய்யக்கிளம்பிவிட்டார்கள்.

வார்டர் வந்து எல்லோரையும் அடக்குகிருன். அதற்கும் சிலர் அடங்கவில்லை. டேய்...நான் தான் கவிச் சக்ரவர்த்தி சுப்ர மண்ய பாரதியார்...நான் தான் மகாத்மா காந்தி! நான் தான் ஜவஹர்லால் நேருடா! நேரு...நான்தான் சரோஜினி தேவி''...என்று ஆளுக்கொரு தேசத் தலைவரின் பெயர்களைச் சொல்லிக் குதித்தார் கள். வார்டர் எல்லோரையும் அடித்து உள்ளே இழுத்துச்சென்ருன்.

நடராஜனுக்கு விவரமாகப் புரியவில்லை யெனினும் மதுரத்தைப் பார்த்ததும் அவள் பெயரைக் கேட்டதும்...மதுரம்...மதுரம்...நீ யாரு? என்ன மதுரம்...என் இப்பிடி அழறே...உலகம் உனக்குத் தெரியாதா? அழுவானேன்...எல்லாம் மாயம்...எல்லாம் கடன். எல்லாம் வாரண்டு...தெரிந்ததா...நாகலக்ஷ்மி...ஊம்...நாகலக்ஷ்மி. நாகம்-பாம்பு...பாம்பு லக்ஷ்மி, உம். பச்சைகளா எழுதுங்கடா என்றான்.

இந்தக் கண்றாவியைக் கண்டு சகிக்க முடியாது மதுரத்திற்கு மயக்கம் போட்டுவிடும்போலாகிவிட்டது. அப்பா! எங்கூட ஆத்துக்கு வரங்களா...நான் அழைத்துக்கொண்டு போறேன்'' என்றாள். நடராஜன் அலறியவாறு "ஐயையோ! ஐயையோ! மாட்டேன். மாட்டேன்...கடன்காரன் வாரண்டு...சின்னம்மா, தேளு, ருத்தி ராக்ஷப் பூனை பாம்பு, எல்லாம் என்னைப் பிடிச்சுடும்...மாட்டேன்! மாட்டேன்'' என்று கதறிக்கொண்டே உள்ளே ஓடி விட்டார்.

அதற்குமேல் என்ன செய்வாள் பாவம்! அவளால் பேசவே முடியவில்லை. நாகலக்ஷ்மிக்கும் பரிதாபம் சகிக்கக்கூடாதுபோயிற்று. "மதுரம்! இம்முறை இம்மட்டுடன் போவோம். மறுபடியும் இன்னொரு சமயம் வந்து பார்க்கலாம். அதற்குள் அவருக்கு சற்று குணமாகிவிடும் வாம்மா!...என்று தேற்றினாள்.

உத்யோகஸ்தரும் நாகலக்ஷ்மியும் அந்த ஆஸ்பத்திரியின் அதிகாரிகளிடம் சொல்லி அவரை ஸ்பெஷலாகக் கவனித்துக்கொள்ளும் படியும், அவரைப்பற்றி அடிக்கடி கடித மெழுதவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு பின்னர் வீட்டிற்கு வந்தார்கள். மதுரத்தின் மனம் கட்டுக் கடங்கவில்லை. "என்னவிதமாக தந்தையின் வியாதியைக்குணப்படுத்த முடியும். பகவான்தான் அருள்புரிய வேண்டும்'' என்று சதா பகவானை ப்ரார்த்தனை செய்துக் கண்ணீருடன் தத்தளித்தாள்.

மீண்டும் மாதங்கள் உருண்டுகொண்டே சென்றன. நான்கு மாதம் லீவில் சென்ற கிருஷ்ணனைப்பற்றிய தகவலே ஒன்றும் தெரியாதுபோனதால் பின்னும் நான்கு மாதங்கள் அதிகாரிகள் பார்த்துவிட்டு அந்த வேலையை வேறொருவருக்குக் கொடுத்துவிட்டதாக நாகலக்ஷ்மியின் புருஷனுக்குத் தகவல் தெரிந்தது. அதை யறிந்த மதுரத்தின் மனம் பின்னும் தவியாய்த் தவித்தது.

கடன்காரர்களின் தொல்லையாலும் மனைவியின் இம்சையினாலுமே இந்த மனிதனுக்கு மூளை கலங்கிவிட்டதென்றும், அதற்குப் பரிகாரமாய் கடன்காரர்களே, கடன் தீர்ந்துவிட்டதென்றும் இனி கவலை இல்லை என்றும் கடிதம் எழுதுவதுபோல் தினம் ஒரு கடிதம் எழுதிப்போட்டால் மூளை சரியாகிவிடும் என்று தோன்றுகிறது. அதோடு மனைவியும் செத்துவிட்டதாக ஒரு கடிதம்,

எழுதிப் பார்க்கலாம் என்று சிலர் தெரிவித்ததன்பேரில் நாகலக்ஷ்மி யின் புருஷனே அதற்கான வழியில் பலபேர்களின் கையெழுத்தில் தினம் ஒரு கடிதம் அனுப்பி வந்தார்.

நடராஜனே கடிதங்களைப் படிக்கும்படியாகச் செய்ததில் கொஞ்சங் கொஞ்சமாக மூளை தெளிவுபட வாரம்பித்தது கண்டு அதிகாரிகள் சந்தோஷப்பட்டார்கள். சின்னம்மாள் நடராஜனைப் பற்றி எந்தவிதமான கவலையும்படவே இல்லை. இதுகாறும் திமிரி லேயே காலத்தைக் கடத்திய தாயும் மகளும் பிழைப்புக்காக பட்டண வாஸத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

ருத்திராக்ஷப் பூனை ஒரு வீட்டில் சமையலுக்குச் சென்றாள். சின்னம்மாள் வீட்டிலேயே அப்பளமும், வத்தலும் இட்டு விற்க வாரம்பித்தாள். 10 வயதுள்ள பையனை காப்பி ஓட்டலில் வேலைக்கு விட்டாள். 8 வயது பையனை ஒரு ஜவுளிக்கடையில் மூட்டை தூக் கும் வேலையில் விட்டாள். இந்த அலங்கோலம் யாருக்கும் தெரியக் கூடாதென்ற பரமரகஸியம் வேறு கொண்டாடினார்கள்.

கண்ணம்மாளுக்கு மட்டும் மதுரத்தைப் பார்க்க ஆசை துடித் தது. ஆனால் அதை வெளியிடவும் பயந்தாள். தன் தாயாரின் கிராதகச் செய்கையினால்தான் தகப்பனாரின் கதி இம்மாதிரியாகி விட்டதென்று கண்ணம்மாளுக்கு நன்றாகத் தெரியும். தாயாரைத் திட்டிக்கொண்டே இருந்தாள். கண்ணம்மாள் மட்டும் எப்படியோ மதுரம் இருக்கும் விலாசத்தைத் தெரிந்துகொண்டு தன் தாயாருக்குத் தெரியாமல் ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டாள். தனக்கு மது ரத்தினிடமிருந்து பதில் வருமா! மதுரத்திற்குத் தன் தாயாரும் பாட் டியும் செய்த கொடுமைக்காக மனம் வருந்தி அவள் பேசாதிருந்து விடுவாளோ! எதற்கும் பார்த்துவிடுவோம் என்ற எதிர்பார்ப்பில் அவளுடைய மெல்லிய தளிர் போன்ற இதயத்தில் ஒரு புதிய உணர்ச்சி நிரம்பியது. அவளை யறியாத பரபரப்பும் ஆவலும் இன்ப மும் துன்பமும் மாறி மாறி உண்டாயின.

---

## 31

### அதிசயத்தின்மேல் அதிசயம்

அவளையறியாத பரபரப்பும் ஆவலும் இன்பமும் துன்பமும் மாறி மாறி உண்டாயின. அவளுடைய மெல்லிய தளிர்போன்ற இதயத்தில் ஒரு புதிய உணர்ச்சி நிரம்பியது. "இன்றுவது நல்ல கடிதம் வருமா!...என் என்றைக்குமில்லாத விதம் இன்று மனம் இத்தகைய பூரிப்பை அடைகிறது? இது நன்மைக்கோ, தீமைக்கோ தெரியவில்லையே! இது சுகாநுபவமா! துக்காநுபவமா! ஒன்றுமே

புரியவில்லையே!'' என்று மதுரம் தனக்குள் நினைத்துக்கொண்டிருந்த ்மயம் நாகலக்ஷ்மி மதுரத்தைக் கூப்பிட்டாள்.

மதுரம் வணக்கத்துடன் சென்று நின்றாள். "மதுரம்! உனக்கோர் அதிசயமான கடிதம் வந்திருக்கிறது. உன் அனுமதியின்றியே நான் படித்துவிட்டேன். இதோ! இதைப் படித்துப்பார்'' என்று கூறிக்கொண்டே கொடுத்தாள். மதுரத்திற்கு ஒன்றுமே புரியவில்லையாதலால் "மாமீ! நீங்களே படித்துவிடுங்கள். எனக்கு என்னமோபோலிருக்கிறது'' என்றாள். உடனே நாகலக்ஷ்மி கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"என் அருமை அக்காவுக்கு கண்ணம்மாள் அனேக நமஸ்காரம். நமக்குள் க்ஷேமங்களே தேவை இல்லையாதலால் நான் அந்தப் பகுதிகளை விட்டுவிடுவது சகஜமல்லவா? அக்கா! வாயிலுள்ள ஒரு நல்ல பல்லை வேண்டுமென்று ஆட்டியசைத்து இம்சித்துப் பிடுங்கினால் அந்த அதிர்ச்சியால் அந்தப் பல்லுக்கு இருப்பக்கத்துப் பற்களும் ஆட்டங் கண்டு சீயும், வீக்கமும் நோக்காடும் உண்டாகி தாமே உளுத்துவிடுமல்லவா!

அதைப்போலத்தான் இப்போது நம் குடும்பமிருக்கிறது. உன்னைச் செய்த வதைக்கு உனக்குப் பக்கத்திலுள்ள நானும் அப்பாவும் இறையாகிவிட்டோம். ஆனால் இன்னும் அம்மாவுக்கு கொஞ்சங்கூட புத்தியேவரவில்லை. செய்த பாவமெல்லாம் போதாமல் இன்னமும் பாபத்தைத் தேடிக்கொள்கிறாள். நீ உன் எஜமானியம்மாளின் உதவியால் அப்பாவைப் பார்த்துவந்ததாகக் கேள்விப்பட்டேன். கட்டிய மனைவியாகிய என் தாயார் அப்பாவை மனத்தாலும் நினைப்பதில்லை. அவளாலேயேதான் அப்பாவுக்கு இந்தக் கதி வந்தது என்பதை அந்த புண்ணியவதியின் வயிற்றில் பிறந்த எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தென்ன செய்வது? பயித்தியத்தின் மனைவி என்று சொல்லிக்கொள்ள வெட்கமாம். எங்கேயோ யாத்திரை போய்விட்டதாக இப்பவும் சொல்லிக்கொள்கிறாள். இந்த வயிற்றெரிச்சலை சகிக்கவே முடியவில்லை.

உன்னை அதிகாரம் செய்து மகாராணிபோன்று உட்கார்ந்திருந்த அம்மாவும் பாட்டியும் இப்போது நல்ல உழவுமாடுபோலாய்விட்டார்கள். உன்னைப்பற்றி நான் சொல்வதெல்லாம் வெறும் வேஷமாகத் தோன்றலாம். உண்மையில் இங்குள்ள நிலைமையினும் நீ வராதிருந்ததை நான் கோபிக்கவே இல்லை. நீ வந்திருந்தால் அம்மாவும் பாட்டியும் உனக்கு இதுகாறும் செய்த அர்ச்சனைபோதா

மல் இன்னமும் செய்திருப்பார்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும்.

இருப்பினும் உன்னைப் பார்க்கவேண்டும்போல் வெகு ஆவலாக இருக்கிறது. நான் அப்போதெல்லாம் உலகம் தெரியாத சிறுமியாகவிருந்துவிட்டேன். இப்போதுதான் எனக்குச் சகலமும் தெரிகிறது. நீ எப்படியாவது பெரிய மனது செய்து ஒருமுறை வந்துபோனுல் நம்முடைய பிற்கால வாழ்க்கைக்கு என்ன மார்க்கம் தேடலாம் என்பதை முடிவுசெய்யலாம். என்னைப் பெற்ற தாயாயினும், பாட்டியாயினும் எனக்கு அவர்களுடைய சகவாஸமே பிடிக்கவில்லை.

உன்னை வதைத்து உபத்திரவம் செய்த அதே மனிதர்கள் என்னைப் படிக்கும்படியும் விதவாசங்கத்தில் சேரும்படியும் மறுவிவாகம் செய்து கொடுக்கவும் தயாராயிருப்பதாயும் கூறி வற்புறுத்துகிருர்கள். அக்கா! என்னே கலிகாலவிந்தை! பிறர் சருக்கி விழுந்தால் கைகொட்டிச் சிரிப்பது. தானே விழும்போதுதானே சுளுக்கிக்கொண்டதும் கால், கை, மண்டை முதலியன உடைந்ததின் நோயும் தெரிகிறது.

எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. உன்னுடைய எஜமானியம்மாளுடைய யோசனையையும் உன் யோசனையையும் நான் வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அம்மாவின் தரித்திர நிலைமையோ சொல்லமுடியவில்லை. கேவலம் சிறிய பெண்ணுகிய நான் என்னதான் செய்ய முடியும். அப்பாவைப் பற்றிய தகவலோ எனக்கு ஒன்றுமேதெரியவில்லை. நீ ஏதாவது அறிந்தால் தயவு செய்து தெரிவி. எனக்கு மனத்தில் பொங்கி எழும் ஆவலில் ஏதேதோ கோணுமாணு எழுதுகிறேன். குற்றமிருப்பின் மன்னித்துக்கொண்டு ஒருதரம் வந்து போனுல் நான் இத்தனை துக்கத்துக்கு மத்தியில் சற்று சந்தோஷப்படுவேன். என்னையும் என் தாயாரைப்போன்ற அன்பற்றக் கட்டை என்று நினைக்காதே....

அக்கா! இன்னெரு விஷயம்....உன்னுடைய பணத்தையும் நகைகளையும் எக்கதியாக்கினுர்களோ, அதே கதியைத்தான் இப்போது உன் தங்கையுடையதும் அடைந்துவிட்டது. ஏதோ எழுதினேன் என்று அலக்ஷயம் செய்யாது, கட்டாயம் வரவும்.

இங்ஙனம்,

உன்னை மறவாத தங்கை

**கண்ணம்மாள்**"

என்பதைப் படித்துக் கேட்ட மதுரத்தின் கண்ணீர் ஆருய்ப் ருகியது. அதற்கு என்ன பதில் சொல்வதென்றும் தெரியவில்லை. மாமீ! இதற்கு என்ன செய்வது, நீங்கள்தான் என்னைப் பெற்ற தாயார். நீங்கள்தான் ஒரு யோசனை சொல்லவேண்டும்" என்று பரி தாபமாய்க் கேட்டாள்.

நாகலக்ஷ்மி :—மதுரம்! புலம்பாதேம்மா! காலச்சக்கரம் ஒரே மாதிரியாகச் சுற்றுது. நானே உன்னை யழைத்துக்கொண்டு போகி றேன். என்னதான் நடக்கிறது பார்க்கலாம்....இதோ இன்னொரு கடிதம் பாரு. இது மாமாவின் பேருக்கு வந்திருக்கிறது. அதையும் சொல்கிறேன். இங்கிருந்து எழுதிய கடிதங்களால் உன் தகப்ப ஞருக்கு நன்ருக குணமாகிக்கொண்டு வருகிறதாம். இப்போ திருக்கும் நிலைமையில் சீக்கிரத்தில் நல்ல குணம் காணலாம் என்றும் எழுதி இருக்கிருர். இது எத்தனை சந்தோஷமான விஷயம் பார்த் தாயா!—என்றதைக் கேட்டதும் மதுரத்தின் சந்தோஷம் உச்சத்தை எட்டியது.

நாகலக்ஷ்மியின் கைகளை சேர்த்துப் பிடித்துக்கொண்டு, "மாமீ! மாமீ! உங்களைப் போன்ற நல்லவர்கள் உலகத்திலேயே இருக்க மாட்டார்கள். உங்களால்தான் மழை பெய்கிறது. உங்களால்தான் உலகத்தில் க்ஷேமம் நிலைக்கிறது. நீங்கள் அன்று எனக்கு ஆறுத லளிக்கவில்லை என்ருல் என் பிராணன் அன்றே அதோகதியாகிப் போயிருக்கவேண்டும். நான் எப்படிதான் உங்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன் என்று கூறவே திறமில்லை" என்று குழந்தையைப் போல் கூறி குதித்தாள்.

நாக :—மதுரம்! உலகம் போகும் போக்கைப் பார்த்தாயா! உன்னை செய்த சித்திரவதை என்ன! அதே மனுஷி இப்போது பெண்ணுக்கு விதவா விவாகமும் செய்யத் துணிந்த விந்தை என்ன? மாறுதல்களின் விநோதம் நிமிடத்திற்கு நிமிடம் ஆச்சரியமாயிருக் கிறதல்லவா?

மது :—மாமீ! நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லையல்லவா! கரடுமுரடான வழியில் முதலில் நடப்பவர்கள் முள்ளும், கல்லும் பொத்தி இம்சைப்பட்டால் பிறகுள்ளவர்களுக்கு நல்ல பாதையாக ஆகிவிடுமல்லவா! அதேபோல் பட்டதுன்பமெல்லாம் மகா பாவி யாகிய என்னோடு முடியட்டும். அந்தப் பச்சைக் குழந்தைக்காவது கண்ணைத் திறந்துவிட்டு அடிமை இருளினின்றும் விடுபடச் செய் தால்போதும். எனக்குக் கொள்ளித்தனமே இல்லைமாமி!—என்ருள்.

அச்சமயம் வீதியில் ஸ்ரீராமநவமியின் நிமித்தம் ஸாதுக்களின் கூட்டம் பஜனை செய்துகொண்டு வந்தார்கள். "ரகுபதிராகவ ராஜா ராம்! பதீதபாவன ஸீதாராம்!" என்ற ராமநாமாவளியைப் பாடி

பக்திப் பெருக்குடன் செல்லும் கோஷ்டியை நாகலக்ஷ்மியும் ப மும் சேவித்து உண்டியில் பணம் போட்டார்கள்.

தற்செயலாக மதுரம் பஜனைகோஷ்டியைக் கவனிக்கையில் அப்படியே திடுக்கிட்டு நடுங்கினாள். உஞ்சவிருத்தி ஸ்வாமிகளைப் போல் தலையில் துணியைக் கட்டிக்கொண்டு தாளத்தைத் தட்டிக் கொண்டு நிற்கும் கிருஷ்ணனைக் கண்டதும், "என்ன! மைத்துனர் கிருஷ்ணனல்லவா இவர்!....கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று நாகத்தை மிதித்தவள்போல் நின்றாள். அதேபோல் கிருஷ்ணனும் மதுரத்தைக் கண்டதும் வியப்பும் திகைப்பும் அடைந்து "மன்னீ!"....என்று கூறிக்கொண்டே அவள் காலில் நெடுஞ்சாங்கடையாக விழுந்து நமஸ்கரித்தான்.

இந்த அற்புதமான காக்ஷி எல்லோருக்கும் பேராச்சரியமாயும் ஒன்றுமே விளங்காத வியப்பாயும் இருந்தது. பிரமித்து நின்றார்கள். ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். வியப்புக்கடலாடினார்கள்.

183041
சென்னை 600 008

பணம், பணம் என்று பறக்காதீர்கள். நல்ல மார்க்கத்தில் நல்ல எண்ணத்துடன் கடவுளை நம்பி இருந்தால், அக்கடவுள் தாமே பணத்தையுங் கொடுத்து நல்ல உயர் பதவியையுங் கொடுத்து ஆதரிப்பார். யாரையும் உதாசீனம் செய்தோ, ஏளனமாகப் பேசியோ மனத்தை நோக வைக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அது கைம்மேல் பலனைக் கொடுத்துவிடும்.

என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள

மாதவமணி

புதிய பதிப்பு. அணா 4.

# பரிசுகளின் விவரம்

40-ம்௵ ஏப்ரல்௴ 25-ந் தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்ட கருப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்ள தொகையை தபாற்செலவுக்காக மணியார்டர் செய்து, தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| ந. | ரூ. | சந்தா ந. | விலாசம். | போஸ்டேஜ். ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| 1. | 20 | எஸ்.1210 | சே. எஸ். ஸெல்லைய்ய நாயுடு, டீ கடை, ஷனிவகியி ஸ்டேஷன், நவுங்க்பட்டியா. (பெகு., பர்மா.) | 2 | 11 |
| 2. | 15 | எம். 765 | முருகேசன், ஸாப்பர் ந. 17161., ந. 9, பீல்ட் கம்பெனி, வாணு. (எல்லைப்புர மாகாணம்.) | 2 | 0 |
| 3. | 10 | ஆர். 920 | ஆர். ராதாகிருஷ்ணன், ஹை கமிஷனர்ஸ் ஆபீஸ், சிங்கப்பூர். (மலேயா.) | 2 | 1 |
| 4. | 5 | ஏ. 584 | கே.டி.எம்.எஸ்.அப்துல்காதர்சாஹேப், வைரவியாபாரம், மலிபான்தெரு,பேட்டா, கொழும்பு.(ஸிலோன்) | 0 | 13 |
| 5. | 5 | டி. 147 | ஸ்ரீமதி தங்கம்மாள், தியாகராஜா மெடிகல் ஹால், 14, ஸரோஜினி தெரு, தியாகராயநகர். சென்னை.) | 0 | 13 |
| 6. | 5 | வி. 177 | சந்திரஹாஸம் பிள்ளை, போஸ்ட்மேன், பூதநதம், மணப்பாரை மார்க்கம். (திருச்சி ஜில்லா.) | 0 | 13 |

## ஜூன் 25-ந் தேதிக்குள்

சேரும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு மேற்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்.

## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணு விலையுள்ள நாவல்களை இனுமாகக் கொடுப்பதுடன் உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு உள்நாட்டினர் 1 அணுவும், வெளிநாட்டினர் $1\frac{1}{2}$ அணுவும் தபாற் செலவுக்காகச் சேர்த்தனுப்பவும்.

மானேஜர்.

குறைந்த விலை

## அரிய சந்தர்ப்பம்

கொஞ்சம் பிரதிகள்தான்

அடியிற் கண்ட நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால், வேண்டிய அன்பர்கள் உடனே முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

| | | சஞ்சிகை விலை. | தனிநாவல் விலை. |
|---|---|---|---|
| ஜீவியச் சுழல் | ரூ. | 0 10 | 1 4 |
| கானல் நீர் | | 0 10 | 1 4 |
| சந்திரமண்டலம் | | 0 8 | 1 0 |
| நளினசேகரன் | | 0 4 | 0 8 |

| | | சஞ்சிகை விலை. | தனிநாவல் விலை. |
|---|---|---|---|
| ஆனந்தஸாகர் | ரூ. | 0 4 | 0 8 |
| மாலதி | | 0 4 | 0 8 |
| படகோட்டி | | 0 4 | 0 8 |

"…ANMOHINI" Vol. XVII No. 5. Regd. No. M. 2210.


# தலைவலிக்கு






ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும் விலக்குங்கள்

**அம்ருதாஞ்சனை**

**உபயோகியுங்கள்**

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது

**அம்ருதாஞ்சன் லிமிடெட்.,**

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & P…lis…d by V. M. Parthasarathy
"Jaganmohini" … Triplicane, Mad…